# நேர்காணல்

(இது ஒரு சிற்றிதழ் மட்டுமே)

இதழ் - 4 2011 அக்டோபர் – டிசம்பர்



நேர்காணல் : வெ. ஸ்ரீராம்

சந்திப்பு : பவுத்த அய்யனார்

## உள்ளே

T.K. கோபாலன்

ஜி. குப்புசாமி

ந. முருகேசபாண்டியன்

ஃப்ரான்ஸ்வா குரோ

ப. சேரலாதன்

எஸ். ராமகிருஷ்ணன்

அஜயன்பாலா

யூகி சேது

ஆசிரியர்
பவுத்த அய்யனார்
ayyapillai@gmail.com

நிர்வாக ஆசிரியர்
முத்துமீனாள்
mul.muthumeenal@gmail.com

வெளியீடு :
மீனாள் பப்ளிஷிங் ஹவுஸ்
3/363, பஜனை கோவில் தெரு,
கேளம்பாக்கம்,
சென்னை - 603 103.
செல்: 96880 86641.

தனி இதழ் ரூ. 50

அட்டை வடிவமைப்பு மற்றும்
இதழ் வடிவமைப்பு :
வள்ளி பிரிண்டர்ஸ்,
திருக்கோவிலூர்.
செல்: 9047642941

நேர்காணல் இதழின் வளர்ச்சிக்கு உதவ விரும்புபவர்கள் இந்த வங்கிக் கணக்கைப் பயன்படுத்தலாம்.
Meenal Publishing House
Indian Overseas Bank
Kelampakkam Branch
A/c. No. 186002000000023

நேர்காணல் இதழ் 2, 3 இதழ்களின் நூல் வடிவத்துடன்
www. vallinam.com.my
(எண் 27, 28) இணைய இதழில் படிக்க முடியும்.

நன்றி :
திரு. சுகுமாரன், லலிதா ஜுவல்லரி
திரு. SPK. சிதம்பரம், சென்னை
வழக்கறிஞர். திரு. G.R. சுவாமிநாதன்
திரு. K. துளசிதாஸ், திருச்சி.

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# இது தலையங்கம் அல்ல...

*வெ. ஸ்ரீராம் அவர்கள் மொழிபெயர்த்து வெளிவந்துள்ள பிரெஞ்சுப் படைப்புகளால் பாதிப்படையாத தமிழ்ப் படைப்பாளிகள் உண்டா? என்றால், இல்லை என்றே சொல்லலாம். மேலும், அவை தமிழ் நவீன இலக்கிய வாசகர்களின் ஆதரவையும் பெற்றவை. ஸ்ரீராம் மொழிபெயர்த்துள்ளவை எல்லாம் க்ரியா பதிப்பகம் மூலம் மட்டுமே மிகத் தரமான பதிப்புக்களாக வெளிவந்துள்ளன.*

*தரமான தமிழ்ப்படைப்பாளிகளுக்கு தமிழ்ச் சமூகம் கொடுத்துவரும் மதிப்பும் பெருமையும் மிகமிகக் குறைவு. எழுத்து மூலம் கிடைக்கும் பண வரவும் சொல்லிக் கொள்ளும் படியானவை கிடையாது. பெரும்பாலும், பொருளாதாரத் தேவைக்கு வேறு பணி செய்துகொண்டுதான் எழுதுவதை வாழ்வுடன் பிரிக்க முடியாததாக நினைத்து செயல்பட்டு வருகிறார்கள். இப்படியான ஒருசூழலில் மொழிபெயர்ப்பு மட்டுமே செய்து வருபவர்களின் நிலைமையைச் சொல்ல வேண்டியதில்லை.*

*பிற நாட்டு இலக்கியங்கள் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வந்தவைகளே அதிகம். க.நா.சு. தொடங்கி நூற்றுக்கணக்கானவர்கள் அர்ப்பணிப்புடன் இன்றுவரை செய்து வருகிறார்கள். வெ. ஸ்ரீராம் பிரெஞ்சு மொழியிலிருந்து நேரடியாகத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்து வருகிறார். இவரின் பணியைப் பாராட்டி பிரெஞ்சு அரசாங்கம் இரண்டு செவாலியே விருதுகளைக் கொடுத்து கௌரவித்துள்ளது. 80களின் தொடக்கத்தில் கவிஞர். அபி அவர்கள் மேலூர் அரசுக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். நவீன இலக்கிய நூல்களைத் தொடர்ந்து எனக்கு அறிமுகப்படுத்தி வந்தார். அப்போதுதான் வெ. ஸ்ரீராம் மொழிபெயர்த்த ஆல்பெர் காம்யுவின் “அந்நியன்” மற்றும் “குட்டி இளவரசன்” படிக்கக் கொடுத்தார். மனதில் பெரும் அதிர்வுகளை உருவாக்கிய நூல்கள் அவை. அப்போதிலிருந்து இன்றுவரை வெ. ஸ்ரீராம் மொழிபெயர்ப்பு நூல்களைத் தொடர்ந்து படித்து வருகிறேன். வெ. ஸ்ரீராம் அவர்களின் பணிக்கு ஒரு வாசகனின் காணிக்கையே இந்த நேர்காணல் இதழ்.*

*ரஷ்யாவிலிருந்து இலக்கியங்கள் மட்டுமல்லாது அரசியல், பொருளாதார அறிவியல் நூல்களும் தமிழில் மொழிபெயர்த்து வெளிவந்த காலக்கட்டம் மிக முக்கியமானது. சாதனையாக 100 நூல்களுக்கு மேல் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளவர் பேராசிரியர். நா. தர்மராஜன். ‘உலகக் கவிதைகள்’ மற்றும் பல நூல்கள் மூலம் பிரம்மராஜன் செய்திருக்கும் பணி மகத்தானது. தமிழ்ப் படைப்பாளிகள் தங்கள் சொந்தப்படைப்புக்களுடன் மொழிபெயர்ப்பையும் செய்வது இன்றுவரை தொடர்ந்து வருவது. தமிழின் முக்கியப் படைப்பாளிகளான க.நா.சு., சுந்தர ராமசாமி, ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், பாவண்ணன், கவிஞர். சுகுமாரன், சாருநிவேதிதா, யூமாவாசுகி போன்றவர்களின் பங்களிப்பும் மொழிபெயர்ப்புத் துறையில் முக்கியமானவை. சரஸ்வதி ராம்நாத், இந்திரன், ஜி. குப்புசாமி, நிர்மால்யா, தி.சு. சதாசிவம், அமரந்தா, ஆர். சிவக்குமார், ராமாநுஜம், ஏ.வி. தனுஷ்கோடி, நஞ்சுண்டன், கே.வி. ஷைலஜா, ரவிக்குமார், குளச்சல் மு. யூசுப் இப்படிப் பல பெயர்கள் மனதில் வருகிறது. இன்னும் எத்தனையோ பெயர்களையும் சொல்லலாம். எஸ்.வி. ராஜதுரை மற்றும் வ. கீதா ஆகியோரின் மொழிபெயர்ப்பால் தமிழுக்குக் கிடைத்துள்ளவைகள் பெறும் பொக்கிஷங்கள். விடியல் பதிப்பகம், பாரதி புத்தகாலயம், தமிழினி, காலச்சுவடு இது போன்ற பதிப்பகங்களின் பணியும் போற்றத்தக்கது. இதில் ஈழத்தமிழர்களின் பங்களிப்பும் மிக முக்கியமானது.*


*பாகுபாடு இல்லாமல் தமிழ்ப் படைப்புக்களை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பிரசுரம் செய்ததன் மூலம் தமிழுக்கு அமரர் எம்.எஸ். ராமசாமி அவர்கள் செய்துள்ளதை தமிழ்ச் சமூகம் எப்போதும் மறக்கக் கூடியதல்ல. எனக்குத் தமிழில் மட்டுமே படிக்கத் தெரியும். அதனால் மொழிபெயர்ப்புக்களின் பங்களிப்பைப் பூரணமாக உணர்ந்துள்ளேன். எந்தப் பிரதிபலனும் பாராது தமிழுக்கு அர்ப்பணிப்பு உணர்வுடன் மொழிபெயர்ப்பு செய்து வரும் அனைவரையும் சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.*

**- பவுத்த அய்யனார்.**

**நேர்காணல் : வெ.ஸ்ரீராம்**

# தனித்துவமிக்க மொழிபெயர்ப்பாளர்

**சந்திப்பு : பவுத்த அய்யனார்**



| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 01.09.1944 |
| பிறந்த ஊர் | : | ஈரோடு |
| தாய் | : | கௌரி |
| தந்தை | : | வெங்கட்ராமன் |
| திருமணம் | : | 12.04.1982 |
| மனைவி | : | மரகதம் |
| மகன் | : | வித்யாசங்கர் |
| மருமகள் | : | ரூபா |
| பேத்தி | : | நிர்மயி |
| முதல் மொழிபெயர்ப்பு நூல் | : | அந்நியன் (நாவல்), ஆல்பெர் காம்யு |
| விருதுகள் | : | பிரெஞ்சு அரசாங்கத்தின் இரண்டு செவாலியே விருதுகள். |
| பணி | : | ஆயுள் காப்பீட்டுக் கழகம் (1965 முதல் 2001 வரை) |
| தொடர்பு முகவரி | : | 4 (37-B), சாஸ்திரி முதல் குறுக்குத் தெரு, நேரு நகர், சாலிகிராமம், சென்னை-93. |
| தொலைபேசி | : | 044 - 23761713. |

**கேள்வி : நீங்கள் பிறந்தது, கல்வி பயின்றது பற்றி?**

**பதில் :** *நான் பிறந்தது ஈரோடு. அம்மோவோட ஊர் அது. அப்போது அப்பா கரூரில் பணிபுரிந்தார். மூன்றாம் வகுப்பில் இருந்துதான் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்தேன். அதற்கு முன்பு அம்மா சொல்லிக் கொடுத்ததுதான். ஐந்தாம் வகுப்பிலிருந்து நான்கு ஆண்டுகள் ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்தேன்.*


*அப்போது பள்ளிக்கூடத்தில் வருடந்தோறும் கட்டுரைப் போட்டி, ஆங்கிலம் ஒப்புவித்தல் இப்படிப் பல போட்டிகள் நடக்கும். என்னோட அண்ணனும் படித்தது அங்கேதான். நாங்கள் இருவரும் சிறந்த மாணவர்களாக இருந்தோம். ஆண்டு விழாவில் பரிசு கொடுக்க ஈ.வெ.ராமசாமி நாயக்கர் வருவார். நாங்கள் இருந்த அக்ரஹாரத் தெருவிற்கு அடுத்த தெருவான கச்சேரி தெருவில்தான் பெரியார் வீடு. பெரியார் கையாலேயே பரிசு வாங்கியிருக்கிறேன். பரிசு கொடுத்துவிட்டு தோளில் தட்டிக் கொடுத்து "நன்றாகப் படிக்க வேண்டும" என்றும் பெரியார் சொல்வார். அந்த வயதில் அவரைப் பற்றிய முக்கியத்துவம் எதுவும் அவ்வளவாகத் தெரியாது.*

*ஆண்டு விழாவில் பரிசுகளாகப் பல புத்தகங்கள் கிடைக்கும். மு. வரதராஜனின் 'கரித்துண்டு', 'கயமை' இப்படிப் பல புத்தகங்கள் அப்போதே கிடைத்தவை.*

*ஒன்பதாம் வகுப்பிலிருந்து கரூர் முனிசிபில் பள்ளியில்தான் படித்தேன். அப்போது பாடத்திட்டத்தில் ஆங்கிலம், தமிழ் தவிர வேறு ஒரு மொழியும் படிக்க வேண்டியது இருக்கும். சிலர் இந்தி படிப்பார்கள், சிலர் சமஸ்கிருதம் படிப்பார்கள், ஆனால் நான் படித்த ஈரோடு பள்ளிக்கூடத்தில் பொதுத் தமிழ், சிறப்புத்தமிழ் என இருந்தது. சிறப்புத் தமிழில் இலக்கணம்*

எல்லாம் ஆழமாகப் படிக்க வேண்டும். சங்க இலக்கியம் எல்லாம் அதிகமாகப் படிக்க வேண்டும். நான் சிறப்புத் தமிழ் எடுத்துத்தான் படித்தேன். இருந்தாலும் சமஸ்கிருதம் படிக்க வேண்டும் என்ற விருப்பமும் எனக்கு இருந்தது. ஈரோட்டில் இருக்கும்போதே என் மாமா ஒரு ஆசிரியரை வைத்து வீட்டிலேயே சமஸ்கிருதத்தின் ஆரம்பப் பாடங்களைப் படிக்க வைத்தார். அதனால் விருப்பப்பாடமாக ஒன்பதாவதிலிருந்து சமஸ்கிருதம் படித்தேன். கரூரில் எஸ்.எஸ்.எல்.சி. பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிக்குத் திருச்சிக்குப் போனேன். செயிண்ட் ஜோசப் கல்லூரியில் முயற்சி செய்தேன். மொத்த மதிப்பெண்களைக் கணக்கிட்டால் குறைவான மதிப்பெண்கள் பெற்றிருந்தேன். ஆனால் கணிதத்தில் நூற்றுக்கு நூறு. மொத்த மதிப்பெண்கள் குறைவாக இருந்ததால் செயிண்ட ஜோசப் கல்லூரியில் இடம் கிடைக்குமா என்பதில் சந்தேகம் இருந்தது. அப்போது அந்தக் கல்லூரியில் ஜெர்மானியப் பாதிரியார் எர்ஹார்ட் என்பவர் முதல்வராய் இருந்தார். அவரைப் பார்த்தபோது “மொத்த மதிப்பெண்கள் உனக்குக் குறைவாக இருந்தாலும், கணிதத்தில் நூற்றுக்கு நூறு வாங்கியிருப்பதால் உன்னை இழக்கவும் நான் விரும்பவில்லை. உனக்கு இடம் தருகிறேன்” என்றார். அங்கு ஆங்கிலத்தில்தான் பாடங்களைப் படிக்க வேண்டும். அத்துடன் வேறு ஒரு மொழியையும் சேர்த்துப் படிக்க வேண்டும். அங்கு பிரெஞ்சு மொழியும் படிக்க வசதி இருந்தது, அப்போதே எனக்குப் பிரெஞ்சு மொழி படிக்க ஆர்வம் இருந்தது. அதையே விரும்பவும் செய்தேன். ஆனால் முதல்வர் பாதிரியார் எர்ஹார்ட் வேறு விதமாக யோசித்துச் சொன்னார். “பிரெஞ்சு வேண்டாம். சமஸ்கிருதம் படி. ஒரு இந்திய மொழியைப் படிப்பது மிக நல்லது” என்றார். மேலும் அவர் “இந்தக் கல்லூரியில் நீ சேர்வதென்றால் நீ சமஸ்கிருதம் படித்தால்தான் முடியும்” என்பதைக் கண்டிப்பாகவே கூறிவிட்டார். அது பின்னாட்களில் எனக்கு மிகப் பயனுள்ளதாக இருந்தது.

“பிரெஞ்சு எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். நீ தமிழ் படித்துள்ளாய், சமஸ்கிருதமும் படித்திருக்கிறாய், அவை உன் சிறுவயதிலிருந்து படித்த மொழிகள். அதனால் சமஸ்கிருதத்தை இன்னும் அதிகம் படிப்பது உனக்கு எளிது” என்றும் சொன்னார். என் தந்தை பள்ளி ஆசிரியர், ஆங்கில இலக்கியத்தில் புலமை கொண்டவர். அதனால் நான் எஸ்.எஸ்.எல்.சி, படித்தபோதே வால்டேர் ஸ்காட், சார்லஸ் டிக்கன்ஸ் எல்லாம் மூல நூல்களையே படிக்கும்



வாய்ப்பு எனக்கு இருந்தது. துணைப்பாடத்தில் இருக்கும் ஆங்கிலக் கதைகளின் சுருக்கம் மட்டுமே இருக்கும். அவற்றின் மூல நூல்கள் அப்பாவிடம் இருந்ததால் படித்தேன். சிரமமானவற்றை அப்பாவிடம் கேட்டுக் கொள்வேன். அகராதியைப் பார்த்து அர்த்தங்களைத் தேடும் பழக்கமும் அப்போதுதான் வந்தது. அப்போது சில பிரெஞ்சு இலக்கியங்களை மொழிபெயர்ப்பு மூலம் படித்தேன். விக்டர் ஹ்யூகோ, டூமாஸ் இப்படி. அதனால் பிரெஞ்சும் படிக்க வேண்டும் என்று கல்லூரியில் சேரும் விண்ணப்பப் படிவத்தில் பிரெஞ்ச் என்று கேட்டிருந்தேன். இன்னொரு காரணம் என்னவென்றால் அப்போது தமிழ்நாடு சென்னை மாகாணமாக இருந்தது. சென்னை மாகாணத்திலேயே மாணவர்களுக்கு பிரெஞ்ச் சொல்லிக் கொடுக்க திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில்தான் பிரெஞ்ச் பாதிரியார் இருந்தார்.

பிரெஞ்ச் பாடப்பிரிவை எனக்குக் கொடுக்காத அந்த ஜெர்மானியப் பாதிரியார் மீது ஆரம்பத்தில் எனக்குக் கோபம் இருந்தது. ஆனால் சமஸ்கிருதம் தொடர்ந்து படிக்கப் படிக்கப் பல புதிய விசயங்களைக் கற்றுக் கொண்டேன். இன்றைக்கும் அந்தக் காலக்கட்டத்தை நினைத்துப் பார்க்கும் போது அந்த ஜெர்மானியப் பாதிரியாருக்கு நன்றிக்கடன்பட்டுள்ளதாகவே நினைக்கிறேன். அப்போது அவர் எனக்குக் கூறியது மிகப் புத்திசாலித்தனமான சிறந்த அறிவுரை. மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட பிறகும் அவரை எப்போதும் நினைத்துக் கொள்வேன். பள்ளிக் காலத்தில் கல்லூரிக் காலத்தில் நமக்கு எந்தெந்த ஆர்வம் இருக்கும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. முதலில் எனக்கு உயர் கணிதத்தில் ஆர்வம் இருந்தது. பிறகு புள்ளியியலில் ஆர்வம் வந்தது. சமஸ்கிருதத்தில் ஆய்வு செய்யலாமா? என்றெல்லாம் நினைத்திருக்கிறேன். காளிதாசனின் ரகுவம்சத்தை இப்போதும் ஆர்வத்துடன் படிக்கவே செய்கிறேன். ஆங்கில இலக்கியத்திலும் ஈடுபாடு இருந்தது. அதுபோக பள்ளிப் படிப்புக்கு வெளியே, நிறையப் புத்தகங்கள் படிக்கும் பழக்கமும் இருந்தது. ஜெயகாந்தன், நா. பார்த்தசாரதி, தி. ஜானகிராமன், அகிலன், கு.அழகிரிசாமி, மணிக்கொடி கால எழுத்தாளர்களின் எழுத்துக்கள் எல்லாம் படிப்போம். திருச்சியில் இதற்கு வாய்ப்பு அதிகம் இருந்தது. பலவிதமான ஆர்வங்கள் இருந்து வந்ததால் எந்த ஒன்றிலும் முழுக் கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது.

பின்பு குடும்பச்சூழல் காரணமாக கல்லூரியில் இளங்கலை முடித்துவிட்டு மேற்கொண்டு படிக்க வேண்டாம் வேலைக்குப் போகலாம் என்ற நிலையை நானே ஏற்படுத்திக் கொன்டேன். எங்கள் குடும்பமும் பெரிய குடும்பம். நான் இரண்டாவது குழந்தை. அப்பா மேற்கொண்டு படிக்கச் சொன்னாலும் நானும் அண்ணனும் எங்கள் குடும்பத்தைப் பெருமளவு காப்பாற்ற வேண்டி இருந்தது. அதனால் அப்பாவிடம் ஒரு வேலையைத் தேடிக்கொண்டு பிறகு மேலே படித்துக் கொள்கிறேன் எனச் சொல்லிவிட்டோம். வேலை தேடி சென்னை வந்துவிட்டேன். 1965லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில்தான் பணிபுரிந்தேன். ஓய்வு பெற வேண்டியது 2004 - ல். அதற்கு முன்பாகவே விருப்ப ஓய்வில் வந்து விட்டேன்.

**கேள்வி : சென்னைக்கு வந்த பிறகுதான் பிரெஞ்சு பயின்றீர்களா?**

**பதில் :** ஆயுள் காப்பிட்டு நிறுவனத்திற்கு அண்ணா சாலை வழியாகப் பஸ்சில் போகும் போது, தேவநேயப் பாவாணர் கட்டிடத்தில் அலையன்ஸ் பிரான்சேஸ் இயங்கிக் கொண்டிருந்தது. அங்கு Learn French என்று போர்டு வைத்திருந்தார்கள். ஆர்வத்துடன் போய்ப் பார்த்தேன். தொடக்க நிலை வகுப்பில் சேர்ந்தேன். வருடம் 1970. வாரத்தில் மூன்று நாட்கள் வகுப்பு. முதலில் படித்த போது ரொம்ப சிரமாக இருந்தது. எனக்கு அப்போது வயது 27. என்னுடன் இருந்தவர்கள் என்னை விட வயது குறைந்த 19, 18 வயதுடையவர்கள். 6, 7 வயது குறைந்தவர்கள். நான் பள்ளிவரை எஸ்.எஸ்.எல்.சி. வரை தமிழ் மீடியம், அதன் பிறகு இங்கிலீஷ் மீடியம் படித்தேன். அவர்கள் எல்லாம் ஆரம்பம் முதல் ஆங்கிலத்தில் படித்ததால் கேட்டதற்கு எல்லாம் டக் டக் என்று பதில் சொல்வார்கள். எனக்கு தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டது. அங்கு திருமதி. சபீன் சலாம் என்ற பிரெஞ்சு ஆசிரியை இருந்தார்கள். முதல் மூன்று மாதம் முடிந்தவுடன் சின்ன தேர்வு நடந்தது. அதில் மதிப்பெண் குறைவாக இருந்தது. அவரிடம் போய் நான் கேட்டேன். அவர் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றார்கள். தொடக்க நிலை மாணவர்களில் இரண்டு விதம் உண்டென்று அவர் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அரைகுறையான தொடக்க நிலை மாணவர்களிடம் இருந்த சில தவறான விஷயங்களை அழித்துவிட்டு அவர்களுக்குப் புதிதாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

உண்மையாகத் தொடங்குபவர் எதுவும் எழுதப்படாத கரும்பலகையைப் போல. அவருக்குக் கற்பிப்பது எளிது. ஆனால் முதலில் சற்று அதிக நேரம் தேவைப்படும். நீ அந்த வகையைச் சேர்ந்தவன். முயற்சியைத் தளரவிடக் கூடாது என்றார். அவருடைய அறிவுரையை ஏற்று, இறுதித் தேர்வில் நல்ல மதிப்பெண் வாங்கி முதலிடம் பெற்றேன்.

முதல் மார்க் வாங்கியதால் ஊக்கம் தொடர்ந்து வந்தது, அங்கு இருந்த பேராசிரியர்கள் எல்லாம் நீ இதோடு விட்டு விடாதே. இதில் நான்கு கட்டம் இருக்கிறது. முதல் மூன்று கட்டங்கள் மொழியின் அடித்தளங்கள் பற்றி நன்றாகச் சொல்லிக் கொடுத்துவிடுவார்கள். மொழியின் நெளிவு சுளிவுகளைத் தெரிந்து கொள்ளலாம். நான்காவது கட்டத்தில்தான் பிரெஞ்சு இலக்கியங்கள் 17,18,19,20 இந்த 4 நூற்றாண்டுகளில் ஒவ்வொரு நூற்றாண்டின் ஒரு இலக்கியப் படைப்பை எடுத்துக் கொண்டு அதைப் பற்றி ஆழமாகத் தெரிந்து கொள்ளலாம். பிரெஞ்சு இலக்கிய வரலாறு பற்றி நன்றாகத் தெரியவேண்டும். இலக்கியத்தைப் படித்து விட்டு எப்படி விமர்சனம் பண்ணவேண்டும். இலக்கிய வகைகளை எப்படிக் கண்டு பிடிப்பது என்று சொல்வார்கள். இதை அத்தனையும் பிரெஞ்சுகாரர்தான் சொல்லித்தருவார். பிரெஞ்சு மொழியில்தான் சொல்வார். அலையன்ஸ் மூலம் பிரெஞ்சு கற்பதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், முதல் நாளில் ஆரம்பித்து, பிரெஞ்சு மூலமாகத்தான் அவர்கள் சொல்லிகொடுப்பார்கள், ஆங்கிலம் மூலம் அல்ல. பிரெஞ்சில் புத்தகம் என்று சொல்லிவிட்டு, அதைத் தமிழிலோ, ஆங்கிலத்திலோ சொல்லமாட்டார்கள். ஒரு பிரெஞ்சு சொல்லின் பொருளை சைகை மூலமாகவோ அல்லது நடித்துக் காட்டியோ சொல்லிக்கொடுப்பார்கள். மற்றொரு மொழியில் மொழிபெயர்த்து சொல்ல மாட்டார்கள். தமிழர் டெல்லிக்குப் போனால், இந்தி மொழி படிக்கத் தெரியாவிட்டாலும், நாளடைவில் அந்தச் சூழலில் சிறிது சிறிதாகப் பேச, புரிந்து கொள்ள முடிவதைப் போலத்தான் இதுவும்: வகுப்பறையில் அதுபோன்ற சூழலை உருவாக்கும் நவீன கற்பித்தல் முறை. அந்த சூழலில்தான் நாம் படிக்கவேண்டும்.

**கேள்வி : தமிழ் இலக்கிய உலகைப் பற்றிய ஆர்வமும், ஈடுபாடும் ஏற்கெனவே இருந்தனவா?**

**பதில் :** 65ல் வேலைக்கு சேர்ந்து 70ல் தான் பிரெஞ்சு கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். 65 - 66ல் இளைய தலைமுறை எழுத்தாளர்களைப் பற்றி அறிந்துக்கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. தேவநேயப் பாவாணர் கட்டிடத்தில் இலக்கியக் கூட்டங்கள் நிறைய நடக்கும். அந்த இலக்கியக் கூட்டத்தில்அன்றைய இளைய எழுத்தாளர்களாகத் துடிப்போடு இருந்த நிறையப் பேர் வருவார்கள். அப்போது முத்துசாமி போல நிறைய எழுத்தாளர்களைச் சந்தித்திருக்கிறேன். கவிஞர்கள் நிறையப் பேர் பார்த்திருக்கேன். வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன், சி. மணி, ஆத்மாநாம் (மதுசூதன்), இவர்களை எல்லாம். வாசகன் என்ற முறையில் வட்டத்திற்கு வெளியில் இருந்தேன். நான் எழுத்தாளன் கிடையாது. நான் ஒரு வாசகன். கூட்டம் முடிந்து பேசிக்கொண்டிருக்கும்போது நான் யார், நீங்கள் யார் என்று பேசும்போது நிறையப் பேர் அறிமுகம் கிடைத்தது. நானே வலிய தீபம் அலுவலகத்திற்குப் போய் நா. பார்த்தசாரதி அவர்களைப் பார்த்தேன்.

அதன் பிறகு சி.சு. செல்லப்பா அறிமுகம். நல்ல பிரமாதமான அறிமுகம். அப்போது திருவல்லிக்கேணி பிள்ளையார் கோவில் தெருவில் இருந்தோம், செல்லப்பாவும் அதே தெருவில் இருந்தார். அவர் வீட்டிற்கு மாலைவேளையில் போவோம். நிறைய எழுத்தாளர்கள் வருவார்கள். சி. மணி, முத்துசாமி அப்போது அவர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. எழுத்து பத்திரிகை நடந்துகொண்டு இருந்தது. அதில் நான் சந்தாதாரர். பத்திரிகை வெளியான உடனே எனக்கு காலையில் நடந்தே வந்து கொடுத்துவிட்டுப் போவார். காபி சாப்பிடுங்கள் என்றால் அவருக்குப் பிடிக்காது. பால் மட்டும்தான் குடிப்பார். சரியான காந்தியவாதி. தீவிரமான கொள்கைப் பிடிப்புகள் அவரிடம் இருந்தன. Big Street- ல் காய்கறிகள் வாங்க வருவார். நானும் அந்த நேரத்தில் போவேன். இந்திய காய்கள் மட்டுதான் வாங்குவார். கேரட், கேப்பேஜ் போன்ற ஆங்கிலக் காய்கள் வாங்க மாட்டார். வெண்டைக்காய், கத்திரிக்காய், புடலங்காய் வாங்குவார். காபி, டீ குடிக்கமாட்டார். எங்க வீட்டுக்கு வந்தால் மோர், பால் குடிப்பார். ரொம்ப விசித்திரமான மனிதர். தான் செய்யவேண்டிய காரியத்தில் தீவிரமான ஈடுபாடுடன் செயல்படுவார். அவர் மாதிரி அந்தக் காலக்கட்டத்தில் பல விதமான நெருக்கடிகளை சமாளித்து ஒரு தனி மனிதனாக எழுத்துப்

*பத்திரிகையை அத்தனை நாட்கள் கொண்டு வந்தது பெரிய விஷயம். இன்று சிறுபத்திரிகைத் துறையில் ஒரு பெரிய முன்னோடி சி.சு. செல்லப்பா. மணிக்கொடி காலத்தில் பி.எஸ். ராமையா பற்றி நிறைய விஷயம் தெரிந்து கொண்டேன்.*



வெ. ஸ்ரீராமின் தாய், தந்தையர்

**கேள்வி : அப்போதுதான் பிரெஞ்சு படிக்க ஆரம்பித்தீர்களா?**

**பதில் :** *நான் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் வேலை செய்துக்கொண்டு இருந்தபோது இசைக்கச்சேரிக்குப் போவது, லைப்ரரிக்குப் போவது இலக்கியக் கூட்டத்திற்குப் போவது தொடர்ந்து கொண்டிருந்தது. 7 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பிரெஞ்சு படிக்க ஆரம்பித்தேன். பிரெஞ்சு படிக்கும்போது இறுதியாண்டில் இலக்கியங்கள் படிக்க வேண்டிய சமயத்தில் 20ஆம் நூற்றாண்டு இலக்கியத்தில் ஆழ்ந்த வாசிப்புக்கு ஆல்பெர் காம்யு என்பவரின் “கொள்ளை நோய்” புத்தகம். எனக்கு பிரெஞ்சு சொல்லி கொடுத்தவர்கள் இரண்டு பேர்: லார்தே, ஷராஸ். ஒருவர் இலக்கியத்தில் நிபுணர். இன்னொருவர் மொழி நிபுணர். இரண்டு பேருமே காம்யுவைப் பற்றி விளக்கமாக சொல்லிக் கொடுத்தார்கள். நான் சில சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ரொம்ப வருடங்களுக்கு முன்பே கொள்ளை நோய், ‘ப்ளேக்’ என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் படித்திருக்கிறேன். என்னை மிகவும் பாதித்த ஒரு நாவல். அதைப் பற்றிப் பேசுவதென்றால், நிறையவே பேசுவேன். அதே காலகட்டத்தில் பிரக்ஞை பத்திரிகை வந்தது. பிரக்ஞை சம்பந்தபட்டவர்கள் ரவீந்திரன், ரவிசங்கர், வீராசாமி என் நண்பர்கள். எல்லோருமே அலுவலகத்தில் வேலை செய்பவர்கள். மாலை வேளையில் சந்தித்து இலக்கியத்தைப் பற்றிப் பேசுவோம். அப்போ பிரக்ஞை பத்திரிகை வெளிடியிட நானும் உதவி பண்ணிக் கொண்டிருந்தேன். அந்தப் பத்திரிகைகூட எங்கள் வீட்டு விலாசத்தில் இருந்துதான் வந்தது. 32, போஸ்டல் காலனி, 3வது தெரு. வாசகர் கடிதங்கள் எங்கள் வீட்டு விலாசத்துக்குதான் வரும்.*

**கே: காம்யுவைப் பற்றி அப்போதெல்லாம் விவாதிப்பீர்களா?**


**பதில் :** *மாலை நேரங்களில் நாங்கள் காம்யு பற்றிப் பேசும்போது, ஆங்கில மொழிபெயர்ப்பு மூலம் தெரிந்துகொண்டதற்கும் நேரடியாகப் பிரெஞ்சில் படித்துத் தெரிந்து கொண்டதற்கும் சில வித்தியாசங்கள் தெரிய வந்தன. அடிப்படையில் பெரிய வித்தியாசம் கிடையாது. சின்னச் சின்ன விஷயங்கள். அவருடைய அரசியல் கோட்பாடுகளைப் பற்றி பலவிதமான தவறுதலான கருத்துகள் மக்களிடையே பரவி இருந்தது. ஆனால் எந்த அளவிற்கு அரசியலில் தார்மிகத்தை அவர் எதிர்பார்த்தார் என்று புரிந்துகொள்ளவில்லை. அரசியலில் ஈடுபட்டவர்களுக்குக் கூட அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு தார்மிகம் தேவைப்பட்டது என்பதில் தீவிரமாக இருந்தார் என்பது பிற்காலத்தில் தெரியவந்தது. அவர் இறந்து பல வருடங்கள் ஆகிய நிலையில், இன்றைய அரசியல் விமர்சகர்கள் பலர் (ஒரு காலத்தில் இவரை நடைமுறைக்கு ஒத்து வராத லட்சியவாதி என்று சொன்னவர்கள் உட்பட) இவருடைய கருத்துகளின் ஆழத்தைப் புரிந்து கொண்டு பாராட்டுகிறார்கள்.*

*அப்போ பிரக்ஞை ரவிசங்கர் என்னிடம் இதையேல்லாம் நீங்கள் ஏன் எழுதக்கூடாது என்று சொன்னார். “கட்டுரை எழுதிக் கொடு பிரக்ஞையில் போடுகிறோம்” என்றார்கள். கட்டுரை எழுத ஆரம்பித்தேன். திடீரென்று சம்மட்டியால் அடித்தமாதிரி இருந்தது. காம்யு பற்றி நிறைய மேற்கோள் காட்டவேண்டும். நான் எந்த மேற்கோளைக் காட்டுவது. பிரெஞ்சில் இருக்கிற மேற்கோள் காட்டவேண்டும். இங்கு சாதாரணமக்களுக்கு பிரெஞ்சு புரியாது. தமிழ் வாசகர்களுக்கு ஆங்கிலம் புரியும். ஆங்கில மேற்கோள் காட்ட முடியாது. ஏன் என்றால் ஆங்கிலம் மேற்கோள் சற்றே மாறுபட்டிருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஆசிரியர் பற்றி விமர்சனம் செய்வதானால் படைப்புகளை தமிழில் முறையாகச் செய்யவேண்டும். அப்போது அவருடைய படைப்புகள்*

நேரடியாகப் பிரசுரமாகவேண்டும். முதலில் அது எப்படியிருக்கிறது என்று படித்துப் பார்க்கட்டும். அதன் பிறகுதான் விமர்சனம் செய்யமுடியும். அப்போதான் நான் சொல்வது சரி என்று அவர்கள் சொல்லமுடியும். இல்லையென்றால் அவை என்னுடைய கருத்தாகத்தான் இருக்கமுடியும், ஆசிரியருடைய கருத்து என்று எடுத்துகொள்ள முடியாது.

தமிழிலே மொழிபெயர்க்கலாம் என்று ஒரு யோசனை இருந்தது. அந்தக் காலகட்டத்திலும் என்னை மிகவும் பாதித்த நாவல் "கொள்ளை நோய்". அதில் ஜோசப் கிரான்ட் என்று ஒரு பாத்திரம் வரும். அந்தப் பாத்திரம் சாதாரண அலுவலகத்தில் வேலை செய்யக்கூடிய நடுத்தர வர்க்க ஊழியர். அவருடைய ஓய்வு நேரத்தில் நாவல் ஒன்று எழுதவேண்டும் என்று அவருக்கு ஆவல். நாவல் ஆரம்பிப்பார். ஆனால் தாம் எழுதுவது ரொம்ப சுத்தமாக இருக்க வேண்டும், யாரும் குற்றம் சொல்லக்கூடாது என்ற தீவிர உள்ளுணர்வு கொண்டவர். அதனால் இரண்டு வரி எழுதுவார். அதில் திருப்தியிருக்காது. அதை அடித்துவிட்டுத் திரும்ப எழுதுவார். அதைத் தூக்கி முன்னாடி போடுவார். இதைத் தூக்கிப் பின்னாடி போடுவார். ஒரு வார்த்தைக்குப் பதிலாக இன்னொரு வார்த்தை போடுவார். இது மாதிரி போட்டுப் போட்டு கச்சிதம் என்று கண்டு பிடிப்பதற்கே ரொம்ப நாட்கள் ஆகும். மூன்று வரியைத் தாண்டவே ரொம்ப நேரம் ஆகும். அவரால் மூன்று வரியைத் தாண்டிப் போகமுடியாது. அதைப் பற்றிக் கவலைப்படமாட்டார். மேலே போக முடியவில்லை என்றால் கவலை இல்லை. அரைகுறையாகக் கொடுக்க விரும்பவில்லை, பரிபூரணமாக கச்சிதமாக இருக்கவேண்டும். பிற்காலத்தில் எனக்குத் தெரிய வந்தது, இதன் ஆசிரியர் காம்யுவிற்கும் இப்படி இருந்திருக்கிறது. அது அவருடைய குணாதிசயம்.

அந்தப் பாத்திரத்தைப் பற்றி விவரமாக இரண்டு பக்கம் எழுதியிருப்பார். அந்த இரண்டு பக்கம் ரொம்ப சுவராசியமாக இருக்கும். அதை நான் மொழிபெயர்த்திருந்தேன். ஒரு சாதாரண மனிதனுக்கு நடுத்தர வர்க்க ஊழியனுக்கு என்ன மாதிரி பரிமாணங்கள் இருக்கும் என்பதை, என்ன நுண்ணறிவோடு அணுகியிருக்கிறார் என்பதை அந்த இரண்டு பக்கம் படித்தால் தெரியும். இதைத் தமிழில் சொன்னால் எப்படி இருக்கும், சொன்னால் நன்றாக வரும் என்று எனக்குத்



தோன்றியது. எழுதிக் கொண்டுபோய் அப்போது ராயப்பேட்டை பைலட் தியேட்டர் அருகிலிருந்த க்ரியா அலுவலகத்தில் என் நண்பர்கள் ந. முத்துசாமி, திலீப்குமார், ராமகிருஷ்ணன் இவர்களிடம் படித்துக் காண்பித்தேன். முத்துசாமி "ரொம்ப நன்றாக வந்திருக்கிறது. இது மாதிரி நடையில் ஒருவர் எழுதியிருப்பது தமிழுக்கு முழுமையாக வந்தால் நன்றாக இருக்கும். இதை ஏன் முழுமையாகச் செய்யக்கூடாது" என்றார். சரி செய்யலாம். நான் முயற்சி செய்கிறேன் என்றேன். முத்துசாமி எனக்கு அண்ணன் மாதிரி. அவரிடம் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. செய்கிறேன் என்றேன்.

**கே: தமிழில் மொழிபெயர்க்கலாம் என்று எப்போது நினைத்தீர்கள்?**

**பதில்** : அந்த சமயத்தில் அலையன்ஸில் பிரெஞ்சு படித்ததால் பிரெஞ்சில் சரளமாகப் பேசுவது எனக்கு வந்திருந்தது. அதனால் Interpretation வேலைக்கு அடிக்கடி போகவேண்டியிருந்தது. யாராவது பிரெஞ்சுக்காரர்கள் இங்கு வந்தால் அவர்களை இரண்டு மூன்று இடத்திற்கு அழைத்துப் போய், அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் அவர்களுடன் நானும் போய் உதவி செய்யவேண்டும். அந்த வேலையை ரொம்ப நாட்கள் நான் செய்து கொண்டிருந்தேன். அவர்கள் மூலம் நல்ல சில சந்திப்புகள் கிடைத்தன. அதில் ஒரு வேதியியல் நிபுணர். அந்த வேதியல் நிபுணர் E.E.C. (European Economic Community) யின் Project ஒன்றுக்காக இந்தியா வந்திருந்தார். இங்குள்ள மாபெரும் நகரங்களில் இருக்கும் கசாப்புக் கடையில் மிருகங்களை எல்லாம் வெட்டின பிறகு நிறைய வேஸ்ட் மெட்டிரியல் வரும். அதை யெல்லாம் வீண் பண்ணாமல் அதை எப்படித் திரும்ப ரீ-சைக்கிள் பண்ணவேண்டும். எலும்பு, ரத்தம், தோல் போன்றவற்றைக் கூடுமான வரை வீண் பண்ணாமல் எல்லாவற்றையும் வேறு பொருளாக மாற்ற முடியும், என்பது பற்றி பெரிய அளவில் விஞ்ஞான ரீதியில் இந்திய அரசாங்கத்திற்கு அறிவுரை அளிக்கும் பணிக்காக வந்திருந்தார். அவருடன் நான் பாண்டிச்சேரிக்கு காரில் போய்கொண்டிருந்தபோது அப்போழுது அவர் என்னிடம் பிரெஞ்சு சினிமா, இலக்கியம் பற்றியெல்லாம் பேசினார். எனக்கு அப்போது தெரிந்ததெல்லாம் காம்யு, பிளேக். அதிலிருந்து சில விஷயங்கள் சொன்னேன். சில வரிகள் ஒப்பித்தேன். அவர் அசந்து போய்விட்டார். "இவ்வளவு தூரம் பிளேக் பத்திபேசறயே அந்நியன், (outsider) படித்திருக்கிறாயா" என்றார். படித்திருக்கிறேன் என்றேன். "நீ அதை ஆழமாகப் படி, படிச்சா அது என்னவென்று தெரியும். நான் ஏன் அப்படி சொல்கிறேன் என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கு. நான் ஒரு பிரெஞ்சுகாரர் என்பதாலோ, பிரெஞ்சு வாசகர் என்பதாலோ இதைச் சொல்லவில்லை. முன்னோடியான இதைப் படிக்கிறது என்பது ரொம்பத் தேவையான ஒன்று." தனிப்பட்ட முறையிலும் சொல்கிறேன் என்று கொஞ்சம் நேரம் கழித்து சொன்னார். "காம்யுவை நான் சந்தித்து இருக்கிறேன். எனக்குப் பெரிய ஆச்சரியம் எப்படி சந்தித்தாறென்று. அப்போது காம்யு நாடகத் துறையில் ரொம்ப ஆர்வத்துடன் இருந்தார். நாடகக் குழுக்கள் நடத்திக்கொண்டு இருந்தார். அவரே நாடகங்களை இயக்கினார். நடித்துக்கொண்டும் இருந்தார். அப்போது பிரான்ஸில் மரியா காஸரெஸ் என்ற பெரிய நாடக நடிகை இருந்தார். மரியா காஸரெஸ் இரண்டு முறை திருமணம் ஆனவர், அதைத் தவிர காம்யுவிற்கும் நிறையப் பெண் நண்பர்கள் உண்டு. மரியாகாஸரெஸ் ரொம்ப நாள் தோழியாக இருந்தார். அப்போது மரியாகாஸரெஸ் வேதியல் நிபுணர்க்கும் நெருங்கிய தோழி. காம்யு மரியாகாஸரெஸ் வீட்டுக்கு வரும்போது பார்த்திருக்கிறார். இரண்டு முறை அவருடன் பேசியிருக்கிறார். இரண்டு முறை பேசியவுடன் ரொம்பப் பிடித்துவிட்டது. அவருடன் ஐந்து நிமிடம் பேசியவர்கள் அவர் புத்தகத்தைப் படிக்கிற மாதிரி உணர்வார்கள். அந்த மாதிரி மனிதர். அபூர்வமான மனிதர். அதைப் பத்தி நிறையச் சொன்னார். புத்தகத்தைப் பற்றி நிறைய விஷயங்கள் சொன்னார்கள். நான் படிக்கும் போது என்னவெல்லாம் கூர்ந்து கவனிக்கவேண்டும் என்று சொன்னார்.

பாண்டிச்சேரி வேலையை முடித்தவுடன் முதல் வேலையாக அலையன்ஸ் லைபரரியில் போய் அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தேன். 'அந்நியன்' புத்தகத்தை நான் படிக்க ஆரம்பித்தேன். ஒரே மூச்சில் புத்தகத்தைத் படித்து முடித்துவிட்டேன். புத்தகத்தின் பின்பகுதியில் வெவ்வேறு விமர்சனங்கள், விளக்கங்கள் படித்தேன். இந்தப் பின்னணியில் மறுமுறை படிக்கும்போது வேறுவேறு பரிமாணங்கள் பிடிபட்டன. அந்த வேளையில் முதல் பத்துப் பக்கங்களை மொழிபெயர்ப்பு செய்து,

*அதைக் கொண்டு சென்று ராமகிருஷ்ணனிடம் காண்பித்தேன். "ஸ்ரீராம், இதை முழுசா செய்யணும், பிளேக் மாதிரி பெரிய புக் கிடையாது. இது ரொம்ப சின்ன புக். உங்களுக்கு நேரம் இருக்கும்போது சனி, ஞாயிறு நாட்களில் வேலைசெய்து தந்தால் போதும். இதை நீங்கள் பண்ணுங்கள்" என்றார். இப்படி ஆரம்பித்ததுதான் மொழிபெயர்ப்பு.*

**கே: உடனேயே வெளியிட முடிந்ததா?**

**பதில் :** *இதில் முக்கியமாகப் பார்க்க வேண்டிய விஷயம் என்னவென்றால், அந்த மொழிபெயர்ப்பை செய்தவுடன் முதல் பதிப்பு வெற்றிகரமாக வந்தது. அந்த நாட்களில் பதிப்பாசியர்கள் மொழிபெயர்ப்பை வெளியிடுவது என்பது வேறு ஒருவர் உதவி இல்லாமல் செய்ய முடியாது. சரியான விதத்தில் வெளியிட வேண்டும். இன்றைக்கு நிறைய மொழிபெயர்ப்புகள் சரியாக வராததற்க்குக் காரணம் என்னவென்றால் மொழிபெயர்ப்புக்குக் காசு கிடையாது. பொதுவாக அலையன்ஸ்க்கு வர்தக ரீதியாகவும், டெக்கினிக்கலாகவும் சில கடிதங்கள் வரும். பொருளாதர ரீதியிலும், தொழில் துறையிலும் பிரான்சுக்கும் இந்தியாவுக்கும் நிறையப் பரிமாற்றங்கள் இருக்கிறதால், அது சம்மந்தப்பட்ட கடிதங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்தோமானால் இந்த மொழிபெயர்ப்பைவிட 10 மடங்கு காசு கிடைக்கும். முதல் முறையாக 'அந்நியன்' வந்தபோது அந்த சமயத்தில் எனக்கு நல்ல ஊக்கம் கிடைத்தது. அலையன்ஸ்பிரான்சேஸ் டைரக்டர் ரோலான் தோமா "நாங்கள் ஊக்கம் கொடுக்கிறோம் நீங்கள் செய்யுங்கள்" என்றார். மொழிபெயர்ப்பு 79இல் ஆரம்பித்து 80ல் முதல் பதிப்பு வந்தது. க்ரியா ராமகிருஷ்ணன் ரொம்பப் பொறுப்பு உணர்ச்சிமிக்க பதிப்பாளர். எல்லாம் சரியான முறையில் செய்வதானால் அந்த ஆசிரியரிடம் உரிமை வாங்கித்தான் பண்ணவேண்டும். காப்பி ரைட் உண்டு. உரிமம் வாங்குவதற்கு என்ன செய்யவேண்டும். உரிமம் வாங்குவதற்கு பிரெஞ்சு பதிப்பாளர் காலிமார்க்கு எழுதிப் போடவேண்டும். காலிமார்க்கு நாங்கள் யார் என்று தெரியாது. அப்போ டில்லியில் உள்ள பிரெஞ்சு தூதரகம் மூலம் தொமஸ்க்கு தெரிந்தவர் மூலம் என்னுடைய பெயரைப் பரிந்துரை பண்ணி இவர் ஆர்வத்துடன் செய்கிறார். இவர் பிரெஞ்சு அறிவைப் பற்றி ரொம்ப சொல்லலாம். துல்லியமாகப் புரிந்துகொண்டிருக்கிறார். இதை அவர் நன்றாகச் செய்வார் என்று எனக்குத் தெரியும். பிரெஞ்சு இலக்கியங்களைத் தமிழில் கொண்டு வருவது நல்ல முயற்சி. இந்தியாவில் உள்ள பல மாநிலங்களில் அலையன்ஸ் இருக்கிறது. கல்கத்தாவில் உள்ளவர்கள் பெங்காலியிலும், திருவணந்தபுரத்தில் உள்ளவர்கள் மலையாளத்திலும் பண்ணினார்கள் என்றால் இந்திய மொழிகளில் எல்லாவற்றிலும் பிரெஞ்சு இலக்கியங்கள் வரும். இது நல்ல முயற்சி. இதற்குத் தீவிரமாக உதவி செய்யவேண்டும் என்றார்கள்.*

*முதலில் நிதியுதவி குறைவாகத்தான் கொடுத்தார்கள். இப்போது நன்றாகத் தருகிறார்கள். அதனால் ராமகிருண்ணன் நிதியுதவி இல்லாமல் வெளியிட்டுயிருந்ததால் கொஞ்சம் நஷ்டம்தான். இருந்தாலும் மொழிபெயர்ப்பு வெளியிடுபவர்களுக்கு லாபம் அதிகம் இருக்காது. இப்போழுது நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. ஒரு நல்ல காரியம் செய்கிறோம் என்றால் சரியாக அதைச் செய்யவேண்டும். இரண்டாவது நான் மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பை கையெழுத்துப் பிரதியை வைத்துக்கொண்டு சரிபார்த்து கொண்டிருந்தோம். அப்பொழுதெல்லாம் கையெழுத்துப் பிரதி. இப்போழுது கம்ப்யூட்டர் வந்துவிட்டது. சரிபார்க்கும் போது இரண்டு மூன்று பேர் சரிபார்த்து சரிபார்த்து திருத்தங்கள் செய்துகொண்டிருந்தோம். மொழிபெயர்ப்பின் முதல் பிரதியை சரிபார்ப்பது என்பது பற்றி சற்று விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். பிரெஞ்சு மூலத்தை அறிந்திராத நிலையில், தமிழ் மொழிபெயர்ப்பைப் படிக்கும் ராமகிருஷ்ணன் சில இடங்களில் அடிக்கோடிட்டு, என்னிடம் சந்தேகம் கேட்பார். அதில் தெளிவின்மையோ, காரண - காரிய ரீதியான தொடர்பின்மையோ இருக்கும். அந்தப் பகுதியை மீண்டும் படித்துப் பார்த்தால், ஏதோ ஒரு குளறுபடி இருப்பதைப் பார்க்கலாம். எனக்கு சில சமயங்களில் ஆச்சரியமாகவும் இருக்கும். மொழிபெயர்ப்பில் முக்கியமான அம்சம் இதுதான். அதை நான் (மொழிபெயர்ப்பாளர்) எப்படிப் பார்க்கிறேன் என்பது முக்கியமல்ல; அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம்.*

*'அந்நியன்' குறித்து ஏகப்பட்ட ஆய்வுகள் பிரெஞ்சில் செய்யப்பட்டிருக்கின்றன. அதன் முதல் பகுதிக்கும் இரண்டாவது பகுதிக்கும் எழுத்து நடையில் உள்ள வித்தியாசம் நன்றாக ஆய்ந்து,*

*அலசப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை விரிவாக, ஆழமாகப் புரிந்து கொள்ள இந்த ஆய்வுகள் மிகவும் அவசியம். அவற்றைப் பற்றி ஓரளவு நூலின் பின்னுரையில் சொல்லியிருக்கிறேன்.*

**கேள்வி : அபத்தம் என்ற கருத்துக்கு விளக்கம் தேவைப்பட்டதா?**

**பதில் :** *முதல் பகுதியில் அபத்த மனிதனுடைய அனுபவங்களைப் பற்றிச் சொல்லும்போது அபத்த மனிதனுடைய அனுபவங்களுக்கு உலகத்தில் காரண காரிய ரீதியான தொடர்பு இல்லையென்பது தெரிகிறது. அபத்தம் என்கிறதே எல்லாவற்றையும் காரண காரியரீதியாகப் பார்க்கக்கூடிய மனிதனுக்கும் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் காரணம் எதுவுமே இல்லாமல் நடப்பதைப் போல தோன்றக் கூடிய சம்பவங்களுக்கும் இடையே நிகழும் மோதல்தான். அதாவது வாழ்க்கையின் அர்த்தமின்மைக்கும் அர்த்தம் தேவைப்படும் மனிதனுக்கும் இடையே ஒரு முரண்பாடு இருக்கிறது. இந்த முரண்பாட்டின் விளைவாக வருவதுதான் அபத்தம். அந்த முரண்பாட்டைப் பற்றி அவனுக்கு இருக்கும் தெளிவுதான் அபத்தம். இதற்கு சார்த்தர் நல்ல விளக்கம் கொடுத்திருக்கார்.*

### த்ரூஃபோ

“நமது வாழ்வின் நிம்மதியற்ற கணங்களில், நாம் நம்பிக்கை இழந்திருக்கும் தருணங்களில், நம் உடல் ஆரோக்கியம் குன்றியிருக்கும்போது, சில சமயங்களில் ஒரு திரைப்படம் நம் நினைவிற்கு வந்து நம்முடைய உள்மனதை ஒளிர்விக்கும், ஒரு காட்சியோ, ஒரு வசனமோ போதும், நமக்குத் தைரியம் அளிப்பதற்கு, வாழ்வில் பிடிப்பு ஏற்படுவதற்கு, ஆனந்தத்தின் சுவையை அறிவதற்கு.


இது போன்ற சக்தியைக் கொண்ட திரைப்படங்கள் எண்ணிக்கையில் அதிகம் இல்லை. அவை ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானவையாக இருந்தாலும், அவற்றுக்குப் பொதுவான ஒரு தன்மை இருக்கிறது. பாடலின் மெட்டுப் போன்ற ஒரு பொதுவான தன்மை.

இந்த காரணத்திற்காகவே த்ருஃபோவின் படைப்புகளில் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட படங்களை விரும்பியவர்கள் உலகின் பல பாகங்களில் இருக்கிறார்கள்

என்று நான் உறுதியாகச் சொல்வேன்”

–ழான் கோலே

*இந்தப் புத்தம் காம்யு 1942இல் எழுதினார். ரொம்பப் பரவலாக நிறையப் பேர் படித்தார்கள். முதலில் படிக்கும் போது எல்லோருக்கும் வித்தியாசமாக இருந்தது. சில பேருக்கு வித்தியாசமாக இருந்ததால் பிடித்திருந்தது. சில பேருக்கு வித்தியாசமாக இருந்ததால் பிடிக்கவில்லை. இருந்தாலும் எல்லோரும் ஆவலுடன் படித்தார்கள். ரொம்பப் பரவலாக பேசப்பட்ட புத்தகம். சார்த்ர் “அந்நியன்: ஒரு விளக்கம்” என்ற பெரிய கட்டுரை எழுதுகிறார். இந்த அந்நியன் புத்தகத்தை எப்படிப் புரிந்துக் கொள்வது. இதுவரை பிரெஞ்சு இலக்கியத்தில் சொல்லபடாத நிறைய விஷயங்கள் இருந்தாலும். அவர் வால்டேர் மாதிரி பிரெஞ்சு பாரம்பரியத்தில் வந்த* Moralist, *அதாவது ஒழுக்கநீதி போதிப்பவர்கள் வரிசையில் இருப்பதாகப் பார்க்கிறார். ஒழுக்க நீதியின் அடிப்படையில் அதைப் பார்க்கிறார். ஆகவே அபத்த மனிதனின் அபத்தம் என்பதற்குப் பெரிய விளக்கம் கொடுத்திருக்கிறார். ஒரு டெலிபோன் பூத் கண்ணாடிக் கூண்டு. கண்ணாடி கூட்டில் இருப்பவர் பேசிக்கொண்டு இருக்கிறார். அடுத்த ஆள் நீங்கள் வெளியில் நின்று கொண்டிருக்கிறீர்கள். அவர் பேசி முடித்தவுடன் நீங்கள் போகவேண்டும். உள்ளே பேசிக்கொண்டிருப்பவரின் முகபாவம், கை, கால் ஆட்டறது, அவர் முகத்தில் இருக்கும் கோபம், சிரிப்பு இவை எல்லாம் வெளியிலிருந்து பார்க்கும் போது கோமளித்தனமாக இருக்கும். அவர் என்ன சொல்கிறார் என்று அந்தக் கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது புரியாது. பார்வைரீதியாக ஏதோ தெரியும். அதனுடைய அர்த்தம் புலப்படுவதில்லை. அவர் என்ன சொல்கிறார் என்று காதில் வைத்துக் கேட்க முடிந்தால் அதனுடைய அர்த்தம் புலப்படும். இதுதான் அந்நியனுடைய*



மனச்சாட்சி. அவன் பார்த்ததை எல்லாம் பதிவு செய்கிறான். அர்த்தம் என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. நாம் தெரிந்து கொள்ள முயலலாம். அது சரியா தவறா என்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால் அபத்த மனிதனுக்கு முக்கியமானது என்னவென்றால் அன்றாடப் பொழுதுகளில் நிகழக்கூடிய சம்பவங்களின் அடிப்படையில் ஒரு புதிய அனுபவம். அவனுக்கு அதுதான் முக்கியம்.

'அந்நியன்' தொடக்கத்தில் முதல் வரிகள்: "இன்று அம்மா இறந்து விட்டாள். நேற்றாகவும் இருக்கலாம்". தொடக்கத்தின் தொனி: இன்றைக்கும் நேற்றுக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. அடுத்து, "இதற்கொன்றும் அர்த்தமில்லை" என்று வருகிறது. 'காலிகுலா' என்ற அவருடைய நாடகத்தின் (இதே காலகட்டத்தில் எழுதப்பட்டது) முதல் வசனம். "மனிதர்கள் இறக்கிறார்கள்; அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை" ஆகவே, வாழ்க்கையின் அர்த்தமின்மையும், சாவின் நிச்சயத்தையும் கோடிகாட்டுகிறார். அபத்த மனிதனின் பார்வை சரியா, தவறா என்று நியாயப்படுத்துவதில்லை. நியாயப்படுத்துவது புரிந்துகொள்ளும் முயற்சியைப் பாதிக்கிறதென்று வேறொரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருக்கிறார். இதற்கு அடுத்த நாவலான 'கொள்ளை நோயில்', தனிமனிதன் ஒருவன் என்ற தளத்தை விரிவுபடுத்தி பரந்த சமூகத்தின் பல பாத்திரங்களிடையே நிலவும் கருத்து மோதல்களையும், அவற்றினூடாக மனிதனின் மனசாட்சி எப்படியெல்லாம் செயல்படுகிறது என்பதையும் அலசுகிறார். அடுத்து 'வீழ்ச்சி' (Fall) என்ற நாவல். இதில் தனி மனிதன் ஒருவனுக்கு ஏற்படும் குற்ற உணர்வின் பல பரிமாணங்களின் வழியாக மனித மனசாட்சி குறித்த சில கேள்விகளை எழுப்புகிறார். ஆகவே, அவருடைய சிந்தனைகளின், தேடல்களின் முதல் கட்டமாக 'அந்நியனை'க் கருதலாம்.

தொடக்கத்தில் 'இன்று அம்மா இறந்து விட்டார்' என்கிறார். மூன்று வரி தாண்டி 'தாயார் மரணம்' என்கிறார். அம்மாவின் பெயர் என்னவென்று தெரியாது. சில இடங்களில் அம்மா என்பார் சில இடங்களில் தாயார் என்பார். மெர்சோ என்கிற பாத்திரம் தனிப்பட்ட முறையில் உட்கார்ந்து இருக்கும்போதுதான் அம்மா என்ற சொல்லைப் பயன்படுத்துகிறான். மற்றபடி சமுகத்திற்காகப் பயன்படுத்தும்போது தாயார் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறான். தாயார் என்பது பொதுச் சொல். அம்மா என்பது அன்பைக் குறிப்பது. அம்மா என்பது அவனுக்கு



**செவாலியே விருது**

*மட்டும்தான். தாயார் என்பது பொதுச் சொல். அதை மொழிபெயர்க்கும்போது இரண்டு இடத்திலும் அம்மா என்று போட்டிருந்தாலும், இரண்டு இடத்திலும் தாயார் என்று போட்டிருந்தாலும் கதை மாறப் போவதில்லை. ஆனா நடையின் அழகு அங்குதான் வருகிறது. அந்த ஆசிரியர் மனதில் எதை வைத்து எழுதினாரோ, எனக்குத் தெரியாது. நிறைய ஆய்வுகளைப் படித்தபின்புதான் காரணத்துடன்தான் அப்படிச் செய்திருக்கிறார் என்பது தெரிகிறது. இதுபோன்ற தரவுகள் மொழிபெயர்ப்பாளருக்கு ரொம்ப முக்கியம். எந்த ஒரு நாவலையும் மொழிபெயர்க்கும்போது அதை எழுதிய படைப்பாளி என்ன நினைத்தார் என்ன அடிப்படையில் எதைச் சொல்லவந்தார், என்பதைப்பற்றி முழுமையாக தெரியுமா என்பது கேள்விக்குறிதான். கூடுமான வரை தெரிந்து கொள்ள முயற்சி செய்கிறோம். காம்யு பற்றிய உன்னுடைய அபிப்பிராயம்தானே என்று சொல்வார்கள். அவர் அப்படியும் எழுதியிருக்கலாம் என்றும் சொல்வார்கள். அது வேறு விஷயம். காம்யு, சார்த்ர் என்று பிரபலமாகி விட்ட ஆசிரியர்களை மொழிபெயர்க்கும்போது இவர்களெல்லாம் 20ஆம் நூற்றாண்டு மத்தியில் எழுதியவர்கள். நான் இறுதியில்தான் மொழிபெயர்ப்பு செய்கிறேன். இந்த படைப்புகளுக்கும் மொழிபெயர்ப்புக்கும் 40 வருடங்கள் இடைவெளி இருக்கிறது. இந்த 40 வருடஙகளில் இதைப் பற்றி நிறையப் பேசியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். அதனால் அதனுடைய புரிதல் ஆழமாக இருக்கும். அதன் அடிப்படையில் நான் மொழிபெயர்ப்பு செய்தால் இன்னும் ஆழமாகச் செய்யமுடியும். இன்றைக்கு சமகாலத்து எழுத்தாளர்களை மொழிபெயர்ப்பு செய்யும் போது அப்படிச் செய்ய வாய்ப்பில்லை. ஆனால் சமகாலத்து எழுத்தாளர்களுடன் கடிதத் தொடர்பு இருக்க முடியும். எப்படியிருந்தாலும் நன்கு பரிச்சயம் இல்லாத ஒரு வரலாற்றுப் பின்னணியிலிருந்து வரும் மொழி, பண்பாடு சார்ந்த படைப்பை எடுத்துக்கொள்ளும் போது, அந்தப் பின்னணிகளை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டியது ஒரு முக்கியமான கடமையாகும் மொழிபெயர்ப்பாளர்க்கு. மொழிபெயர்ப்பாளர் அதைப் புரிந்து கொள்ளவேண்டும், தன்னுடைய மொழியை, நடையைப் பற்றி கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும், அதனுடைய வாசகத் தன்மையைக் கெடாமல் இருக்கவேண்டும். வாசக தன்மைகருதி மூலக்கதையை மாற்றமுடியாது. அதிகம் சேர்க்கவும், குறைக்கவும் முடியாது. இது அத்தனைக்கும் என்னுடைய அனுபவத்தில் கண்டது மொழிபெயர்ப்பு முழுக்க முழுக்க ஒரு தனி மனிதன் முயற்சியே அல்ல. இந்த மொழிபெயர்ப்புகளுக்காக பெரிய பாராட்டுக்கள் கொடுத்தார்கள். அதற்கு நன்றிக் கடன்பட்டுள்ளேன். ஆனால் அது முழு உண்மையாகாது. அந்தப் பாராட்டுக்கள் எல்லாம் என் உடன் ஒத்துழைத்தவர்களுக்கும் போய்ச் சேரும். அந்நியன் எழுதிமுடித்தவுடன், அதைத் திருப்பிப் படித்து விட்டு. நான், ராமகிருஷ்ணன், நந்தனம் ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ் பேராசியராக இருந்த நாராயணன், எஸ்.வி. ராஜதுரை இவர்களுடன் நான் படிக்கும்போது இவர்கள் தங்களுடைய கருத்துகளை என்னிடம் சொல்வார்கள். இந்தத் தரவுகள் ரொம்ப முக்கியமானவை. அவர்கள் கருத்துகளை நான் கேட்கலாம், கேட்காமலும் போகலாம். இருந்தாலும் அவற்றின் மூலம் அகவழிப் பார்வையும் புறவழிப் பார்வையும் கிடைக்கிறது. புறவழிப் பார்வை ரொம்ப முக்கியம். நான் செய்யவேண்டிய மொழிபெயர்ப்பு என்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டுவதற்காக இல்லை. காம்யு என்ன சொன்னாரோ, அதை அப்படியே தமிழில் கொடுக்கவேண்டும் என்ற ஆர்வம். அவர் தமிழில் எழுதியிருந்தால் எப்படி எழுதியிருப்பார் அந்த அளவிற்கு அதைக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆர்வம். அந்நியன் மிக நன்றாக வந்துள்ளது என்று பலர் சொன்னார்கள் நிறையப் பேரைத் தொட்டு விட்டது, நிறையப் பேருக்குப் போய்ச் சேர்ந்து விட்டது. அதற்கு முதற்காரணம் நான் அல்ல; காம்யுதான் மூலத்திற்குப் பொறுப்பாளி. தமிழில் கொண்டு வந்ததற்கு நான் ஒரு காரணம். மேலும் என்னுடைய பதிப்பாசியர். இது ஒரு கூட்டு முயற்சி.*

**கேள்வி : இதனுடைய எதிரொலிகள் எப்படி இருந்தன?**

**பதில் :** *புத்தகம் வெளிவந்தபோது பாண்டிச்சேரியில் பிரெஞ்சு இன்ஸ்டிடூயுட்டில் டாக்டர் குரோ என்பவர் இருந்தார். தமிழ்நன்றாகத் தெரிந்த ஒரு பிரெஞ்சு அறிஞர். அவர் தமிழில் நிறையப் படித்திருக்கிறார். பரிபாடல், திருக்குறள் காமத்துபால் பிரெஞ்சில் மொழி பெயர்த்திருக்கிறார், தேவாரம் பிரெஞ்சில் மொழிபெயர்த்ததை மேற்ப்பார்வை பார்த்திருக்கிறார். இப்பொழுது ஜி. நாகராஜன் படைப்புகளை பிரெஞ்சில் மொழிபெயர்த்திருக்கிறார். கூடிய சீக்கிரம் வந்து விடும். அவருடன்*



**இரண்டு செவாலியே விருதுகள்**

1. கலை இலக்கிய செவாலியே விருது
   - Chevalier, Order of Arts and Letters.
2. கல்வித்துறை செவாலியே விருது
   - Chevalier, Order of Academic Honours.

*சேர்ந்து சில வேலைகள் பகிர்ந்துகொண்டிருக்கிறேன். அவர் அறிமுகம் எப்படி நடந்தது என்றால், அந்நியன் முடிந்தவுடன் அலையன்ஸ் டைரக்டர் தோமா பாண்டிச்சேரி போய் அவரைப் பார்த்து அவரிடம் அந்நியன் புத்தகத்தைக் கொடுத்தார். "நீங்கள் தமிழ் படிக்கிறீர்களே, தற்கால 20ஆம் நூற்றாண்டு பிரெஞ்சு இலக்கியத்தை ஸ்ரீராம் மொழிபெயர்த்திருக்கிறார். நேரடியாக பிரெஞ்சியிலிருந்து மொழிபெயர்த்திருக்கிறார். ஆங்கிலம் மூலமாக வரவில்லை. இதைப் படித்துப் பாருங்கள்" என்று கொடுத்தார். அவருடன் பிரான்சில் தமிழ் கற்றுக்கொடுத்திருக்கும் பேராசிரியர் காசி அவர்கள் இருவரும் படித்தார்கள். மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். பிடித்திருக்கிறது என்று தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். தோமாவிடம் மொழிபெயர்ப்பாளரைப் பார்க்கவேண்டும் என்றார் குரோ. பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் வந்திருக்கும் நல்ல மொழிபெயர்ப்பு. அவரை சந்திக்கவேண்டும் என்றார். அவர் என்னிடம் அதைச் சொன்னார். "அவரை வரச் சொல்லுங்கள், என்னை மட்டும் சந்தித்தால் போதாது, தமிழில் என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள தமிழ் நிறுவனத்தைச் சாராமல் வெளியில் தனிப்பட்ட முறையில் சிறுபத்திரிக்கை வழியாகவும், வேறு தனிப்பட்ட முறையிலும் இயங்கிக்கொண்டு இருக்கக்கூடிய பெரிய இளைஞர் சமூகம் இருக்கிறது. இந்த இளைஞர் சமூகம் வித்தியாசமான, துடிப்பானவர்கள். இவர்களிடம் நிறைய விஷயங்கள் இருக்கிறது. இவர்களுக்கு ஊக்கம் வெளியில்தான் கிடைக்கிறது. தனிப்பட்ட முறையில் செய்வதற்கு பொருளாதார வசதி கிடையாது. வேறுவிதமான ஆதரவும் கிடையாது. இதனால் ஆர்வம் காட்டும் அவர் இவர்களைச் சந்திப்பது ரொம்ப முக்கியம். இங்கு என்ன நடக்கிறது என்று ஒரு பார்வை கிடைக்கும்" என்று நான் சொன்னேன். திடீரென்று ஒரு நாள் அவரைச் சென்னைக்கு தோமா வரவழைத்தார். நாங்கள் அலையன்ஸ் பிரான்சேஸில் கூட்டம் ஏற்பாடு செய்து கூடுமானவரை நிறையப் பேரை வரவழைத்தோம். அன்றைக்கு ராமகிருஷ்ணன், ஞானக்கூத்தன், சுகுமாரன், திலீப்குமார், வைத்தீஸ்வரன், இன்னும் நிறைய எழுத்தாளர்கள் வந்தார்கள். அலையன்ஸ் டைரக்டர் சொன்னார் நல்ல சந்திப்பாக இருக்கிறது. அன்று மாலை விருந்துக்கு வரவேண்டுமென்று எங்களை அழைத்தார். அதில் ஆரம்பித்து அவருடன் தொடர்பு ஏற்பட்டது.*


*அடுத்த மொழிபெயர்ப்பு அந்த்வான் - து - செந்த் எக்சுபெரியின் 'குட்டி இளவரசன்'. இதற்கு சென்னை அலையன்ஸ் பிரான்சேஸ் மூலம் மொழிபெயர்ப்புகளை வரவேற்று சுற்றறிக்கை அனுப்பினோம். வந்த பிரதிகளிலேயே நன்றாக இருந்த மொழிபெயர்ப்பை அனுப்பியவர் புதுச்சேரியில் உள்ள மதனகல்யாணி அவர்கள். அவருடன் பதிப்பாளர் ராமகிருஷ்ணனும் நானும் அமர்ந்து சில திருத்தங்களைச் செய்தோம். அவற்றைப் பார்த்த பிரெஞ்சு அறிஞர் குரோ இந்த மாற்றங்கள் மிகவும் அவசியம் என்றும், அவற்றைத் தானும் எங்களுடன் பார்ப்பதில் தனக்கு இசைவு உண்டு என்றும் சொன்னார். தமிழ் நன்றாகத் தெரிந்த இந்த பிரெஞ்சு அறிஞரின் ஆழ்ந்த பிரெஞ்சு இலக்கிய அறிவை எங்களுடன் பகிர்ந்துகொண்டார். குரோ, ராமகிருஷ்ணன், நான் நாங்கள் மூவருமாகச் சேர்ந்து மூன்று நாட்கள் இரவு முழுவதும் இந்த மொழிபெயர்ப்பை விவாதித்தது என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். முக்கியமான பல திருத்தங்கள் எவ்வளவு தேவைப்பட்டன என்பது ஆச்சரியமாக இருந்தது.*

*மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் ரொம்ப எளிமையாக இருக்கிற அந்த வரிகளில் ஆழ்ந்த கருத்துக்கள் இருக்கும். குட்டி இளவரசன் புத்தகம் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு ஆழமான கருத்து இருக்கும். அவ்வளவு கருத்துகள் உள்ளடங்கிய புத்தகம் அது. குழந்தைகளுக்கான புத்தகம் இல்லை. ஆறு வயதில் அதைப் படித்தீர்கள் என்றால் அதன் புரிதல் வேறு. 60 வயதில் படித்தீர்கள் என்றால்*

அதனுடைய புரிதல் வேறு. உலகத்தில் இன்று பைபிளுக்கு அடுத்தபடி அதிகமான மொழிகளில் வெளிவந்த புத்தகம் குட்டி இளவரசன். ஸ்பெயினில் பார்த்தோமானால் ஸ்பானிஷ் மொழியில் வந்திருக்கிறது. கடாலென் என்ற மொழியில் வந்திருக்கிறது, இன்னொரு வட்டார மொழியிலும் வந்திருக்கிறது. ஸ்பெயின் மொழியைச் சார்ந்த இரண்டு மூன்று வட்டார வழக்குகள் இருக்கின்றன.

இது எத்தனை பிரபலம் அடைந்திருக்கிறது என்பது வியப்பாக இருக்கிறது. முதலில் மொழிபெயர்த்து புத்தகத்தை வெளியிட்டபோது காலிமார் பதிப்பகத்தின் உரிமம் வாங்கித்தான் போட்டோம். காலிமார் பதிப்பகத்திற்கு யார் கடிதம் எழுதினாலும், இ-மெயில் மூலம் கேட்டாலும், கடைசியாக எந்த நாட்டிலிருந்து உரிமம் வாங்கினார்கள். எந்த நாட்டை சேர்ந்தவர்களால், எந்த மொழியில் வரப்போகிறது என்ற தகவலும் தெரியவரும்.

ஜப்பானில் ஒருவர் இருக்கிறார். அவர் 'குட்டி இளவரசனின்' ரசிகர். இந்தப் புத்தகத்தின் உள்ள படங்களை அப்படியே போடவேண்டும். உங்கள் சொந்தப் படங்களையோ அல்லது வேறு படங்களையோ போடக்கூடாது. படங்கள் இல்லாமலும் போடக்கூடாது. அந்தப் படங்களை அப்படியே போட வேண்டும். எந்த மொழியில் பார்த்தாலும் மொழி புரியவிட்டாலும், அந்தப் படங்கள் புரியும். படங்களுக்கு அவ்வளவு மதிப்பு. இந்த ஜப்பானியருக்கு விசித்திரமான பொழுதுபோக்கு. எல்லா மொழிகளிலும் வந்திருக்கும் புத்தகங்களிலும் அவர் இரண்டு பிரதிகளை வைத்திருக்கிறார். அவர் என்ன செய்தார் என்றால் இந்தப் புத்தகம் தமிழில் வரப்போகிறது என்று தெரிந்தவுடன், எங்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். க்ரியா ராமகிருஷ்ணன் பெயரைக் குறிப்பிட்டு "தமிழில் வரப்போகிறது என்று கேள்விப்பட்டேன். எப்ப வந்தாலும் எனக்கு இரண்டு பிரதிகளை அனுப்பிவையுங்கள். அந்தப் பிரதிக்கு உண்டான ரூபாய், அதை அனுப்புவதற்கு உண்டான செலவையும் இதை அத்தனையும் சேர்த்து ஒரு செக் ஒன்று அனுப்பியிருக்கிறேன்". அதில் எவ்வளவு என்று போடவில்லை என்று பிளாங்க் செக் ஒன்றை அனுப்பிவைத்தார். "எவ்வளவு என்று நீங்கள் நிரப்பிக் கொள்ளுங்கள்" என்று அதில் எழுதியிருந்தார். ராமகிருஷ்ணன் சொன்னார்: "ரொம்ப ஆசையாகக் கேட்கிறார். நம்முடைய நினைவாக இன்னொன்றும் சேர்த்து, கையெழுத்திட்டு அனுப்புவோம்". 'குட்டி இளவரசன்' வருவதற்கு முன்னால் அந்நியன் வந்து விட்டது. அந்நியனுக்கு நல்ல வரவேற்பு, ஆனால் நிறையப் புத்தகங்கள் அப்போது விற்கவில்லை. முதல் முயற்சி பொருளாதார வெற்றி என்று சொல்லமுடியாது. ஓரளவு நஷ்டம் இருந்தாலும் ஆர்வத்துடன் செய்து கொண்டிருக்கிறார் ராமகிருஷ்ணன். ஆனால் அதை வெளியிடுவதற்கு விஷயம் தெரிந்தவர்கள் வட்டாரத்தில் ஊக்கம் கிடைத்தது. நான் மதிக்கக்கூடிய ஆட்கள், நண்பர்கள் திலீப்குமார், ந. முத்துசாமி போன்றவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர்கள். மொழிபெயர்ப்பு வந்தவுடன் நண்பர்கள் அசோகமித்திரன், சுந்தர ராமசாமி ஆகியோர் பாராட்டினார்கள். எல்லாம் நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள்.



**கேள்வி: மூன்றாவதாக "மீள முடியுமா" வெளி வந்தது அல்லவா?**

**பதில் :** இவற்றையெல்லாம் பார்த்தபோது பாண்டிச்சேரிக்கு என்னுடன் வந்த வேதியல் நிபுணர் (காம்யுவின் நண்பர்) சொன்னது நினைவுக்கு வந்தது. அந்நியனை முதலில் அறிமுகப்படுத்தி விட்டுப் பிறகு காம்யுவின் மற்ற படைப்புகளை செய்யும்படி

*என்னிடம் சொல்லியிருந்தார். என்னைச் சுற்றியிருந்த சில நண்பர்களும் அதையே என்னிடம் சொன்னார்கள். ஆனால் பிரெஞ்சு இலக்கியம் காம்யுவில் ஆரம்பித்து காம்யுவில் முடிகிறது என்றில்லாமல், அதன் விரிவான களத்திலிருந்து வேறு சில வகையான எழுத்துகளை ஓரளவு தமிழில் அறிமுகப்படுத்துவது நல்லதென்று எனக்குத் தோன்றியது. காம்யுவின் சமகாலத்தவரும், சிந்தனை உலகில் அவரைவிடவும் பிரபலமானவருமான ழான். போல் சார்த்ர் அவர்களின் படைப்பு ஒன்றை மொழிபெயர்க்கலாம் என்று நினைத்தேன்.*

*சார்த்ர் பற்றி படித்திருக்கிறேன். சார்த்ரைப் படிக்காமல் இருக்கமுடியாது. படிக்கிறதுக்கு ரொம்ப சிரமான ஆள். ஏன் சிரமான ஆள் என்றால் தத்துவ சிந்தனைத் துறையில் பார்க்கும்போது ஆழமான சிந்தனையாளர். தத்துவ சிந்தனை என்பது பிரான்சில் ஒரு பெரிய துறையாக வளர்த்திருக்கிறது. பாரம்பரியம் மிக்க துறை. அந்தக் காலக்கட்டத்தில் அறிவுஜீவிகள் மத்தியில் ரொம்பப் போற்றப்பட்ட அறிவுஜீவி அவர். தத்துவ சிந்தனை அடிப்படையில் அவர் எழுதின புத்தகங்கள் இலக்கியத் தரமான புத்தங்கள். நான் அவற்றில் சில பிரெஞ்சில் படித்திருக்கிறேன். ஆங்கிலத்தில் படித்திருக்கிறேன். 500, 600 பக்கங்கள் இருக்கிற அந்தப் புத்தகங்களில் 30 பக்கங்கள் தாண்டுவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும். அவற்றைப் புரிந்து கொள்ள மேற்கத்திய தத்துவச் சிந்தனை பற்றிய வரலாற்று ரீதியிலான அறிவுதேவை. சார்த்ர் படைப்புகளில் எதை மொழிபெயர்க்கலாம் என்று யோசிக்கும்போது அவருடைய நாடகத்தை மொழிபெயர்க்கலாம் என்று தோன்றியது. நாடகங்களைப் பற்றி அவரே சொல்லியிருக்கிறார்.*


**ப்ரெஸ்ஸோன்**

திரைப்படம் என்கிற படைப்பில் பிம்பங்களின் ஒளி நிழல், ஒலிப் பின்னணியின் சப்தம் -சப்தமின்மை. நடிப்பின் அசைவுகள்- அசைவின்மை என்ற கூறுகள் ஒன்றுசேர்ந்து ஒரு இயக்கம் ஏற்படுகிறது. இந்த இயக்கத்தினுள்ளே ஒரு குறிப்பிட்ட தாளகதி அதை இயக்குகிறது. படத்தின் ஒரு தொடர் நிகழ்ச்சியாகத் திரையில் ஓடும்போது வெளிப்படுகிறது. இதுதான் ப்ரெஸ்ஸோன் குறிப்பிடும் அகச்சலனம்...

“மனிதனின் முகத்தைச் சித்தரிக்கும் கலைஞன் மனிதனுக்கு ஆற்ற வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது. அவனுடைய இயல்பான கண்ணியத்தைக் காட்டக் கலைஞன் தவறினாலும், குறைந்தபட்சம் அவனுடைய மேலோட்டமான தன்மையையும், அவனுடைய அறிவீனத்தையும் மறைக்கவாவது முயல வேண்டும். இந்த உலகத்தில் எந்த மனிதனுமே அறிவீனனாகவோ, மேலோட்டமானவனாகவோ இருக்கமாட்டான் என்பது சாத்தியமே. சஞ்சலமுற்று இருப்பதால் அவன் அப்படித் தோன்றக் கூடும். ஏனென்றால், அவன் நிம்மதியாக இருப்பதற்கு ஏற்ற ஒரு சிறு மூலைகூட அவனுக்குக் கிடைக்காமலேயே போயிருக்கும்.”

– ஜோசப் வான் ஸ்டென்பெர்க்

*சிறுகதை, நாவல் என்ற இலக்கிய வடிவங்களில் ஆசிரியரின் கருத்துகள் நேரடியாகவோ, ஒரு பிரதான பாத்திரம் வழியாகவோ வலியுறுத்தப்படும். நாடகங்களில் உரையாடல்களும், பாத்திரங்களிடையே கருத்துப் பரிமாற்றங்களும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. கருத்துகளின் இந்த மோதல் சுவாரஸ்யமான ஒரு இறுக்கத்தை ஏற்படுத்த முடியும். எதிராளியைப் பேச வைப்பத்ற்கு நாடகத்தில் வாய்ப்பு அதிகம். ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தை ஏற்று பாத்திரம் பேசும்போது அவனை கேள்வி கேட்பதற்கு அவனை எதிர்த்துப் பேசுவதற்கு ஒரு சரியான பாத்திரம் நாடகத்தில் தான் கிடைக்கும். அது அவசியம். ஏன் என்றால் எந்தவொரு சித்தாந்தத்தையும் எதிர்த்துக் கேள்வி கேட்க வேண்டும். அப்போதுதான் ஆசிரியர் பதில் சொல்ல முடியும். எல்லா எதிர்ப்புகளையும் தாங்கினால்தான் சித்தாந்திற்கு அடிப்படையில் அர்த்தம். நாடகத்தில் மூன்றாவது மனிதனின் பார்வைக்கு வாய்ப்பும் இருக்கிறது. சார்த்ர் நாடகங்களில் ஒரு வரலாற்றுப் பின்னணி இருக்கும். பிரான்ஸின் அரசியல் பின்னணி, 19, 20ஆம் நூற்றாண்டின் அரசியலில் நிறைய மாற்றங்கள். ஒரு ஆட்சி கவிழ்ந்து, இன்னொரு ஆட்சி வந்தது. இது மாறி மாறி வந்தது. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு எதுவுமே நிலைத்து நிற்கவில்லை. இதைத் தவிர 20ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் முதல் உலகப் போர், பிறகு இரண்டாம்*



*உலகப் போர். இதன் விளைவாக மனிதனுக்குப் பல விஷயங்களில நம்பிக்கை இல்லாமல் ஆகிவிட்டது. வாழ்க்கையில் துடிப்பு இல்லாமல் போய்விட்டது. இதைத் தவிர பிரெஞ்சுக்காரர்களுக்குப் பெரிய பிரச்சினை என்னவென்றால் அப்போதைய ஜெர்மனி ஆதிக்கம். ஜெர்மனி ஆதிக்கம் கீழ் நிறையப் பேர் ஒடுக்கப்பட்டுவிட்டார்கள். பல புரட்சி இயக்கங்கள் தோன்றின. இந்த மாதிரி சூழல் இருக்கும்போது புரட்சியாளர்கள் பற்றி நாடகம் எழுதினால் என்ன என்று நினைத்தார். புரட்சியாளர்கள் கருத்து என்ன, அவர்கள் செயல்பாடுகள் என்ன என்பதைப் புரிந்துக்கொள்வதற்கு அவர்களின் வரலாற்றுப் பின்னணி தேவைப்படுகிறது. இன்னும் சில நாடகங்களில் கிரேக்கத் தொன்மத்தின் பின்னணி உள்ளது. இதைத் தமிழில் மொழிபெயர்த்தால் சராசரித் தமிழ் வாசகனுக்கு நிறைய விஷயங்கள் போய்ச் சேராது. அதனுடைய முக்கியமான உள் அர்த்தங்கள், அவர் சொல்ல வந்த விஷயங்கள் வார்த்தைகளுக்குப் பின்னால் ஒளிந்திருக்கிற விஷயங்கள் தெரியவேண்டும் என்றால் அதில் இருக்கிற பின்குறிப்புகள் எல்லாம் படிக்கவேண்டும். அப்போது “மீள முடியுமா” நாடகம் கவனத்துக்கு வந்தது. பொதுவாக மனிதனுக்கு எற்படக்கூடிய பிரச்சனைகளைப் பற்றிப் பேசக்கூடிய ஒரு நாடகம். இந்த நாடகத்தைப் பற்றிச் சொல்லும் போது, யூனிவெர்ஸாலிடி என்று சொல்வார்களே, எல்லோருக்கும் போய்ச் சேரக்கூடிய ஒரு தன்மை, பொதுவான விஷயம், அந்த* universality *இதில் கிடைத்தது. இதை மொழி பெயர்க்கலாம் என்று ஆர்வம் ஏற்பட்டது. அப்போது பேராசிரியர் குரோ சொன்னார்: “சார்த்ரைப் புரிந்து கொள்ளத் தொடங்கும்போது நாடகங்களைப் படிப்பது நல்லது. எடுத்த எடுப்பிலேயே நாவல், கட்டுரை மூலம் அணுகுவது சிரமமாக இருக்கலாம். இந்த நாடகத்தில் குறிப்பாக வரலாற்று, கிரேக்க தொன்ம பின்புலங்கள் எதுவும் கிடையாது. எளிமையான சொற்கள், ஆழமான சிந்தனை. மொழிபெயர்ப்பில் சில பிரச்சினைகள் வரலாம். ஆனால் உன்னால் முடியுமென்று நினைக்கிறேன். சந்தேகங்கள் வந்தால் நான் உனக்கு உதவுகிறேன்” என்றார்.*

**கே: இந்த நாடகம் மொழிபெயர்ப்பதற்கு முன்னால் பிரான்ஸுக்குப் போய் வந்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த அனுபவம் எப்படி இருந்தது?**

**பதில் :** *அப்போது இன்னொரு முக்கியமான நிகழ்வு நடந்தது. பிரான்ஸில் வலதுசாரி ஆட்சி மாறி சோஷலிஸ அரசு நடந்து கொண்டிருந்த சமயம். 14 ஆண்டுகள் தொடர்ந்து குடியரசுத் தலைவராக இருந்த ஃபிரான்ஸ்வா மித்தரான் அமைச்சரவையில் ழாக் லாங்க்* (Jack Lang) *என்று ஒரு அமைச்சர் இருந்தார். சுவாராசியமான மனிதர். கலை, இலக்கியத்திற்கு மிகப் பெரிய ஊக்கம் கொடுத்து ஆதரித்தவர். நம் நாட்டில் மாநில அவையிலும், மத்திய அவையிலும் அந்த மாதிரி செயல்படும் அமைச்சர்கள் இருந்தார்கள் என்றால் இந்தியாவின் கலை இலக்கிய வளங்கள் பெரிய அளவில் பரவியிருக்கும். எனென்றால் இங்கு நிறைய வளங்கள் இருக்கிறது. அவற்றைப் பற்றி சரியாக நாம் எடுத்துச் சொல்லவில்லை. அவர் நிறைய விஷயங்களை அறிமுகப்படுத்தினார். 1985இல் அவர் புதியதாக அறிமுகப்படுத்தின விஷயம் என்னவென்றால், உலகத்தில் மற்ற நாடுகளில் பிரெஞ்சுப் படைப்புகளைத் தங்களுடைய மொழிகளில், மொழிபெயர்ப்பு செய்பவர்களை பிரான்ஸ்க்கு வரச் செய்து மூன்று மாதம் அங்கு இருக்க வசதி செய்து பிரான்ஸைப் பற்றித் தெரிந்துக்கொள்ளச் செய்வார்கள். பிரான்ஸ்க்கு போய் வருவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். மூன்று மாதங்கள் தங்கியிருப்பதற்கு வசதியை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். அந்த மூன்று மாதத்தில் இலவசமாக நூலகம் போய்வருவதற்கும், எழுத்தாளர்களைச் சந்திக்க வேண்டும் என்றால் எழுத்தாளரிடம் பேசியும் ஏற்பாடு செய்துவிடுவார்கள். அந்த மூன்று மாதம் அங்கு இருக்கும் போது பிரெஞ்சு இலக்கியத்தையும் கலாசாரத்தையும், நன்றாக சுவாசிக்க முடியும். அதன் அடிப்படையில் இங்கு வந்து மொழிபெயர்ப்பு செய்யலாம். இது பெரிய உதவியாக இருந்தது. முதல் வருஷம் செய்யும் போது பெரிய அளவில் செய்யவேண்டும் என்று நினைத்தார்கள். ஐந்து ஸ்காலர்ஷிப் கொடுத்தார்கள். அதற்கு எல்லா மொழிகளில் இருந்தும் நிறையப்பேர் விண்ணப்பம் செய்தார்கள். ஆஸ்திரேலியா, மெக்சிகோ, ஜப்பான், அர்ஜென்டைனா, சைனா எல்லா நாடுகளிலிருந்தும் வந்தது. இதைப் பற்றி எனக்குத் தெரியாது. டில்லியிலிருந்து பிரெஞ்சு தூதரகம் அலையன்ஸ் பிரான்சேஸ் டைரக்டருக்கு ஒரு கடிதம் எழுதி “உங்கள் ஸ்ரீராம் தமிழில் இரண்டு படைப்புகளை மொழிபெயர்த்திருக்கிறார்,*



**திலீப்குமார், எஸ். ராமகிருஷ்ணன் ஆகியோருடன் ஸ்ரீராம் தம்பதியர்**

*அவர் குறிப்பிட்ட படைப்பை மொழிபெயர்க்கப் போகிறேன் என்று* Project *எழுதிக் கொடுத்தார் என்றால் இந்த ஸ்காலர்ஷிப் கிடைக்கிறதுக்கு அவரைப் பரிந்துரை பண்ண முடியும். அவரை அப்ளை பண்ணச் சொல்லுங்கள் என்றனர். நானும் அப்ளை பண்ணினேன். இதில் நம்பிக்கையில்லை. முதலில் இந்தியாவில் உள்ளவர்களுக்குக் கிடைக்கவேண்டும். அப்புறம் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கவேண்டும். முடியுமா என்று தெரியாது. அதிஷ்ர்டவசமாக இது எனக்குக் கிடைத்தது. 1985 ஒரு தடவையும் 95ல், 2005ல் மீண்டும் போனேன். இதே திட்டத்தின் மூலம் 3 முறை போய்விட்டு வந்தேன். முதல் முறை சார்த்ர்* Project *கொடுத்தேன். ஒரு நல்லவாய்ப்பு என்னவென்றால் ஒரு நாடகக் குழு 'மீள முடியுமா' நாடகத்தை அப்போது பிரான்சில் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு சின்ன அரங்கம். இந்த அரங்கம் கட்டிடத்தின் கீழ்தளம், தரைமட்டத்திற்குக் கீழே இறங்கிப் போக வேண்டும். உள்ளே குகை மாறி இருக்கும். பாறை இருக்கும். கூரை போட்டு இருப்பார்கள். கூடத்தில் நான்கு புறமும் நாற்காலி, பென்ச் அங்குதான் பார்வையாளர்கள் இருப்பார்கள். மூன்று ஷோபாக்களில் நாடகத்தின் பாத்திரங்கள் உட்கார்ந்து இருப்பார்கள். பாத்திரங்கள் பார்வையாளர்களுக்கு முன்னரே வந்து உட்கார்ந்திருப்பார்கள். அவர்களுக்கு இடையே நடக்கும் வேடிக்கையை நாம் பார்த்துக்கொண்டு இருப்போம். இந்த நாடகத்தைத் தொடர்ந்து பல வருடங்களாக மேடையேற்றிக் கொண்டிருந்தார்கள். நான் பார்த்தது 432 வது நிகழ்ச்சி. 432 நாட்கள். இரண்டு மூன்று வருஷங்கள் இது நடந்துகொண்டு இருக்கிறது. முதலில் நடித்தவர்கள் மாறிக்கொண்டே இருந்தார்கள். அதைப் பார்த்தது எனக்கு நல்ல வாய்ப்பு. நாடகத்தைப் பார்த்ததினால் மொழிபெயர்ப்புக்கு ரொம்ப உதவியாக இருந்தது. உண்மையாகவே மிகவும் பயனுள்ள ஒன்று. நாடகத்தை நடித்துக் காட்டிய விதம் நிறைய விஷயங்களை, உள் அர்த்தங்களைப் புரிய வைத்தது.*

**கேள்வி: நாடகத்தை மொழிபெயர்த்தால் அதைத் தமிழில் மேடையேற்றுவதும் சாத்தியமாகிறது என்பது நல்ல ஒரு அம்சம்தானே?**

**பதில் :** *நாடகம் ஒன்றை மொழிபெயர்ப்பதற்கு முன்னால் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பள்ளிக்கூட நாட்களில் பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்களைப்*

*புத்தகமாகப் படித்திருக்கிறேன். ஒரு அணா, இரண்டு அணா (அதாவது இன்றைய 6 பைசா, 13 பைசா) என்று விலை போட்டிருக்கும். இன்று தமிழில் எவ்வளவு நாடகங்களை அச்சு வடிவில் பார்க்க முடியும்? நாடகம் புத்தகமாக வெளிவருவது மிகவும் குறைவு. நாடகங்களுக்கு இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன: புத்தகமாக ஒரு பரிமாணம், நிகழ்கலை என்ற பரிமாணம். நாவல், சிறுகதை, கவிதை எல்லாம் அச்சாகி வெளிவரும் நிலையில் தங்கிவிடுகின்றன. ஆனால், நாடகங்கள் வெவ்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு குழுக்களினால் மேடையேற்றப்பட்டு, புதுப்புது அவதாரங்களை ஏற்கின்றன. அச்சு வடிவில் இருக்கும் நாடகம், அடுத்த சில தலைமுறையினர் தத்தம் பாணியில் மேடையேற்றுவதற்கு ஒரு ஆதாரமாக இருக்கிறது. இன்றைக்கு ஸேக்ஷ்பியர் நாடகத்தை போடுகிறவர்கள் ஸேக்ஷ்பியர் பேசின அதே பாஷையில் பேச வேண்டும் என்று அவசியம் கிடையாது. எலிசபெத்தின் இங்கிலிஷ் நிறையப் பேருக்கு இன்று புரியாது. அதை இன்றையத் தற்கால ஆங்கிலத்தில் பேசிக்கூட நடிக்கலாம். அதாவது இன்றைய பேச்சு வழக்குக்கு மாற்றிக் கொள்ளலாம்.*


*ஒரு நாடக இயக்குநரின் கற்பனை வளத்தில் அச்சு வடிவில் இருக்கும் இலக்கியப் படைப்பான நாடகம் புத்துயிர் பெறுகிறது. ஷேக்ஸ்பியரின் சில முக்கியமான நாடகங்கள் எவ்வளவு மொழிகளில் எத்தனை மாறுபட்ட வடிவங்களில், திரைப்படமாகவோ மேடை நாடகமாகவோ, வந்திருக்கின்றன என்பது வியப்பாக இருக்கும். ஆனால் இவை அனைத்துக்கும் ஷேக்ஸ்பியரின் வரிகள்தான் அடிப்படை. மொழிபெயர்ப்பிலும் இதுதான் நடக்கிறது. சார்த்ரின் "மீள முடியுமா" பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் ஒரு புத்தகம். இலக்கியப் படைப்பு ஒன்றின் தமிழாக்கம். இதை மேடையேற்றும் இயக்குநர் தன்னுடைய வசதிக்கும் தேவைக்கும் ஏற்றபடி மாற்றிக்கொள்ளலாம். ஆனால் மூலத்தின் கருத்து, தொனி, சூழல் ஆகிய அம்சங்கள் கெடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இயக்குநருக்கு உள்ள சுதந்திரத்துக்குப் பொறுப்பு என்ற கடிவாளமும் இருக்கிறது. நாடகங்களை எழுதி, அவற்றில் பங்கேற்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட தன்னுடைய இலக்கிய நண்பரை காம்யுவையும், இன்னும் இரண்டு தோழிகளையும் மனதில் கொண்டு, மூன்று பாத்திரங்களைக் கொண்ட "மீள முடியுமா" நாடகத்தை சார்த்ர் எழுதினார். ஆனால் காம்யு இதில் நடிக்க இயலாமல் போய்விட்டது. மனித உறவுகளினால் தனி மனிதனுக்கு ஏற்படும் சிக்கல்களை தத்துவார்த்த ரீதியாக ஆராயும் இந்த நாடகம் எக்காலத்துக்கும் பொருந்தும்.*

**கேள்வி : இங்கு இந்த நாடகம் நிகழ்த்தப்பட்டதா?**

**பதில் :** *தமிழில் கூத்துப்பட்டறை ஆதரவில் மூன்று நாள் அலையன்ஸ் பிரான்ஸைசில் நடத்தினார்கள். மூன்று நாட்களும் நல்ல கூட்டம். கார்சென் என்ற பாத்திரத்தில் - நடேஷ், பிரசன்னா ராமசாமி - இனேஸ், கலைராணி - எஸ்தெல் பாத்திரம். இந்த மூன்று பேரும் அங்குதான் ஒத்திகை பார்த்தார்கள். புத்தகத்தை அங்கு கொண்டுவந்திருந்தோம். நாடகம் பார்க்க வந்த நிறையப் பேர் புத்தகத்தை வாங்கிக் கொண்டுபோனார்கள். நாடகத்தையும் பார்த்து விட்டு, புத்தகத்தையும் படித்தவுடன் மறுபடியும் நாடகத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். 'அவர்களை' கூப்பிட்டு நடிக்கச் சொல்லுங்கள் என்றார்கள். நாடகக் குழுவினர் வேறு வேலையில் மும்முரமாக இருந்தார்கள். அதனால் ஒன்றும் பண்ண முடியவில்லை. ஒருமுறை பார்த்துவிட்ட நாடகத்தை மீண்டும் அசை போட்டு ரசிக்கப் புத்தகம் உதவுகிறது.*

*மொழிபெயர்ப்பு சம்பந்தமாக சில விஷயங்கள். மொழிபெயர்க்கும்போது ஒரு மொழியில் இருக்கும் வார்த்தைகள் இன்னொரு மொழியில் அப்படியே இருக்காது. இதை மொழியின் குறைபாடுகள் என்று சொல்ல முடியாது. பிரெஞ்சு வார்த்தைகள் தமிழில் இருக்காது, தமிழில் இருப்பது பிரெஞ்சில் இருக்காது. ஒவ்வொரு மொழிக்கும் அதற்கே உண்டான தனித்துவம் உண்டு. அதற்கே உண்டான குணாதிசயங்கள் உண்டு. அதற்கு ஒரு காரணம் உண்டு. மொழி எப்படி வளர்கிறது? மொழி மனிதனுடைய வெளிப்பாட்டுக்கு உண்டான அடிப்படைத் தேவை. அப்போது உங்களுக்கு என்ன என்ன தேவையோ அதுதான் அங்கு இருக்கும். இப்போது உங்கள் சமூகத்தில், பண்பாட்டில் ஒரு முறை திருமணம் செய்து கொண்டு கடைசிவரை பிரியாமல் இருந்தால் விவகாரத்து என்ற ஒரு வார்த்தை வருவதற்கே வாய்ப்பு இல்லை. விவகாரத்து என்ற நிகழ்வு நடக்க*

ஆரம்பித்தவுடன், அது வெளிநாடுகளில் நடக்க ஆரம்பித்தவுடன், நம் நாட்டிலும் அப்படி நடக்கலாம். அதற்கு சட்ட ரீதியாக அங்கீகாரம் கிடைக்கும். அதற்கு பிறகு ஜீவனாம்சம் வாங்கிக் கொள்ளலாம். இப்படி விஷயங்கள் ஒவ்வொன்றாக வரும்போது. ஒவ்வொரு நிகழ்வும் நடக்கும்போது விவகாரத்து என்று ஒரு வார்த்தை, ஜீவனாம்சம் என்று ஒரு வார்த்தை வருகிறது. சமூக நிகழ்வுகள் புதிதாக நடக்கும்போதுதான் புதிதாக வார்த்தைகள் வருகின்றன. என்னிடம் பிரெஞ்சு டிக்ஷனரி இருக்கிறது. அதில் எந்த வார்த்தை எடுத்தாலும் அது எந்த வருடம் தோன்றியது என்று போட்டிருக்கிறார்கள். வரலாற்றுப் பின்னணி. 1981 முதல் அந்த வார்த்தை இருக்கிறது. அதற்கு முன் அந்த வார்த்தை இல்லை என்றெல்லாம் தெரிய வரும். பேச்சுவழக்கில் இருக்கும் வார்த்தைகளுக்கு எழுத்து வழக்கில் வரும்போது ஒரு அங்கீகாரம் கிடைக்கும். சில சமயம் அந்தச் சொல்லுக்கு இணையான தமிழ் சொல் இருக்கும். ஆனால் அங்கு எந்த அர்த்தத்தில் அந்த வார்த்தை பயன்படுத்தப்படுகிறதோ, அதே அர்த்தத்தில் இங்கு பயன்படுத்த முடியாது. இதற்கு ஒரு உதாரணம். 'மீள முடியுமா' நாடகத்தில் மூன்று பேர் நரகத்திற்குப் போகிறார்கள். அந்த நாடகம் தொடக்கத்தில் நரகத்தில் தொடங்கிறது. முதல் காட்சியே நரகத்தில் தொடங்குகிறது. நரகத்தில் முதலில் ஒருவன் உள்ளே வருகிறான். அங்கு தனியே உட்கார்ந்திருந்து என்ன பண்ணப்போகிறோம், ஒன்றுமே பண்ணமுடியாதே என்று நினைக்கும்போது அந்த நரகப் பணியாளன் ஒரு பெண்ணை உள்ளே கூட்டிக் கொண்டு வருகிறார். அந்தப் பெண்ணிடம் நீங்கள் யார் என்று கேட்கும் போது நான் இறந்த பிறகு இங்கு வந்திருக்கிறேன். அப்படியா நீங்கள் இங்குதான் வந்தீர்களா? இங்கு என்ன பண்ணவேண்டும் என்று தெரியாது இது நரகமா, இப்படித்தான் இருக்குமா என்ற பேசிக் கொண்டிருக்கும்போது மூன்றாவதாக ஒரு பெண் வந்துவிடுகிறார். அவங்க வந்து இதுதான் நரகமா என்று மூன்று பேரும் பேசிக் கொண்டு இருக்கும்போது ஒரு பெண் இன்னொரு பெண்ணிடம் பேசிக்கொண்டிருக்கிறாள். "என்ன இது? பூமியில் இருப்பதைப் போலப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எல்லாம் இறந்து போய்விட்டவர்கள். அந்த அம்மா சொல்கிறார். எனக்கு அதிர்ச்சியா இருக்கு. நீங்கள் இது மாதிரி வார்த்தைகள் எல்லாம் சொல்லாதீர்கள். நாங்கள் பூமியில் absent". இதை நாம் மொழிபெயர்க்கவேண்டும். அப்போ நாம் இறந்தவர்கள் என்று சொல்லாதீர்கள், "இல்லாதவர்கள்" ஆகிவிட்டோம் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்லிவிட்டால் "இல்லாதவர்கள்" என்பதற்கு நிறைய அர்த்தங்கள் இருக்கிறது. பணம் காசு இல்லாதவன், வசதியில்லாதவன் என்று பல அர்த்தம். அப்போது இல்லாதவன் என்று சொல்லமுடியாது. இங்கு ஆழ்ந்த அர்த்தத்தில் சொல்கிறார்கள். அதாவது, இப்பொழுது நாம் மானிட உணர்வோடு மானிட உயிரோடு இருக்கக் கூடிய மானிட ஜென்மங்கள் இல்லை. அதெல்லாம் இல்லாமல் போய்விட்டது. பூமியில் இருக்கக் கூடிய "இருத்தல்" போய்விட்டது, இருத்தல் அற்றவர்களாகப் போய்விட்டோம். இருத்தல் அற்றவர்களாக ஏன் சொல்கிறோம் என்றால் ஒரு மொழிக்குப் புது வார்த்தைகள் இப்படித்தான் வந்துசேரும். இதற்கு ஒரு முன்னோடி இருக்கு. இருத்தலை அடிப்படையாக கொண்டு ஒரு சித்தாத்தம் உருவாகியிருக்கிறது. 'இருத்தலியல்' என்ற தலைப்பில் எஸ்.வி. ராஜதுரை ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். 'இருத்தலியல்' என்ற வார்த்தையை ராஜதுரைதான் உருவாக்கினார். இருத்தல் சம்மந்தப்பட்ட ஒரு இயல். இருத்தல் இயல் என்ற வார்த்தைக்கு தத்துவார்த்த ரீதியில் தத்துவார்த்த தொனியில் ஒரு அர்த்தம் இருக்கிறது. அது வாழ்க்கைக்கு மாறுபட்டது. வாழ்க்கை என்பது life. இருத்தல் என்பது Existance. அதை முதல் முறையாகப் படிக்கும்போது நெருடலாக இருக்கும். புத்தகத்தை முழுமையாகப் படித்துவிட்டு, பின்குறிப்புகளைப் படித்துவிட்டு, இன்னொரு முறை படித்துப் பார்த்தோமனால் அது என்னவென்று புரியும். ஏனென்றால் சார்த்ர் புதுமையான சில விஷயங்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். மேலெழுந்த வாரியாகப் படித்தால் கண்டு பிடிக்கமுடியாது. தீவிரமாக வாசித்தால் புரியும். சார்த்ர் சொல்லும் நரகம் என்ற அறைக்குள் வந்தவுடன் கண்ணைக் கூசுகின்ற மாதிரி வெளிச்சம். ஒரு சோபா இருக்கிறது. அது ரொம்ப வசதியான சோபா. உடல் அசந்திருக்கும்போது படுத்தோமானல் ஆழமான தூக்கம் வரும். நல்லா தூங்கலாம். ஆனால் விளக்கை அணைக்கவேண்டுமே. விளக்கை அணைக்க எந்த விதமான சாதனமும் கிடையாது. சுவரெல்லாம் மொத்தமாக இருக்கு. அந்த ஆள்கிட்ட கேட்கிறான், இந்த விளக்கை எப்படி அணைக்கிறது. அந்த விளக்கை அணைக்கிறது என் கை வசம் இல்லை. அதற்கு நிறுவனம் இருக்கு. அது கீழே இருக்கு. அந்த நிறுவனம் எப்போ வேண்டுமோ அப்போது சுவிட்ச் போடுவார்கள். உனக்கு வேணடாம்




**லூயி மால்**

''ஒவ்வொருவருக்கும் தான் செய்ய விரும்பும் ஏதோ ஒன்றைப் பற்றிய ஒரு எண்ணம் இருக்கும் கற்பனையினால் மெருகேற்றப்பட்ட இந்த எண்ணத்திற்கும், இறுதியாக அவர் சாதித்துப் பெற்ற வடிவத்திற்கும் இடையில் ஒரு இடைவெளி இருந்துகொண்டே இருக்கும். இந்த இடைவெளியைக் குறைப்பதற்குத்தான் மீண்டும்மீண்டும் முயல வேண்டியிருக்கிறது.''

*என்னும்போது இருக்கும். வேணும் என்றால் இருக்காது. அது எங்கள் கண்ட்ரோலில் இல்லை என்று சொல்வான். நரகத்திற்குப் பலவிதமான அர்த்தங்கள் இருக்கிறது. அதாவது உள் அர்த்தம் என்ன வென்றால் வாழ்க்கையில் நீ என்ன செய்ய நினைக்கிறயோ அதற்குத் தேவையான சூழ்நிலை உன்வசம் இல்லை, வேறு ஒருவரிடம் இருக்கிறது. அது ஒரு ஆபூர்வ நாடகம். நரகத்தின் பணி ஆள் கண்ணை முழிச்சிக்கிட்டே இருப்பான். இமை சிமிட்டாது. ஒரு துளி கூட சிமிட்டாது. அப்படியே இருக்கும். ஒரு மனிதனுக்கு ஆறு வினாடியில் கண் சிமிட்டி விடும். விஞ்ஞான பூர்வமான காரணங்கள் இருக்கிறது. நம்மை அறியமாலே கண் சிமிட்டி விடும். சார்த்ர் என்ன விளக்கம் கொடுக்கிறார். நரகத்தின் பணியாளனைப் பார்த்து கார்சென் கேட்கிறான். "இங்கே நீங்கள் கண் சிமிட்டவே மாட்டீர்களா", என்று. "அதைப் பூமியில்தான் செய்வார்கள், இங்கு செய்யமாட்டார்கள்" என்று அவன் பதிலளிக்கிறான். கார்சென் சொல்கிறான். "கண் சிமிட்டல் என்பது ஒரு சிறுகரிய மின்னல். கீழே விழுந்து பின் மேலெழும் திரை; வெட்டு நிகழ்ந்துவிடுகிறது. ஒரு கண் துடிப்பில் உலகம் இல்லாமல் போய்விடுகிறது. அது எவ்வளவு புத்துணர்ச்சியளிக்கும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது. ஒரு மணியில் நாலாயிரம் ஓய்வுகள், நாலாயிரம் சிறு தப்பித்தல்கள்..." ஆழ்ந்த கருத்து என்ன வென்றால் ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒவ்வொரு சின்னச் சின்னச் நிகழ்வும் ஒரு பெரிய விஷயத்துக்குக் கொண்டுபோகும். மற்றவர்கள்தான் நரகம். மற்றவர்கள் உலகத்தில் நான் தனியாக இல்லை, மற்றவர்கள் என்னைப் பார்க்கிறார்கள். மற்றவர்களுக்காக சின்னச் சின்ன விஷயங்கள் சொல்லவேண்டி உள்ளது. இதுவே எனக்கு நரகம் ஆகிறது. நரகம் என்பது மற்றவர்கள்தான். சார்த்ர் "மற்றவர்கள்தான் நரகம்" என்ற கோட்பாட்டைக் கொண்டு வருகிறார். ஆகவே கருத்தாக்கங்கள் நிறைந்த செறிவான நாடகம் அது.*

*மூன்று பாத்திரங்களுக்கிடையே நிகழும் சம்பவங்கள் மூலம் மனிதர்கள் எப்படித் தங்கள் வாழ்வைத் தாங்களே சிக்கலாக்கிக் கொள்கிறார்கள் என்று காட்டுகிறார். மனிதன் ஒருவன் தன் 'இருத்தலுக்கு' தான் என்னவாக எப்படியிருக்கிறோம் என்பதற்கு - உரித்தான பொறுப்பை ஏற்பதுதான் சுதந்திரம் என்ற ஆழமான கருத்துகளை முன்வைக்கிறார். பின்உரையில் சில விளக்கங்களை நான் கொடுத்திருக்கிறேன். நாடகத்தை மொழிபெயர்க்கிறது என்பது ஒரு தளம். இதற்கு பின்னுரை கொடுப்பது மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும்.*

**கேள்வி: பின்னுரையில் சார்த்ரின் சிந்தனை குறித்து விளக்கங்கள் அளித்திருப்பது பயனுள்ளதாக இருக்கிறதா?**

**பதில் :** *பின்னுரையின் மூலம் சில விளக்கங்களை அளிப்பதென்பது மொழிபெயர்ப்பின் மற்றொரு பரிமாணம். நமக்கு அந்நியமான பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியிலிருந்து ஒரு படைப்பை நம்முடைய மொழிக்குக் கொண்டு வருகிறோம். மொழி மட்டுமே மாறுகிறது. ஆகவே அதன் பின்னணியிலுள்ள சில கூறுகளைப் புரிந்துகொள்ள விளக்கங்கள் தேவை. அதுவும் ழான்-போல் சார்த்ர் போன்ற தத்துவ அறிஞர்களிடம் முற்றிலும் புதிய, வித்தியாசமான, அசலான சில*

*கருத்தாக்கங்களைப் பார்க்க முடியும். இதை முன்னுரையாகவும் கொடுக்கலாம். பின்னுரை என்பது என்னுடைய சொந்தத் தேர்வு. வாசகன் படைப்பை நேரடியாக அணுகவேண்டும்; மொழிபெயர்ப்பாளர் சில விளக்கங்களை (தேவைப்பட்டால்) பின்னாலிருந்து கொண்டு அளிக்க வேண்டுமென்பது என் கருத்து. "சின்னச் சின்ன வாக்கியங்கள்" கடைசியாக நான் மொழிபெயர்த்திருக்கிறேன். அதிலும் பின்னுரை கொடுத்திருக்கிறேன். அந்தப் பின்னுரையில் அந்தப் புத்தகத்திற்கு விளக்கம் கொடுத்திருக்கிறேன். அந்த விளக்கம் இல்லையென்றாலும் புரியும். குட்டி இளவரசனில் பின்னரையும், முன்னுரையும் தேவையில்லை. காரணம் அதுவே அழகான கதை. அதை அப்படியே படித்துப் புரிந்துகொண்டால் புரிந்தது, புரியவில்லையென்றால் இல்லை. ஆறு வயதுக் குழந்தைக்குச் சொல்லக் கூடிய அழகான கதை. அறுபது வயது முதியவர்களையும் சிந்திக்க வைக்கும் புத்தகம்.*

**கேள்வி : நான் அன்னியன் முதலில் படிக்கும் போது நான்தான் மெர்சோவோ. மெர்சோதான் நானோ என்று தோன்றியது. கொஞ்சம் நாள் அதேமாதிரி ஆகிவிட்டது. ஒவ்வொரு பாத்திரங்கள் பார்வைகளும் சிந்தனைகள், வாழ்க்கை சம்மந்தப்பட்ட பார்வையை எனக்கு மாற்றியது போல இருந்தது.**

**பதில் :** *விசித்திரமான விஷயம் என்னவென்றால், நாவல் என்று பார்த்தீர்களேயானால், மேலைநாட்டில் இப்படித்தான் கட்டம் கட்டி வைத்திருக்கிறார்கள். நாவல் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். கவிதை என்றால் இப்படியிருக்கவேண்டும். கட்டுரை என்றால் இப்டித்தான் இருக்க வேண்டும். விசித்திரமான நோக்கங்கள் இருக்கிறது. நாவலின் இலக்கணப்படி பார்த்தீர்களேயானால் சாதாரணமாக ஒரு நாவல் தன்மையிலோ, படர்க்கையிலோ இருக்க வேண்டும். ஒருவர் வந்து தான், தன்னுடைய கதைகளைச் சொல்வது போல இருக்க வேண்டும். நான் வந்தேன். நான் போனேன். இப்படி இல்லையென்றால் இன்னொருவர் சொல்வது போலிருக்கும். சில கதைகள் சுய சரிதம் சார்ந்த தன்மையுடைய கதையாக இருக்கும்.*

*மிஷேல் ப்யுதோர் என்பவர் ஒரு புதுமையைச் செய்தார். அவர் ஒரு பெரிய நாவல் ஒன்று எழுதினார்.* (MODIFICATION) *மாடிபிகேஷன் என்று பெயர். மாடிபிகேஷன் என்றால்* Change *அந்த நாவலில் முதல் பக்கத்தில் இருந்து கடைசிப் பக்கம் வரை, முன்னிலையில் இருக்குகிறது. அதாவது முதல் வார்த்தை என்ன வென்றால் "நீ ரயிலைப் பிடிக்கப் போகிறாய், நீ ஏன் போகிறாய் என்பது உனக்குத் தெரியும், அப்படித் தெரியாது என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் அது மற்றவர்க்கும் தெரியும்." அப்படியென்று உங்களைப் பார்த்து ஒருவர் பேசிக்கொண்டு இருக்கிறார். ஒரு பக்கம் இரண்டு பக்கம் அல்ல 350 பக்கங்கள் பேசிக்கொண்டு இருக்கிறார். ஒவ்வொரு பக்கமும் ஒருத்தரைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார். அதை நாம் படிக்கும்போது நம்மைப் பற்றி சொல்லியிருக்கிற மாதிரி இருக்கும். நான் ஒன்றும் செய்யவில்லை. ஏன் நம்மைப் பற்றிச் சொல்லவேண்டும். பாதிப் படிக்க ஆரம்பித்தவுடன் நாமே இதற்கு உடந்தையாக ஆகிவிட்டோமோ என்ற தோன்றுகிறது. அந்த ஆசிரியருக்கு 90 வயது ஆகிவிட்டது. இந்தியாவுக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு வரவேண்டியிருந்தது. உடல் நிலை சரியில்லாததால் வர முடியவில்லை. ரொம்ப சுவாரஸ்யமானவர் அவர். இது படமாக வந்தது. அந்தப் புத்தகம் விதிவிலக்கு.*

*மெர்சோ வந்து தன்னைப் பற்றித்தான் எழுதியிருக்கிறார். தன்னைப் பற்றிக் கதை எழுதியிருக்கிறார் என்றால்* Chronlogical *ஆக இருக்கும். அவர் சின்ன வயதில் இருந்து, ஒவ்வொரு காலகட்டத்தில் என்ன என்ன செய்தார் என்பது பற்றி அவருக்குத்தான் தெரியும். வாழ்நாள் முடிகிற சமயத்தில், பல வருடங்கள் வாழ்ந்த அனுபவத்தில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் வாழ்க்கையைப் பின்னோக்கி இறந்த காலத்தில் பார்த்து வாழ்க்கையைப் பற்றி எழுவது நாவலாக வருகிறது.*

*'அந்நியன்' நாவல் மெர்சோ தன் வாழ்க்கையைப் பற்றி, தன்மையில் சொல்லும் நடையில் இருக்கிறது. ஆனால் இதில் காலத்தைப் பற்றிய விவரம் சில சமயங்களில் தெளிவாகவும் சில சமயங்களில் தெளிவற்றும் இருக்கும். இது குறித்து* CARL. A. Viggiani *என்பவர் 1956 - ல் விரிவாக ஆய்வு செய்தும் இருக்கிறார். ஆறு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும் முதல் பாகம் பதினெட்டு நாட்களில் நடந்த சம்பவங்கள்: அம்மாவின் மரணம் குறித்து தந்தி வந்தது ஒரு வியாழக்கிழமை,*



**வெ. ஸ்ரீராம் – மனைவி, மகன், மருமகள், பேத்தியுடன்.**

*அடுத்த ஞாயிறு மெர்சோ தன் இருப்பிடத்தில் தனியாகக் கழிப்பது, அடுத்த ஞாயிறு மாரியுடன் கடற்கரையில், மூன்றாம் ஞாயிறு (18 - ம் நாள்) கடற்கரையில் அராபியன் சுடப்படுவது. நான்கு அத்தியாயங்களைக் கொண்ட இரண்டாம் பாகம், பதினோரு மாதங்களுக்குச் சற்றுக் கூடுதலாக இருக்கிறது. ஒரு ஒரு அத்தியாயம் கொண்ட மூன்றாவது பாகத்தில் காலத்தைப் பற்றிய துல்லியமான குறிப்பு எதுவும் இல்லை. காலம் உறைந்துவிடுகிறது. (இதைப் பற்றி இன்னும் நிறையவே சொல்லலாம்). இந்தப் படைப்பின் ஒரு முக்கிய அம்சம். இது: "அதாவது நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளுக்கும் காலத்தைப் பற்றி நமக்கு இருக்கும் பிரக்ஞைக்கும் இடையேயுள்ள உறவைக் குறித்த கருத்தாக்கம்."*

நீங்கள் சொல்கிறீர்களே என்னை நான் மெர்சோவோ என்று நினைத்துக் கொண்டேன் என்று. இந்த அடையாளம் Indentification நமக்கு ஏன் இருக்குன்னா நாம் எல்லோருமே மெர்சோ மாதிரி, ஒரு கால கட்டத்தில் இருந்திருக்கோம். அதாவது நமக்குச் சுற்றியுள்ள நிகழ்வுகளை விட்டு விலகியிருக்கோம். நமக்கு சம்பந்தமில்லா நிகழ்ச்சி நடந்துகொண்டு இருக்கு. ஆனால் அந்த நிகழ்ச்சியில் நாம் சம்பந்தபட்டு இருக்கோம். ஏன் சம்பந்தப்பட்டிருக்கோம் என்று நமக்கே தெரியாது. அதனால் அதைப் பற்றிய தெளிவு வந்துவிட்டது என்றால் மெர்சோ ஆகிவிட்டீர்கள். ஆனால் மெர்சோ மாதிரி நிஜமாகவே இருப்பவர்கள் எனக்குத் தெரியும். சில சமயம் 'ஆத்மாநாம்' பற்றிக் கூட ஞாபகம் வரும். தற்கொலை ஒரு முடிவு இல்லை என்று சொன்னால் கூட. "சிசிபசின் புராணம்" என்ற புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அதன் முதல் வரிகள் வாழ்க்கை அபத்தமானது என்றாலும் தற்கொலை அதற்கு முடிவு இல்லை. அதற்கு ஒரு தீர்வுகாண வேண்டும். தற்கொலை தீர்வு இல்லை என்று எழுதியிருக்கிறார். இருந்தாலும் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு ஒரு மனிதனைக் கொண்டுசெல்லும் நிலையையும் மீறி ஒரு தெளிவு வரவேண்டும். அதுதான் அங்கே நடந்திருக்கு. அந்தத் தெளிவைப் பற்றி, பின்பு படித்துப் பார்த்தால் தெரியும். நேர்மை, வீரம், தெளிவு இந்த மூன்றும் சேர்ந்ததுதான் அபத்த மனிதனின் குணாதிசயங்கள். இது அத்தனையும் சேர்ந்து இருக்க வேண்டும்.

காம்யுவின் சிந்தனை பற்றி பல வருடங்களுக்கு முன்பே "காலச்சுவடு" ஆண்டு மலரில் எழுதியிருக்கிறேன். மூன்று கட்டங்களாக அவருடைய சிந்தனை வளர்ந்துகொண்டு போகிறது.




*'அந்நியன்' (நாவல்), சிசிபசின் புராணம் (கட்டுரை), காலிகுலா (நாடகம்) இவை முதல் கட்டத்தைச் சேரும். 'கொள்ளை நோய்' (நாவல்), கிளர்ச்சியாளன் (கட்டுரை) இரண்டாம் கட்டம். 'வீழ்ச்சி' என்ற நாவலில் தொடங்கிய மூன்றாம் கட்டம் முழுமை பெறுவதற்குள் அவர் இறந்துவிட்டார். 'முதல் மனிதன்' என்ற ஒரு புத்தகம் ரெடிபண்ணிக் கொண்டிருந்தார். முடியப் போகிற சமயத்தில் சாலை விபத்தில் அவர் இறந்து விட்டார். அந்தப் புத்தகம் இப்போது வெளிவந்து விட்டது. புத்தகம் வெளிவந்த அடுத்த நாளே காலிமார் நிறுவனத்திடம் 10, 15 மொழிகளில் எங்களுக்கு மொழிபெயர்க்க உரிமம் கொடுங்கள் என்றார்கள். அந்தப் புத்தகம் என்னிடம் இருக்கிறது. காலிமார் எல்லா பெரிய எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். பெரிய பதிப்பகம் அது. குட்டி இளவரசன், மீளமுடியுமா? எல்லாம் அவர்கள்தான் பதிப்பித்திருக்கிறார்கள்.*

**கேள்வி : 'அந்நியன்' தமிழில் இதுவரை எத்தனை பதிப்புகள் வந்திருக்கிறது.**

**பதில் :** *'அந்நியன்' மூன்று பதிப்புகள் வந்திருக்கிறது. முதல் பதிப்பு 1980, இரண்டாம் பதிப்பு 1984, மூன்றாம் பதிப்பு 1997 நான்காவது பதிப்பு இன்னும் வரவில்லை.*

**கேள்வி : ஒவ்வொரு பதிப்புக்கும் மாற்றம் ஏதும் செய்திருக்கிறீர்களா?**

**பதில் :** *முக்கியமான சில மாறுதல்களை - திருத்தங்களை - கணிசமான அளவு செய்திருக்கிறோம். மொழிக்கு இருப்பதைப் போலவே, மொழிபெயர்ப்புக்கும், மொழிபெயர்ப்பாளருக்கும் ஒரு பரிணாம வளர்ச்சி இருக்கிறது. அந்த அடிப்படையில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எனக்கிருந்த ஒரு அரிய வாய்ப்பு என்னவென்றால் என்னுடைய மொழிபெயர்ப்புகளின் பதிப்பாசிரியர் தரமான 'தற்காலத் தமிழ் அகராதி' தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்ததுதான். அதனால் சொற்களின் பொருள், வீச்சு இவற்றைத் தவிர அவற்றின் தொனி போன்ற அம்சங்களைப் பற்றியும் நிறையவே விவாதித்தோம். உதாரணமாக, பிரெஞ்சில்* 'PETIT' *என்ற பெயரடை பொதுவாக சிறிய, சின்ன அல்லது குட்டி என்று பொருள்படும். சில சந்தர்ப்பங்களில் 'முக்கியத்துவம் அல்லாத' அல்லது 'மிகச் சாதாரண' என்றும் சொல்லலாம், 'அந்நியன்' நாவலின் இறுதியில், சிறைச்சாலைப் பாதிரியாரிடம் பொறிந்து தள்ளிய மேர்சோ சொல்கிறான்: "எல்லாம் நான் இவ்வளவு நாட்களாக, ஏதோ இந்த நிமிடத்திற்காக, எனக்கு 'நியாயம்' வழங்கப்படும் இந்த ஒரு அற்ப விடியலுக்காகக் காத்திருப்பது போல ஆயிற்று" இங்கே, 'சிறிய'* Petit' *என்றிருந்தது 'அற்ப' என்று மாற்றப்பட்டவுடன்தான், மூலத்தில் இருக்கும் அதே 'தொனி'யைத் தமிழில் கொண்டுவர முடிந்தது. இது போன்ற பல திருத்தங்களைச் செய்திருக்கிறோம். சில சமயங்களில் வாக்கிய அமைப்பைத் திருத்தி அமைத்திருக்கிறோம். திருத்தங்களில் சிறியவை, பெரியவை என்று எதுவும் கிடையாது. தேவையான எந்தவொரு திருத்தமும் இறுதி வடிவத்தில் பொருளையும் தொனியையும் சீராக்கி மொழிபெயர்ப்பின் தன்மையை வளப்படுத்துகிறது.*

**கேள்வி : 'அந்நியனில்' கடைசி சில பக்கங்கள் மிகவும் ஆழமானவை அல்லவா?**

**பதில் :** *ஆல்பாட் கெஸ்ட்லர் என்ற பெரிய அறிவாளி இருந்தார். ஆல்பர்ட் கெஸ்லரும், ஆல்பர்ட் காம்யுவும் ஒரு காலகட்டத்தில் மரணதண்டனைக்கு எதிராக ரொம்பத் தீவிரமாகப் போராடியவர்கள். அவர்கள் பெரிய இயக்கத்தையே நடத்தினார்கள். அப்போ ஒரு கருத்தரங்கில் பங்கு பெறுகிறார்கள். அந்தக் கருத்தரங்கில் இவர்கள் இரண்டு பேரும் பேசியது புத்தகமாக வெளிவந்திருக்கிறது.* 'Reflection on Capital Punishment' *என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். பிரெஞ்சிலும் வந்திருக்கிறது. அதில் காம்யு ஒரு பெரிய கட்டுரை எழுதியிருக்கிறார். மரணதண்டனைக்கு எதிராக அவருடைய வாதங்களை வைத்திருக்கிறார். சில உதாரணங்கள்*

## அந்த்வான் து செந்த் - எக்சுபெரி

அந்த்வான் து செந்த் எக்சுபெரி 1900 ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் தேதி லியோன் நகரத்தில் பிறந்தார். ஸ்விட்சர்லாந்தில் படித்த பிறகு, பாரிஸில் கப்பற்படைப் பள்ளியில் சேர முயன்றார். நுழைவுத் தேர்வில் வெற்றி கிட்டாததால், நுண்கலைப் பள்ளியில் சேர்ந்தார். 1921 இல் விமானப்படையில் ராணுவச் சேவைக்காச் சேர்ந்தார். அங்கு அவர் விமானம் ஓட்டக் கற்றுக்கொண்டது அவருடைய பிற்கால வாழ்க்கையை நிர்ணயித்தது என்று சொல்ல வேண்டும். 1923இல் ராணுவத்தை விட்டு வெளிவந்த பிறகு பல்வேறு தொழில்களை மேற்கொண்டார். எழுதுவதில் ஆர்வம் கொண்ட அவர் 1925இல் தனது முதல் புத்தகத்தை வெளியிட்டார். அவருடைய விமானத் துறை அனுபவம் இந்தப் புத்தகத்தின் பின்னணியாக அமைந்தது. 1926இல் ஒரு வர்த்தக விமான நிறுவனத்தில் விமான ஓட்டியாகச் சேர்ந்தார். 1929இல் Southern Mail என்ற புத்தகத்தை எழுதினார். இதைத் தொடர்ந்து தென் அமெரிக்காவிற்குப் புதிய விமானத் தடங்களைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்ட காலத்தில் 1931இல் Night Flight என்ற புத்தகத்தை எழுதிப் பெரும் வெற்றி கண்டார். பிறகு இந்த விமான நிறுவனம் மூடப்படவே 1935இல் ஏர்-பிரான்ஸ் நிறுவனத்தில் சேர்ந்தார். விமான ஓட்டி வாழ்க்கையில் இவருக்கு இரு பெரும் விபத்துகள் நேர்ந்தன. அக்காலத்தில்தான் Wind, Sand and Stars என்னும் முக்கியமான புத்தகத்தை எழுதினார்.

இரண்டாவது உலகப் போரில் விடுதலை ராணுவத்தில் சேர்ந்தார். 1944 ஜூலை 31ஆம் தேதி கார்ஸிகாவில் போர்கோ என்ற இடத்திலிருந்து விமானத்தில் சென்ற அவருக்கு என்ன ஆயிற்று என்று அறிய முடியாதவாறு மறைந்துபோனார். உலகப்போர்ச் சூழலில் இவர் எழுதிய ஒன்று இளவரசன், குழந்தைகளுக்கு மட்டுமின்றி, பெரியவர்களுக்குமான அழகான கதை.

இந்த ஆண்டு (1994) செந்த் - எக்சுபெரியின் ஐம்பதாவது நினைவு ஆண்டு. அவரை இந்த ஆண்டு பிரெஞ்சு சமூகம் நன்றியுடனும் பெருமையுடனும் நினைவுகூர்கிறது. பிரெஞ்சு அரசு அவரைப் போற்றும் வகையில், அவருடைய உருவம், யானையை விழுங்கிய மலைப்பாம்பு, குட்டி இளவரசனது கிரகம் ஆகியவற்றின் படங்களைக் கொண்ட ஐம்பது ஃபிராங்க் நோட்டை வெளியிட்டிருக்கிறது.

*கொடுத்திருக்கிறார். பல மரணதண்டனையை பற்றிக் குறிப்பிடுகிறார். நான் அந்தக் கட்டுரையைப் பிரெஞ்சில் படிக்கிறதுக்கு முன்னால் ஆங்கிலத்தில் படித்தேன். 1967 - 68ல் அந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு மூன்று நாள் எனக்கு சாப்பாடு இறங்கவில்லை. அந்த அளவுக்குப் பாதித்தது. கட்டுரையை சிலபேருடன் பகிர்ந்து கொண்டேன். எனக்குத் தெரிந்த நண்பர் என்னிடம் சொன்னார் “என்றாவது பத்திரிகையில், உலகத்தில் எங்கேயாவது யாருக்காவது மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது என்று தெரிந்தால் காம்யு அன்றைக்கு முழுக்கச் சாப்பிடாமல் வெறும் வயிற்றோடு படுத்துவிடுவார்” என்று. நான் எதற்குச் சொன்னேன் என்றால் மரணதண்டனை என்பது அந்த அளவிற்கு அவரைப் பாதித்திருக்கிறது. வாழ்வின் அபத்தம் குறித்து அவர் சொல்கிறார். தன்னைப் பொறுத்தவரை உண்மையான தீர்வு கிளர்ச்சி. இந்தக் கிளர்ச்சியைத் தார்மீக ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இது வெறும் அரசியல் புரட்சி மட்டுமல்ல. அரசியல் புரட்சி, சமுதாய புரட்சி இவையெல்லாம் கிளர்ச்சியின் சில வடிவங்களே. “நான் அறிந்து கொண்ட உண்மை இதுவென்று தைரியமாகச் சொல்லவைக்கக் கூடிய வீரம், என்னால் அறிந்து கொள்ள முடியாதவற்றுக்கு சொந்தம் கொண்டாடமாட்டேன் என்ற நேர்மை, நான் அறிந்து கொண்டிருப்பவை பற்றி, மிகக் குறைந்ததாகவே இருந்தாலும் எனக்கு இருக்கும் தெளிவு”, இவை கிளர்ச்சிக்கு அவசியமான உயிர்நாடிகள். இப்போது கிளர்ச்சிக்கு ஆன்மீக சக்தி ஏற்பட்டு விடுகிறது. அந்தத் தெளிவு வரவேண்டும். கடைசி சில பக்கங்கள் ஆழமானவையாக இருப்பதற்கு இன்னுமொரு காரணம், ஆசிரியர் கையாளும் நடை. அதாவது அவருடைய பல கருத்தாக்கங்கள் (Concepts) புத்தகம் முழுவதும் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும், இறுதி சில பக்கங்களில்தான் காம்யு சித்தரிக்கும் “அபத்தம்” என்ற தத்துவார்த்தக் கோட்பாட்டிற்கு குவியம் (Focus) ஒன்று கிடைக்கப் பெறுகிறது. இறுதிப் பக்கங்களைப் படித்துவிட்டு மீண்டும் அந்தப் புத்தகத்தை முதலிலிருந்து படித்தோமானால் அதன் இழைகள் புலப்படும்.*



செவாலியே விருதுடன் நண்பர்களுடன் வெ. ஸ்ரீராம்

**கேள்வி : உங்கள் மொழிபெயர்ப்பில் 'அந்நியன்' அளவிற்குப் பரந்த அளவில் வாசகர்களை அடைந்தது ழாக் ப்ரெவெர் கவிதைகள் என்றே நினைக்கிறேன். அந்நியனின் பரந்த கவனிப்பிற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

**பதில் :** *"மனித வாழ்வின் சிக்கல்களை எளிமையானவையாகத் தோன்றச் செய்யும் கண்கட்டு வித்தை போன்ற கலைத்திறனுடன் ஆழ்ந்த சிந்தனையை இலக்கியத் தரமான நயத்துடன் வெளிப்படுத்தும் நடையை 'அந்நியனில்' காம்யு கையாண்டிருக்கிறார்," என்கிறார் திரு. மாத்யு வார்ட்* (Mathew Ward) *1942-ல் பிரெஞ்சில் எழுதப்பட்ட இந்தப் புத்தகம், 1946-ல் ஸ்டூவர்ட் கில்பெர்ட்டின்* (Stuart Gilbert) *ஆங்கில மொழிபெயர்ப்பில் வந்தபிறகு உலக அளவில் பெரும் கவனத்தைப் பெற்றது. 1998-ல் இதன் மாற்று மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தில் மத்யு வார்ட் அவர்களால் வெளியிடப்பட்டது. அந்தப் பதிப்பின் முன்னுரையில் வரும், மேலே சொல்லப்பட்ட கருத்து 'அந்நியனின்' பரந்த கவனிப்பிற்கான ஒரு காரணத்தை முன்வைக்கிறதென்று நினைக்கிறேன்.*

*மேலும், 1980-ல் முதல் பதிப்பாக காம்யுவின் 'அந்நியன்' தமிழில் வருவதற்கு முன்பே ஆங்கில மொழிபெயர்ப்பில் இந்தப் புத்தகத்தைப் படித்திருந்த தமிழ் வாசகர்கள் நிறையவே இருந்தார்கள். அவர்களில் எனக்குத் தெரிந்த சிலர், தமிழில் அதை மீண்டும் படிக்கும் போது, ஆங்கிலத்தில் படித்தபோது கிடைத்ததைவிட, நெஞ்சைத் தொடும் நெகிழ்வான அனுபவமாக அது இருந்ததென்று சொன்னார்கள். காம்யுவின் நடையின் அம்சங்களை அவற்றின் தொனி கெடாமல் தமிழில் அளிக்க நான் மேற்கொண்ட முயற்சி வீண் போகவில்லையென்று எனக்குத் தோன்றியது. இன்னும் சில வருடங்களுக்குப் பிறகு என்னைச் சந்தித்த சில இளைஞர்கள் மெர்சோவுடன் தங்களை இனம் கண்டுகொள்ள முடிந்ததாகவும் சொன்னார்கள். எல்லாமே எனக்கு விநோதமாக இருந்தன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இதற்கெல்லாம் காரணம் ஆல்பெர் காம்யுதான். தரமான எந்தப் படைப்பும் மொழிகளின் எல்லைகளைத் தாண்டி வாசகர்களின் நெஞ்சில் இடம்பிடிக்க முடியுமென்பதே மொழிபெயர்ப்பை நியாயப்படுத்துகிறது. மொழிபெயர்ப்பின் சுமையும், சுவையும் அதுவே.*

**கேள்வி : 'குட்டி இளவரசன்' உலகம் முழுவதும் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல். அதைத் தமிழில் கொண்டுவரத் தோன்றியது எப்படி?**

**பதில் :** *ஏற்கெனவே நான் சொல்லியிருந்ததைப் போல 'அந்நியனை' அடுத்து காம்யுவின் மற்ற படைப்புகளையும் தமிழில் கொண்டு வரலாமென்றுதான் முதலில் நினைத்திருந்தேன். அதே சமயம்,*

பிரெஞ்சு இலக்கியத்திலிருந்து வேறு சில படைப்புகளையும் அறிமுகம் செய்யலாமே என்றும் சிலர் சொன்னார்கள். காம்யுவின் சமகாலத்திய எழுத்தாளர் அந்த்வான்-து-செந்த் எக்சுபெரியின் "குட்டி இளவரசன்" உடனே நினைவுக்கு வந்தது. இந்த மொழிபெயர்ப்புக்கான காப்புரிமை பெறுவதற்கு பிரெஞ்சு அரசுத் தூதரகம் உதவியது. மூலத்தின் ஆசிரியர் வரைந்திருந்த அதே படங்களைத்தான் போடவேண்டுமென்றும், வேறுபடங்களைப் போடக்கூடாதென்றும் நிபந்தனைகள் இருந்தன. மறைந்த என் அண்ணன் ஓவியர் V. ஜெயராமன் அந்தச் சித்திரங்களின் நகலை உருவாக்குவதில் உதவினார். அச்சு வடிவில் படங்களை ஆங்காங்கே பனுவலுக்கு இடையே பொருத்தி, மூலப்பதிப்பில் இருப்பதைப் போலவே பக்கங்களை அமைப்பதில் 'க்ரியா' ராமகிருஷ்ணன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பிரமாதம். செந்த்-எக்சுபெரியின் எழுத்துகளுக்கும், சித்திரங்களுக்கும் இடையே உள்ள உறவும் பொருத்தமும் அலாதி. எல்லா வயதினரிடையேயும் வெவ்வேறு தளங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் கருத்தாழம் மிக்க இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்கத் தூண்டுதல் எதுவும் தேவையாக இருக்கவில்லை. ஆனால் மிக நேர்த்தியாகவும், அழகுணர்வோடும் இதை வெளிக்கொண்டுவந்த பதிப்பாசிரியர் ராமகிருஷ்ணனின் பாராட்டப்பட வேண்டிய பொறுப்புணர்ச்சியை இங்கு நான் பதிவு செய்தாக வேண்டும். இறுதி வடிவத்தைச் செப்பனிட உதவிய திரு. ஃப்ரான்ஸ்வா குரோ, ராமகிருஷ்ணன் இவர்களுடன் சேர்ந்து நான் மேற்கொண்ட கூட்டு முயற்சியும் மொழிபெயர்ப்பைக் குறித்த என் பார்வையை விரிவாக்கியது.


**கேள்வி : தமிழில் பல கவிஞர்களிடையே பாதிப்பை உருவாக்கிய ழாக் ப்ரெவெர் கவிதைகள் எளிமையும் அதே சமயம் ஆழமும் கொண்டவை. இந்தக் கவிதைகளை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?**


**பதில் :** 1977-ல் அலையான்ஸ் ஃபிரான்சேஸ் நிறுவனத்தின் நிர்வாகக்குழு அங்கத்தினராக ஏற்கெனவே நான் இருந்தேன். அப்பொழுது பிரெஞ்சு இலக்கிய, திரைப்பட ரசிகர் மையம் என்ற அமைப்பை உருவாக்கினேன். இந்த நிறுவனத்தில் சில ஆண்டுகள் ஏற்கெனவே பிரெஞ்சு பயின்றிருந்த மாணவர்களும், அப்பொழுது உயர்நிலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களும் ஒவ்வொரு சனிக்கிழமை மாலையும் சந்தித்து ஒரு இலக்கியப் படைப்பையோ அல்லது ஒரு பிரெஞ்சு திரைப்படத்தைப் பற்றியோ பிரெஞ்சு மொழியிலேயே விவாதிப்போம். தொடக்கக் கட்டத்தில் எனக்கு இதில் பெரிய ஊக்கத்தை அளித்தவர் அங்கு பிரெஞ்சுப் பேராசிரியராக இருந்த ழான்-பியர் மோரோ (Jean-Pierre Moreau) என்பவர். பாடத்திட்டத்துக்கு வெளியே, விரிவான தளத்தில் பிரெஞ்சு மொழியைக் கற்கும், பேசிப் பழகும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது.

ஒரு நாள் ழான்-பியர் மோரோ, "பார்பரா" என்ற ழாக் ப்ரெவெர் கவிதையைப் பல பிரதிகள் எடுத்து எங்களிடம் கொடுத்து, படித்து வரச் சொன்னார். அடுத்த சனிக்கிழமை மாலைச் சந்திப்பில் அதைப் பற்றி விரிவாகப் பேசினார். அதன் மொழி, தொனி, குறியீடுகள் பற்றி அழகாக எடுத்துரைத்தார். என்னைப் பொறுத்தவரை மறக்கமுடியாத அனுபவம். அதன் பிறகுதான் பிரெஞ்சில் "சொற்கள்" தொகுப்பைப் படித்தேன். நண்பர்கள் சிலருடன் என்னையும் மோரோ தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பிரபல பிரெஞ்சு நாடக, திரைப்படக் கலைஞர் செர்ஷ் ரெஜ்ஜியானியின் (Serge Reggiani) வாசிப்பில் ழாக் ப்ரெவெரின் கவிதைகள் பதிவாகியிருந்த இசைத்தட்டை (L P Record) கேட்கச் செய்தார். "சொற்கள்" கவிதைகளின்



வெ. ஸ்ரீராம் – மனைவியுடன்







*வீச்சும் ஆழமும், சமூக விமர்சனமும் எள்ளலும், நகைச்சுவையும் சோகமும் இவருடைய வாசிப்பில் நன்றாக மெருகேற்றப்பட்டு இந்தக் கவிதைகளுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தன. முதலில் "பார்பரா" கவிதையை மட்டும் நான் தமிழில் மொழிபெயர்த்து, அது 'பிரக்ஞை' இதழில் வெளியானது. 1978-ல் என்று ஞாபகம். ஆனால் 'சொற்களிலிருந்து' கிட்டத்தட்ட 40 கவிதைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு தொகுப்பாகக் கொண்டுவருவதற்கு 2000-ம் ஆண்டுதான் வாய்ப்புக் கிட்டியது.*

**கேள்வி : எளிய அனுபவங்கள் ழாக் ப்ரெவெரிடம் அற்புதமான கவிதைகளாக மாறுகிறதே?**

**பதில் :** *எளிமையான நிகழ்வுகள் கூட அகவயப் பார்வையில் ஒருவரைப் பாதித்து, நினைவில் பதிந்துவிடும்போது அது அவருடைய அனுபவம் ஆகிறது. சமூகத்தில் பலரைப் பாதிக்கும் நிகழ்வுகள் கூட ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு அளவு தீவிரமான, வெவ்வெறு அளவு ஆழமான பாதிப்பையே ஏற்படுத்துகிறது. பொதுவாக 'அனுபவம்' என்பதே தனிமனிதனைச் சார்ந்த ஒரு விஷயம். ழாக் ப்ரெவெரின் கவிதையின் சிறப்பு அம்சம் அவருடைய பார்வையின் எளிமை, எண்ண ஓட்டத்தின் இயல்புத் தன்மை, வெளிப்பாட்டின் தெளிவு என்று சொல்லலாம். பின்னுரையில் நான் குறிப்பிட்டிருப்பதைப் போல "பாமரர்களின் வாழ்க்கை, விருப்பு - வெறுப்புகள், பிரச்சினைகள் இவற்றை அவர்களின் மொழியிலேயே, அவர்களுக்குப் புரியும் வகையில், கவிதைகளாகவும் பாடல்களாகவும் இலக்கியத் தரம் பெறச் செய்ய முடியும் என்று நிரூபித்துக் காட்டினார்." தவிர, குழந்தைகளை மிகவும் நேசித்த ப்ரெவெரிடம் குழந்தையின் கள்ளமற்ற மனப்பாங்கு இருந்தது. பெரியவர்களான பிறகும் குழந்தையின் பார்வையில் பெரியவர்களின் உலகைப் பார்ப்பதே கவிதை அனுபவம்தான். ப்ரெவெரே சொல்லியிருக்கிறார். "என் குழந்தைப் பருவத்தின் கண்ணீர் இன்னமும் என்னிடம் இருக்கிறது. அதன் சிரிப்பையும் தக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். அதன் ஆனந்தமான ரசகியங்களையும் கூட."*

**கேள்வி : "தொலைக்காட்சி: ஒரு கண்ணோட்டம்" நூல் நம் நாட்டுக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. இதன் ஆசிரியர் பியர் பூர்த்யுவின் முக்கியத்துவம் பற்றி...?**

**பதில் :** *நான் இதுவரை மொழிபெயர்த்த புத்தகங்களிலேயே மிகவும் மாறுபட்ட தன்மை கொண்டது. "தொலைக்காட்சி: ஒரு கண்ணோட்டம்". புனைவிலக்கியம், நாடகம், கவிதை, சிறுகதை என்ற வகைகளில் சேராமல் சமூகவியல் ஆய்வின் அடிப்படையில் அமைந்த உரைநடை. இதன் ஆசிரியர் பியர் பூர்தியு பிரான்ஸ் நாட்டின் இருபதாம் நூற்றாண்டின் சிறந்த சிந்தனையாளர்களில் - சார்த்ர், காம்யு, மிஷெல் ஃபூக்கோ, ழாக் தெரிதா இவர்கள் மத்தியில் ஒருவராகக் கருதப்படுகிறார். மற்ற எல்லா அறிவியல் துறைகளுக்கு இருப்பதைப் போன்ற அதே அந்தஸ்தையும் மதிப்பையும் சமூகவியலுக்கும் தரவேண்டும் என்று போராடி வெற்றிபெற்றவர். சமூகத்தில் ஏற்கெனவே நிலவிவரும் அம்சங்களையும், அவ்வவ்போது நிகழும் நிகழ்வுகளையும் காரண - காரிய ரீதியில்*

*புள்ளிவிவரங்களின் ஆதாரத்துடன் ஆய்ந்து மதிப்பீடுகளையும் கருத்துகளையும் பதிவு செய்தவர். அதனாலேயே அவருடைய எழுத்தின் நடையில் விரிவும், ஆழமும், கவனமும், தெளிவும் தேவையான விகிதத்தில் இடம் பெறுகின்றன. மிதமிஞ்சிய எளிமைப்படுத்துதலோ, பொதுப்படையாக்குதலோ கிடையாது. பிரெஞ்சு சமூகத்தைப் பற்றியும், முன்னாள் பிரெஞ்சுக் காலனியான அல்ஜீரிய சமூகத்தைப் பற்றியும் பரந்த ஆய்வுகளைச் செய்திருக்கிறார்.*

*“தொலைக்காட்சி: ஒரு கண்ணோட்டம்” என்ற சிறு புத்தகம் ‘கொலெஜ்-த-பிரான்ஸ்’ நிறுவனத்தில் அவர் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் அச்சு வடிவம். பிரான்ஸின் பிரதான தொலைக்காட்சி அலை வரிசையில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதன் மூலம் இன்னும் பிரபலமடைந்துவிட்ட சொற்பொழிவு. தொலைக்காட்சியை இன்னுமொறு ஊடகமாக மட்டும் பார்க்காமல், ஊடகங்களின் வரலாற்றில் ஒரு நிகழ்வாக - சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்வாகப் - பார்க்கிறார். ஒழுக்க நெறி அடிப்படையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரம் அல்லது தரமின்மை பற்றிப் பேசும் போதகராகச் செயல்படாமல், அவற்றின் பின்னணியில் இருக்கும் அதிகார உறவுகளை, சமன்பாடுகளை அலசுகிறார். இதழாளரின் சுதந்திரம் எப்படி அவருடைய ஒத்துழைப்புடனேயே ஒடுக்கப்படுகிறது என்று விளக்குகிறார். பிரச்சினையின் ஆழத்துக்கே சென்று அதன் மூல காரணங்களை அவர் சுட்டிக் காட்டுவதால் எல்லா நாடுகளுக்கும் பொருந்தும் வாதமாக அது இருப்பதில் வியப்பில்லை.*

**கேள்வி : சொந்தப் படைப்புகளை எழுதும் திறமை தங்களுக்குண்டு. ஆனால் பொதுவாக யாரும் தேர்ந்தெடுக்காத மொழிபெயர்ப்புத் துறையைத் தேர்ந்தெடுத்தது ஏன்?**

**பதில் :** *சொந்தப் படைப்புகளை எழுதும் திறமை எனக்கு இருக்கிறதா என்று என்னால் சொல்ல முடியவில்லை. ஆனால் எனக்குத் தெரிந்த மொழிகளில் எனக்குக் கிடைக்கப்பெற்ற படைப்புகளைப் புரிந்து கொண்டு ரசிக்கும் ஆர்வம் (ஆற்றல்?) உண்டு. மேலும், எழுதுவதைவிட நண்பர்களுடன் கலந்துரையாடுவதில் எனக்கு எப்போதுமே விருப்பம் அதிகம். நான் ரசித்ததை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்ததைப் போல அதன் விளைவாகத் தோன்றியதுதான் மொழிபெயர்க்கலாம் என்ற எண்ணம். பார்க்கப் போனால் ஆரம்பத்தில் தற்செயலாக அமைந்துவிட்ட ஒரு நிகழ்வு. காம்யுவின் எழுத்தைத் தமிழில் கொண்டுவந்தால் எப்படி இருக்குமென்று மனதில் தோன்றிய ஒரு மின்னல் கீற்று. அதுவே மொழியைப் பற்றிய அறிவையும், மொழிபெயர்ப்பு குறித்த திறமைகளையும் வளர்த்துக்கொள்ளத் தூண்டுதலாக இருந்தது. ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் எனக்குச் சில கதவுகளைத் திறந்திருக்கிறது. சில மேலைநாட்டு மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்ப்பை “மாற்றுப் படைப்பு” என்றும் கருதுகிறார்கள். இது குறித்து பல்வேறு கோட்பாடுகள் இருக்கின்றன. என்னைப் பொறுத்தவரை ‘படைப்பு’ என்பதே பெரிய சொல். சொந்தப் படைப்புகளை நான் எழுதாமல் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். சொல்வதற்கென்று என்னிடம் புதிதாக ஒன்றும் இல்லை.*

**கேள்வி : பிரெஞ்சு மொழிக்கும் தமிழுக்கும் உள்ள ஒற்றுமை - வேற்றுமைகள் பற்றி. . .?**

**பதில் :** *தமிழுக்கும் பிரெஞ்சுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை - வேற்றுமைகள் பற்றி ஒரு நீண்ட ஆய்வுக் கட்டுரையே எழுதலாம். வாக்கிய அமைப்பில் இரண்டும் வேறுபட்டிருப்பது ஒரு அடிப்படை வித்தியாசம். பிரெஞ்சிலுள்ள நீண்ட வாக்கியத்தை மனதில் வாங்கிக்கொண்டு, அதிலுள்ள சொற்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தமிழில் கண்டுபிடித்து, பின்னர் தமிழ் இலக்கண நியதியின்படி வாக்கியத்தை அமைக்க வேண்டும். இந்தப் பிரச்சினை இந்திய மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் போது இருப்பதில்லை. அதுபோலவே பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போதும் பெரும்பாலும் இருக்காது. தரமான பிரெஞ்சு - தமிழ் அகராதி இல்லாதது ஒரு சிக்கல். தமிழில் முன்னிலை ஒருமை, பன்மை பிரதிப் பெயர்கள் - நீ, நீங்கள் - இருப்பதைப் போலவே பிரெஞ்சிலும் உள்ளது. (இது ஆங்கிலத்தில் அடிபட்டு விடுகிறது) உரையாடுபவர்கள் இருவரிடையே இருக்கும் உறவின் தன்மையை இது சுட்டிக்காட்டுவதால் இதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. ‘அந்நியனில்’ ரேமோன் மெர்சோவிடம் திடீரென்று ‘நீ, வா, போ’ என்று ஒருமையில் பேசத் தொடங்கும்போது மெர்சோ முதலில் அதைக் கவனிப்பதில்லை. ‘இப்போதிலிருந்து நீ என்*

## ழான்-போல் சார்த்ர்

ழான்-போல் சார்த்ர். 1905ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் தேதி பாரிஸ் நகரத்தில் பிறந்தார். கத்தோலிக்கரான அவரது தந்தை, ஒரு கப்பற்படை அதிகார். தாய், பிராடஸ்டன்டு பிரிவைச் சேர்ந்த கிறிஸ்துவர். சார்த்ர் பிறந்த அடுத்த வருடமே, இந்தோ-சீனா போரில் அவர் தந்தை மரணம் அடைந்தார். இதை அடுத்து, அவரது தாயார் தன் பெற்றோர்களுடன் வசிக்கப் போய்விடவே, சார்த்ரின் குழந்தைப் பருவம், ஒரு கிழவர், இரு முதிய பெண்களின் மத்தியில் சம்பிரதாயமான நடுத்தரவர்க்கச் சூழலில் கழிந்தது. 1924இல் தன் மேல்படிப்பைத் தத்துவப் பிரிவில் தொடர்ந்த சார்த்ர், 1928இல் தேர்வடையாமல் தோல்வியுற்று, பிறகு 1929இல் முதன்மையாகத் தேர்வு பெற்றார். அப்பொழுது, இரண்டாம் இடம் பெற்றுத் தேர்ந்தவர், பிற்காலத்தில் இவருடைய சிறந்த சீடராகவும், உற்ற நண்பராகவும் விளங்கிய சிமோன் தெ போவார் என்ற பெண் எழுத்தாளர். 1929 முதல் பிரான்சில் பல இடங்களில் (இறுதியாகப் பாரிஸில்) தத்துவப் பேராசிரியராக இருந்த இவர், 1939இல் உலகப் போரில் ஈடுபட்டு, 1940 இல் போர்க் கைதியாகப் பிடிபட்டார். 1941இல் முடிவில், ஒரு சாதாரணக் குடிமகன் போல நடித்துத் தப்பிவிட்டார். அந்தக் காலகட்டத்தில்தான், 'சுதந்திரத்தின் பாதைகள்' என்ற மூன்று நாவல்கள் வரிசையின் முதல் நாவலையும், அவருடைய மகத்தான படைப்பான 'இருத்தலும் ஒன்றுமில்லாமையும்' என்ற தத்துவக் கட்டுரையையும் எழுதிமுடித்தார்.

1943இல் 'ஈக்கள்' (Flies) என்ற அவருடைய முதல் நாடகம் தோன்றியது. இதன் பின்னால் 'மீள முடியுமா? (No Exit), 'அழுக்கான கைகள்' (Dirty Hands), 'சாத்தானும் கடவுளும்' (Devil and the Good Lord) போன்ற பல நாடகங்களை எழுதினார். இது தவிர, பல நாவல்கள், சிறுகதைகள், இலக்கிய விமர்சனங்கள், சுயசரிதம், மற்ற சில பெரும் எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாறு, தத்துவக் கட்டுரைகள் இவரது படைப்புகள்.

இலக்கியம், தத்துவம், அரசியல் சித்தாந்தம் என்ற எல்லாத் தளங்களிலும் தீவிரமாகச் செயல்பட்டு வந்த இவர், 40-க்களிலிருந்த 80-க்கள் வரை, குறிப்பாக, பிரான்சிலும், பொதுவாக உலகெங்கிலும், பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். 'மீள முடியுமா?' என்ற இந்த நாடகத்தை இயக்கி, அதில் கார்செனின் பாத்திரத்தை ஏற்று நடிக்கும்படி இவர் தன் நண்பரும், இருபதாம் நூற்றாண்டின் மற்றுமொரு சிறந்த படைப்பாளியுமான ஆல்பெர் காம்யுவை முதலில் கேட்டுக் கொண்டார். வேறு பல காரணங்களினால் அது முடியாமல் போயிற்று. பிறகு, 1944ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் தேதி, பாரிஸ் நகரத்தில் முதல் முறையாக இது மேடையேற்றப்பட்டது.


சார்த்ருக்கு 1964ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது; ஆனால் அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். சார்த்ர் 1980ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காலமானார்.

*உண்மையான சிநேகிதன்' என்று அவன் சொன்னவுடன்தான் மெர்சோவுக்கு உறைக்கிறது. பிரெஞ்சில் இருப்பதைப் போலவே இதைத் தமிழில் கச்சிதமாகச் சொல்லமுடியும். ஆங்கிலத்தில் சுற்றிவளைத்துத் தான் சொல்ல வேண்டும். அடுத்தபடியாக, சில பண்பாட்டுக் கூறுகள் தமிழ்ப் பண்பாட்டிலிருந்து வேறுபட்டிருப்பதால் சில சமயங்களில் ஒருவித அந்நியத் தன்மை தென்படும். மொழிபெயர்ப்புகளில் இது தவிர்க்கப்பட முடியாத, தவிர்க்கப்படக் கூடாத அம்சம் என்பது என் கருத்து.*

**கேள்வி : ஒரு மொழிபெயர்ப்பு நூல் எப்படி உங்களிடம் உருவாகிறது?**

**பதில் :** *பிரெஞ்சு மொழியில் எனக்குப் பிடித்த புத்தகங்கள் அனைத்தையும் என்னால் மொழிபெயர்க்க முடிவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. பொதுவாக எக்காலத்துக்கும், எந்நாட்டவருக்கும் பொதுவாகவும் பொருத்தமாகவும் (ஒருவிதத்தில் பார்த்தால் தேவையானதாகவும்) உள்ள புத்தகங்களையே நான் இதுவரை தேர்ந்தெடுத்துள்ளேன். மனிதனின் வாழ்க்கைப் பிரச்சினைகள், சமூகத்துடன் அவனுக்குள்ள உறவு, அவனுடைய உலகில் மற்றவர்களின் தலையீடு, ஊடகங்களின் செயல்பாடும் அவற்றின் பாதிப்பும் என்பன போன்ற கருத்தாக்கங்கள் ஆழமாகவும் அழகாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள், அவற்றைத் தமிழில் கொண்டுவரவேண்டுமென்ற ஆவலை எனக்களிக்கின்றன. அது தேவையானதாகவும் தோன்றுகிறது. பிறகு, நான் தேர்ந்தெடுக்க*

நினைத்திருக்கும் புத்தகத்தைப் பற்றிக் கொஞ்சம் விரிவாக என் பதிப்பாசிரியர் க்ரியா ராமகிருஷ்ணனுடன் பேசுவேன். பிறகு, பிரெஞ்சுத் தூதரகத்தின் உதவியுடன் பிரெஞ்சுப் பதிப்பாளருடன் தொடர்பு கொண்டு காப்புரிமை பெறுவதற்கான முயற்சிகள் அவரால் மேற்கொள்ளப்படும்.




என்னுடைய முதல் கையெழுத்துப் பிரதி தயாரானவுடன் ராமகிருஷ்ணனும் நானும் பலமுறை சந்தித்து, அதை விவாதித்து, திருத்தங்களை மேற்கொள்வோம். மொழிபெயர்ப்பில் முக்கியமான கட்டம் இது. இதுபோன்ற அமர்வுகளில் நாங்கள் இருவருமே கற்றுக்கொண்டவை ஏராளம்.

**கேள்வி : பிரெஞ்சிலிருந்து தமிழுக்குப் பல நூல்களைக் கொண்டுவந்ததைப் போல, தமிழிலிருந்து பிரெஞ்சு மொழிக்குக் கொண்டுசென்ற முயற்சிகள் குறித்து...?**

**பதில் :** *பொதுவாக ஒருவர் தம் தாய்மொழியை நோக்கி மொழியாக்கம் செய்வதைப் போல, தாய்மொழியிலிருந்து வேறு மொழிக்குச் செய்யும் மொழிபெயர்ப்பு இருப்பதில்லை. தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு மொழிபெயர்க்கும் ஆர்வம் எனக்கு எப்போதும் இருந்திருக்கிறது. ஆனாலும் என்னதான் தவறில்லாத பிரெஞ்சில் எழுதினாலும், அழகான, கச்சிதமான நடையில் என்னால் எழுத முடியுமென்று எப்பொழுதும் சொல்லமுடியாது. பிரெஞ்சைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு எழுத்தாளர் அல்லது ஆசிரியரின் உதவி தேவைப்படும். மேலும், பிரெஞ்சில் தமிழ் படைப்புகளின் மொழிபெயர்ப்பை வெளியிடும் நல்ல பதிப்பாசிரியர் கிடைப்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. தமிழிலிருந்து பிரெஞ்சில் சில புதுக்கவிதைகளை மொழிபெயர்த்திருக்கிறேன். ஆங்காங்கே சில இலக்கியப் பத்திரிகைகளில் ஒன்றிரண்டு பிரசுரமாகியுள்ளன. இன்னும் பல கையெழுத்துப் பிரதிகளாகவே தங்கிவிட்டன.*

*1997-ல் நான் மேற்கொண்டிருந்த சில முயற்சிகளையடுத்து பாரிசில் நடைபெற்ற உலகக் கவிஞர்களின் கவியரங்கம் ஒன்றிற்கு தமிழ் நாட்டிலிருந்து திரு. ஞானக்கூத்தனும், செல்வி. கனிமொழி கருணாநிதியும் அழைக்கப்பட்டிருந்தனர். (இந்திய மொழிகள் அனைத்திற்கும் பிரதிநிதியான மொத்தம் பத்துக் கவிஞர்கள் இருந்தனர்) அப்பொழுது இவர்கள் இருவருடைய கவிதைகளிலிருந்து சிலவற்றை பிரெஞ்சில் மொழிபெயர்த்து அனுப்பியிருந்தேன். கவியரங்க அமைப்பாளர்கள் வெளியிட்ட தொகுப்பு ஒன்றில் அவை இடம் பெற்றிருந்தன.*

*பிரெஞ்சுக்காரர்கள் தமிழை நன்றாகப் பயின்று, தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு மொழிபெயர்க்க வேண்டுமென்பது என் ஆசை. பரிபாடல், திருக்குறளின் காமத்துப் பால் போன்ற படைப்புகளைத் தவிர, தற்கால தமிழ் சிறுகதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள திரு. ப்ரான்ஸ்வா குரோ* (Francois Gros) *ஒரு சிறந்த முன்னோடி. ஜி. நாகராஜனின் "நாளை மற்றுமொரு நாளே" விரைவில் வெளியிட இருக்கிறார். பாரிஸில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியையாக இருக்கும் பிரெஞ்சுப் பெண் திருமதி. எலிசபெத் சேதுபதி எனக்கு நெருங்கிய நண்பர். கி. ராஜநாராயணனின் புத்தகத்தை அவர் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறார். அயல் நாட்டவர்கள் இதுபோன்று தமிழில் ஆர்வம் கொண்டிருப்பது மனநிறைவை அளிக்கிறது.*

**கேள்வி : பிரெஞ்சு மொழி மற்றும் தமிழ்மொழிகளில் புலமை பெற்ற பிரெஞ்சுக்காரர் ஃப்ரான்ஸ்வா குரோவுக்கும் உங்களுக்கும் உள்ள உறவு பற்றி?**

**பதில் :** *தூரக் கிழக்கு நாடுகளுக்கான பிரெஞ்சுப் பள்ளியின் இயக்குநராக இருந்த திரு. ஃப்ரான்ஸ்வா குரோ* (Francois Gros) *உலகத் தமிழறிஞர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவர். தமிழ் மொழியின் பாரம்பரியத்திலும், தற்காலத் தமிழ் இலக்கியத்திலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. 'அந்நியன்' (1980) மொழிபெயர்ப்பையடுத்து அவருடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது. தொடர்ந்து "குட்டி*




இளவரசன்" கையெழுத்துப் பிரதியை சரிபார்க்கும் பணியில் எங்களுடன் சேர்ந்து அவரும் முழுமூச்சாக ஈடுபட்ட போது நான் கற்றுக்கொண்டவை நிறைய உண்டு. என்னுடைய மொழிபெயர்ப்பு முயற்சிகளுக்கு அவர் அளித்த ஊக்கத்துக்கு நன்றிசொல்லி மாளாது. 1982-க்குப் பிறகு, வருடாவருடம் புதுச்சேரியில் அவர் வந்து தங்கியிருக்கும் சில மாதங்களில் அடிக்கடி வாரக்கடைசியில் அங்கு போய், அவருடன் தங்கி, இருவருமாகச் சேர்ந்து பல புதுக்கவிதைகளை பிரெஞ்சில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டோம். ந. பிச்சமூர்த்தியில் தொடங்கி, சி.மணி, நாரணோ ஜெயராமன், நகுலன், க.நா.சு., வைத்தீஸ்வரன், தருமு சிவராமு, ஞானக்கூத்தன், ஆத்மாநாம், ஆனந்த், சுகுமாரன் உள்ளிட்ட பல கவிஞர்களிடமிருந்து சில கவிதைகளைத் தேர்ந்தெடுத்து ஒரு தொகுப்பாகக் கொண்டுவர நினைத்தோம். அது இன்னும் நிறைவேறவில்லை.

திரு. குரோவுடன் சேர்ந்து மொழிபெயர்த்த அனுபவம் மறக்கமுடியாத ஒன்று. மொழிகுறித்த, நடைகுறித்த நெளிவு சுளிவுகள், நுணுக்கங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். அவருடைய ஆழ்ந்த அறிவும், தீவிரக் கட்டுப்பாடும், அயராத உழைப்பும் என்னை வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. வயதிலும் அறிவிலும் என்னைவிடப் பல மடங்கு உயரத்திலிருந்தாலும் என்னிடம் மிகுந்த தோழமையுடனும், வாஞ்சையுடனும் இருந்தார். இன்னும் அதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். நான்தான் இன்றும் அதை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையோ என்ற மனத்தாங்கல் எனக்கு இருக்கிறது.

**கே: உங்களைப் போலவே பிரெஞ்சு - தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்க முயன்றிருக்கிறீர்கள் அல்லவா? "கீழை நாட்டுக் கதைகள்" நினைவுக்கு வருகிறது.**

**பதில் :** "கீழை நாட்டுக் கதைகள்" வருவதற்குப் பல வருடங்களுக்கு முன்பே இயனெஸ்கோவின் நாடகம் "காண்டாமிருகம்", திரு. டி.எஸ். தட்சிணாமூர்த்தி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு 1996-ல் வெளிவந்தது. (தட்சிணாமூர்த்தி ரிஸர்வ் வங்கியில் அதிகாரியாகப் பணி புரிந்து இப்போது ஓய்வு பெற்றுள்ளார்). அலியான்ஸ் ஃப்ரான்சேஸில் உயர்நிலைப் பட்டயப் படிப்பை முடித்த இவர், ஆங்கிலத்திலும் கவிதைகள் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ் இலக்கியங்களின் (குறிப்பாக கவிதைகளின்) தீவிர வாசகர். மறைந்த கவிஞர் ஆத்மாநாமின் நண்பர். 20-ஆம் நூற்றாண்டின் நவீன நாடகாசிரியர்களில் முதன்மையான ஒருவரான இயனெஸ்கோவின் "காண்டாமிருகம்" அகில உலக அளவில் பெரும் வெற்றியைக் கண்ட படைப்பு. இதை மொழிபெயர்ப்பதிலிருந்த சவால்களைத் திறம்பட எதிர்கொண்ட தட்சிணாமூர்த்தியின் அயராத உழைப்பும் உற்சாகமும் பாராட்டப்பட வேண்டியவை. 'க்ரியா'வின் இந்தப் பதிப்பும் சிறப்பாக வெளிவந்தது. இந்த வெளியீட்டின் தரத்திற்கு நிகரான கவனிப்பை இது இன்னும் பெறவில்லையோ என்ற நெருடல் எனக்கு இப்போதும் இருக்கிறது.

1990-களிலிருந்தே மொழிபெயர்ப்பாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்க முயன்று வருகிறேன். சென்னை அலையன்ஸ் ஃப்ரான்சேஸில் படித்த பல இளைஞர்களை பிரெஞ்சு மொழியில் குறிப்பிடத்தக்க தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இவர்கள் எல்லோருமே ஆங்கில வழிக் கல்வி பயின்றவர்கள். இவர்களில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழில் பேசுவார்கள், ஓரளவு படிப்பார்கள். ஆழ்ந்த வாசிப்பு இருக்குமா என்பது தெரியாது. தமிழில் எழுதுவது என்பது மிகவும் அரிது. சமூகவியல் ஆய்வுகளின்படி இதுபோன்ற நிலை காலனி ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளில் சகஜம் என்பது தெரியவரும். ஆகவே, பிரெஞ்சிலிருந்து நேரடியாகத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கு - அதுவும் இலக்கியப் படைப்புகளை எளிதில் யாரும் கிடைப்பதில்லை. கிடைத்த இரண்டு அல்லது மூன்று பேர்களும் வேறுசில நிர்ப்பந்தங்களினால் தொடர்ந்து ஈடுபட முடிவதில்லை.

## ஆல்பெர் காம்யு

ஆல்பெர் காம்யு 1913ஆம் ஆண்டு, அல்ஜீரியாவில் பிறந்தார். இவருடைய தந்தை பிரெஞ்சுக்காரர்; தாயார் ஸ்பெயின் தேசத்தவர். சிறு வயதிலேயே தந்தையை இழந்த இவர், பிரெஞ்சுக் காலனியாக இருந்த அல்ஜீரியாவில் தத்துவம் படித்துப் பட்டம் பெற்றார். காசநோய் காரணமாக மேல்படிப்பு படிக்க முடியாமல், நாடகத் துறை, பத்திரிகைத் துறை ஆகியவற்றில் ஈடுபட்டார். ஜெர்மன் ஆதிக்கத்தை எதிர்த்த பிரெஞ்சுக் கிளர்ச்சி இயக்கத்தில் முக்கிய இடம் பெற்றிருந்த 'போராட்டம்' (Combat) என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். பின்னர், பத்திரிகைத் துறையை விட்டுவிட்டு, எழுதுவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அகில உலகப் புகழ் அடைந்தார். 'அந்நியன்' இவரது முதல் நாவல் (1942). இது தவிர, 'பிளேக்' (The Plague), 'வீழ்ச்சி' (The Fall) என்ற நாவல்களும், 'காலிகுலா' (Caligula) முதலிய நாடகங்களும், 'சிசிபஸின் புராணம்' (The Myth of Sisyphus), 'கிளர்ச்சியாளன்' (The Rebel) ஆகிய தத்துவக் கட்டுரைகளும் இவருடைய முக்கியமான படைப்புகள்.

'இன்றைய மனிதனின் மனசாட்சி குறித்த பிரச்சினைகளைத் தெளிவான நேர்மையுடன் விளக்கியிருக்கும் இவரது இலக்கியப் படைப்புகளுக்காக' இவருக்கு 1957ஆம் ஆண்டு நோபல் பரிசு அளிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி, ஒரு கார் விபத்தில் காம்யு இறந்தார்.


அவர் இறக்கும்போது, ஏற்கெனவே அவர் எழுத ஆரம்பித்து, முடிவுறாத நிலையில் இருந்த நாவலின் கைப்பிரதி அவர் மகள் காத்தரினால் ஒழுங்கு செய்யப்பட்டு, முப்பத்துநான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 'முதல் மனிதன்' (The First Man) என்ற தலைப்பில் 1994ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இந்த நாவல், முதல் வாரத்திலேயே ஐம்பதாயிரம் பிரதிகள் விற்றது. முதல் மாதத்திலேயே, இந்த மொழிபெயர்க்க பத்துக்குப் மேற்பட்ட நாடுகள் அனுமதி கோரின. சுயசரித அம்சங்கள் கொண்ட இந்த நாவலில் காம்யுவின் ஆரம்பக் கால வாழ்க்கை குறித்த சுவாரஸ்யமான தகவல்கள் கிடைக்கின்றன. காம்யுவின் நண்பரும் முக்கியமான பத்திரிகை ஆசிரியருமான ழான் டேனியல், காம்யுவை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த நாவல் ஒரு முறையான அறிமுகமாக இருக்குமென்று கருதுகிறார்.

*2005-ல் மார்கெரித் யூர்ஸ்னாரின் "கீழை நாட்டுக் கதைகளை" மொழிபெயர்ப்பதென்று முடிவு செய்தோம். அந்தத் தொகுப்பில் பத்து சிறுகதைகள் இருந்தன. அதில் ஐந்து கதைகளைத் தேர்ந்தெடுத்து, அலையன்ஸ் ஃப்ரான்சேஸில் பணி புரிந்துவந்து மூன்று பேர்கள் மனிஷா நாராயண், எஸ். ஜனகநந்தினி, துர்கா சங்கர் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு தமிழில் மொழிபெயர்க்க முன்வந்தார்கள். பிரெஞ்சு மொழியில் உயர்நிலை பட்டயப் படிப்பு முடித்திருந்த இவர்களில் இருவர் ஆசிரியராகவும், மனிஷா நிர்வாகப் பிரிவு செயலராகவும் இருந்தனர். இவர்கள் பிரெஞ்சு மூலத்தை நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்கள் என்பதால் தாய்மொழியான தமிழில் இதுவரை எழுதிப் பழக்கம் இல்லாவிட்டாலும் முயன்று பார்க்க முடியுமென்பது என் கருத்து. அவர்களுடைய மொழிபெயர்ப்பை நான் மேற்பார்வையிட்டு, திருத்தங்களைச் சொன்னபோது மனப்பூர்வமாக ஒத்துழைத்தார்கள். மார்கெரித் யூர்ஸ்னார் பிரெஞ்சு மொழியை மிகவும் நுணுக்கமாகவும், கச்சிதமாகவும் கையாண்ட பிரபல எழுத்தாளர். அவருடைய எழுத்தை மொழிபெயர்த்தல் எளிதான செயல் அல்ல.*

*அகில உலக மார்கெரித் யூர்ஸ்னார் சங்கத்தின் அங்கத்தினராக இருந்த பிரெஞ்சுப் பேராசிரியர் டாக்டர். ஆஷ்மி ஹாலே சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஓராண்டு கௌரவப் பேராசிரியராக இருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு, அவரிடம் இந்தப் புத்தகத்தைப் பற்றிய அறிமுகக் கட்டுரையைப் பெற்று, அதை நான் தமிழில் மொழிபெயர்த்திருந்தேன்.*

**கேள்வி : சுந்தர ராமசாமி பாரிசில் நடந்த கலை இலக்கிய விழாவில் கலந்துகொண்டது பற்றி மிக நல்ல கட்டுரையொன்று எழுதியிருக்கிறார். அதில் உங்களைப் பற்றியும் குரோ பற்றியும் நிறையச் சொல்லியிருப்பார்.**

**பதில் :** *பிரான்ஸில் 1985-ல் ஆண்டை "இந்திய ஆண்டாகக்" கொண்டாடினார்கள். அதைச் சார்ந்து பல கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. அதே வருடம், மொழிபெயர்ப்பாளர்களுக்கான ஸ்காலர்ஷிப் கிடைக்கப் பெற்று பிரான்ஸில் மூன்று மாதங்கள் நான் இருந்தேன். அப்போது பாம்பிதோ மையம்* (Pompidou Centre) *என்ற இடத்தில் 4 நாட்கள் இந்திய மொழிக் கவிஞர்களின் கவிதை*




## பியரெத் ஃப்லுசியோ

1941இல் பிறந்த பியரெத் ஃப்லுசியோ பிரான்ஸின் இன்றைய முன்னணி எழுத்தாளர்களிள் ஒருவர். 'வௌவாலின் கதை' என்ற சிறுகதைத் தொகுப்பு இவர் எழுதிய முதல் புத்தகம் (1975), 1985 இல் இவர் எழுதிய 'ராணியின் உருமாற்றம்' சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான 'கான்கூர்' விருதைப் பெற்றது. பிரான்ஸின் இலக்கிய விருதுகளில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படும் ஃபெமினா விருது 1990இல் இவருடைய 'நாம் நிரந்தரமானவர்கள்' என்ற நாவலுக்கு அளிக்கப்பட்டது. 2001 இல் வெளிவந்த 'சின்னச் சின்ன வாக்கியங்கள்' பிரான்ஸின் புத்தக விற்பனையாளர் சங்கத்தின் 'சிறந்த நாவலுக்கான பரிசை'யும், அதே ஆண்டு சீனாவில் அளிக்கப்படும் 'சிறந்த அந்நிய மொழி நாலுக்கான விருதை'யும் பெற்றது.

"இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நவீன நுகர்வோர் சமூகத்தில், மிகவும் நீண்டதாக இல்லாமல் ஆனால் பிரமாதமாக எழுதப்பட்டிருக்கும் பியரெத் ஃப்லுசியோவின் இந்த நாவல் பிரெஞ்சு இலக்கிய உலகின் பாரம்பரிய அம்சமான மனித நேயத்தை நாம் நெகிழ்வுறும் வகையில் நினைவூட்டுகிறது. இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த இரண்டு பெண்களுக்கிடையிலான (தாய்-மகள்) இந்தக் கதையில் நம் ஒவ்வொருவரின் சொந்த வாழ்க்கைப் பிரச்சினைகளையும் நம்மால் இனம் கண்டு கொள்ள முடியும். உருக்கமாகவும் அன்னியோன்னியமாகவும் கதை சொல்லும் தன்னுடைய பாணியில், மானுட வாழ்க்கையின் சோகத்தைப் பற்றிச் சிந்திக்க நம்மை அழைக்கிறார் இதன் ஆசிரியை - கதாநாயகி. இதுவே இந்தப் படைப்பின் வெற்றிக்கு காரணம்."

*அறிமுகமும், வாசிப்பும் கொண்ட நிகழ்ச்சி ஒன்று நடந்தது. பல இந்திய மொழிக் கலைஞர்கள் கலந்துகொண்டனர். தென்னிந்தியாவிலிருந்து தமிழுக்கு சுந்தர ராமசாமியும், மலையாளத்திற்கு ஐயப்பப் பணிக்கரும், கன்னடத்திற்கு கோபாலகிருஷ்ண அடிஹாவும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுடைய சில கவிதைகளை முன்கூட்டியே தேர்ந்தெடுத்து, பிரெஞ்சில் மொழிபெயர்த்து, அறிமுகக் கட்டுரை எழுதி திரு. குரோ உதவியிருந்தார். நான்காவது நாள் தென்னிந்தியக் கவிதைகள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க வேண்டிய திரு. குரோ புதுச்சேரியில் வேறு ஒரு முக்கிய அலுவல் காரணமாக வரமுடியவில்லை. ஆக, அன்று தலைமைப் பொறுப்பேற்று விழாவை நடத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு பாரிசில் தமிழாசிரியராக இருந்த திரு. முருகையனுக்கும் எனக்கும் அளிக்கப்பட்டது. விழாவுக்கு இரண்டே நாட்கள் இருக்கும் போது பாம்பிதோ மையத்தில் அதுவரை கண்டிராத அளவில் வேலைநிறுத்தம் நடந்தது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ப்லேஸ் கோதியெ* (Blaise Gauthier) *என்ற பிரெஞ்சுக்காரரும், நானும் விழாவை வெற்றிகராக நடத்த முடியும் என்ற நம்பிக்கையில் ஏற்பாடுகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அவர் சொன்னதை நான் சு.ரா.வுக்குத் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னேன். இருந்தாலும் அவர் மிகுந்த கவலையுடன் இருந்தார். என்னுடைய அசாத்திய நம்பிக்கைக்குப் பின்னால் தான் ஒளிந்துகொள்ளப் போவதாகச் சொன்னார். கவலையான சூழ்நிலையிலும் அவருடைய நகைச்சுவை உணர்வு என்னை நெகிழ வைத்தது. விழா வெற்றிகரமாக நடந்தது.*

*பிரெஞ்சு அரசாங்கம் கவிஞர்கள் நான்கு நாட்கள் தங்குவதற்கு மட்டுமே ஏற்பாடு செய்திருந்தார்கள். பாரிஸில் என் நண்பர் க்ருதிவாசனுடன் நான் தங்கியிருந்தேன். சு.ரா.வையும் எங்களுடன் இருக்கச் சொல்லி அழைத்து, அவருடைய விமானப் பயணச் சீட்டை ஒத்திப் போட்டு, மேலும் ஒரு வாரம் பாரிசில் இருக்க வழி வகுத்துக் கொடுத்தேன். பாரிஸ் நகரத்தின் குளிர் அவருக்குச் சற்று சிரமமாக இருந்தது. அப்படியும் பல இடங்களுக்கு அவரை அழைத்துச் சென்றேன். ஓவியர் பிக்காஸோவின் ஓவியக் கண்காட்சிக்கு நீண்ட நேரம் வரிசையிலிருந்து காத்திருந்தோம். அவருக்குக் குளிருமே என்று எனக்குக் கவலை. ஆனால் அவரோ ஓவியக் கண்காட்சி ஒன்றுக்கு*

இவ்வளவு பேர் இவ்வளவு நேரம் 'க்யு' வரிசையில் காத்திருக்கிறார்கள் என்பதே மற்ற கவலைகளை மறக்கச் செய்யும் மகிழ்ச்சியான நிகழ்வு என்றார். மறக்க முடியாத அனுபவங்கள்...


**கேள்வி : பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பின்பு தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் பிரெஞ்சிலிருந்து நேரடியாக ஒரு படைப்பைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கும் என்ன விதமான வேறுபாடு உள்ளது?**

**பதில் :** நேரடியாக மொழிபெயர்க்காமல் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழுக்குக் கொண்டுவருவதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மூலமொழி தெரியாதபோது ஆங்கில மொழிபெயர்ப்பை எந்த அளவுக் நம்பலாம் என்பது கேள்விக்குறி. காம்யுவின் அந்நியன், எக்சுபெரியின் மானுட பூமி, பூர்தியுவின் தொலைக்காட்சி புத்தகங்களிலிருந்து இதற்குப் பல உதாரணங்களை என்னால் கொடுக்கமுடியும். சில மொழிபெயர்ப்புக் கருத்தரங்களில் இதைப் பற்றிக் குறிப்பிட்டும் இருக்கிறேன். மொழிபெயர்ப்புத் துறையிலேயே சில மாறுபட்ட கோட்பாடுகள் இருக்கின்றன. எல்லா மொழிபெயர்ப்பாளர்களின் அணுகுமுறைகளும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதில்லை.

தவிர, பிரெஞ்சு சொல் ஒன்றுக்கு ஆங்கிலத்தில் பயன்படுத்தப்பட்ட சொல் தோராயமாக மட்டுமே நிகரான சொல்லாக இருக்கலாம். அதைத்தான் தமிழில் மொழிபெயர்க்க வேண்டியிருக்கும். தமிழிலும் 100% சரியான சொல் கிடைக்கும் என்ற உத்திரவாதம் இல்லைதான். இருந்தாலும் தோராயமான ஆங்கிலச் சொல்லை ஏன் பயன்படுத்தி மூலத்திலிருந்து இன்னும் விலகிப் போக வேண்டும்? ஒவ்வொரு மொழியிலும் அது பேசப்படும் மண், அதன் மக்கள், அவர்களின் பண்பாடு இவற்றின் வரலாற்று ரீதியிலான தாக்கம் இருக்கும். மொழிபெயர்ப்பில் அதன் சில நுண்ணிய கூறுகள் சில சமயங்களில் மறைந்துவிட வாய்ப்பிருக்கிறது. மூலத்திலிருந்து வேறு மொழி வழியாக மூன்றாம் கைக்கு வந்து சேரும்போது இந்த இழப்பு இன்னும் அதிகமாகவே இருக்கும். "இரண்டு முறை மொழி மாற்றம் செய்வது இரண்டு முறை ஏமாற்றுவதைப் போல" என்று பிரெஞ்சில் வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

**கேள்வி : பிரெஞ்சுத் திரைப்படங்களையும் பெருமளவு தமிழில் அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள் அல்லவா?**

**பதில் :** அலையான்ஸ் ஃபிரான்சேஸ் நிறுவனத்தில் நான் பிரெஞ்சு மொழி கற்கச் சென்ற நாட்களிலிருந்தே பல அரிய பிரெஞ்சுத் திரைப்படங்களை பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. புது தில்லியுள்ள பிரெஞ்சுத் தூதரகத்தின் கலாச்சார உறவுத்துறை மூலமாக, இந்தியாவிலுள்ள அனைத்து அலையான்ஸ் ஃபிரான்சேஸ் மையங்களிலும் இந்தத் திரைப்படங்கள் வாரத்துக்கு ஒன்றாக ஒவ்வொரு வாரமும் காட்டப்பட்டன. அங்கு படிக்கும் மாணவர்களுக்கு அனுமதி இலவசம். அதைப் பல மாணவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதுதான் என் வருத்தம். ஏனென்றால் அன்றைய நாட்களில் வேறெங்கும் பார்க்க வாய்ப்பில்லாத பிரெஞ்சுத் திரைப்படங்களை இங்கே பார்க்க முடிந்ததோடல்லாமல் பிரெஞ்சு மொழி பேசுவதைக் கேட்க முடிந்தது. அந்நாட்டவர்களின் வாழ்க்கை முறை, பண்பாட்டுப் பின்னணி இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது. மொழி பற்றிய அறிவின் தளம் விரிவடைந்தது.



*ஏற்கெனவே ஆங்கிலம் வாயிலாக அறிந்திருந்த சில பிரபல பிரெஞ்சுத் திரைப்பட இயக்குநர்களின் படைப்புகளை இங்கே பார்த்தேன். சென்னையில் பல திரைப்பட சங்கங்களில் பிரெஞ்சுப் படங்கள் காட்டப்படும் போதெல்லாம் முடிந்த அளவு அவற்றை அறிமுகப்படுத்திப் பேசியிருக்கிறேன். 1978-ல் சில நண்பர்களுடன் என்னுடைய அபிமானத் திரைப்படப் படைப்பாளி ஃப்ரான்ஸ்வா த்ரூஃபோ* (Francois Truffaut) *பற்றிய பேசிக்கொண்டிருந்தபோது மதுரை என். சிவராமன் அவர் நடத்திக் கொண்டிருந்த "வைகை" பத்திரிகையில் அதுபற்றி கட்டுரையாக எழுதும்படி கேட்டுக் கொண்டார். பிரெஞ்சு திரைப்படங்களைப் பற்றி நான் முதல் முதலாக எழுதிய கட்டுரைத் தொடர் "த்ரூஃபோவும் திரைப்படக் கலையும்". த்ரூஃபோவைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தியது எனக்கு மனநிறைவை அளித்தாலும், அதைப் படித்த பின்னர் அந்தப் படங்களைப் பார்க்க விழையும் ரசிகர்களுக்கு அந்த வாய்ப்பை என்னால் அளிக்க முடியாதே என்ற ஆதங்கம் இருந்தது. அந்தக் கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்பு இருந்ததாக சிவராமன் சொன்னார். நான் தமிழில் எழுதுவதற்கு ஊக்கமளித்து, பிள்ளையார் சுழி போட்டது "வைகை".*

**கேள்வி : அதற்குப் பிறகு இந்தத் துறையில் இன்னும் வேறு என்ன செய்தீர்கள்?**

**பதில் :** *1988-ல் சென்னை பிலிம் சொஸைட்டி சார்பில் சென்னை புக்ஸ் பதிப்பகம் "மரபை மீறிய சினிமா" என்ற ஒரு நல்ல புத்தகத்தை வெளியிட்டது. பிரெஞ்சுத் திரைப்பட 'புதிய அலை' தோன்றிய வரலாற்றையும், அதை உருவாக்கியவர்களையும் பற்றிய புத்தகம். இதில் நான் மூன்று கட்டுரைகளையும், வி. சக்கரவர்த்தி, எம். சிவகுமார், ஆர். ராமானுஜம் ஆகியோர் தலா ஒரு கட்டுரையும் எழுதியிருந்தார்கள். இந்தப் புத்தகத்திற்கு பிரெஞ்சுத் தூதரகத்தின் நிதி உதவி கிடைக்க நான் உதவினேன். அதன் பிறகு, சென்னை பிலிம் சொஸைட்டி வெளியிட்டு வந்த "சலனம்" என்ற திரைப்பட மாத இதழில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதினேன். பிரெஞ்சு இயக்குநர்களைத் தவிர, ஆல்ப்ரெட் ஹிட்ச்காக், குருதத் ஆகியவர்களைப் பற்றியும் எழுதினேன். திரைப்பட ரசனையை உலகளவில் விரிவாக்கிய திரைப்பட சங்கங்களுடன் முடிந்தவரை இணைந்து செயல்பட்டேன்.*

**கேள்வி : பிரெஞ்சு திரைப்பட இயக்குநர்கள் பற்றி நீங்கள் எழுதிய சில புத்தகங்கள் இன்றும் பேசப்படுகின்றன. அவற்றைப் பற்றி...?**

**பதில் :** *1997-ல் அலையான்ஸ் ஃபிரான்சேஸ் நிறுவனம் பிரெஞ்சுத் தூதரகத்தின் உதவியுடன் வருடாவருடம் பிரெஞ்சு இயக்குநர் அல்லது நடிகர் ஒருவரின் 6 அல்லது 7 படங்களைத் தேர்ந்தெடுத்து விழா கொண்டாடியது. நிறுவனத்தின் தலைவராக அப்போது நான் இருந்ததால், அதற்கான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொண்டிருந்தேன். அது சமயம் ஒரு எண்ணம் உதித்தது. அந்த இயக்குநரின் வாழ்க்கை, திரைப்படக் கோட்பாடு, அவருடைய பாணி, அவர் உருவாக்கிய படங்கள் இவற்றைப் பற்றி ஒரு சிறிய புத்தகத்தை விழாவின்போது கொண்டு வந்தால், அந்தப் படங்களைப் பார்க்கும் ரசிகர்களுக்கு சுவாரஸ்யமான பின்னணியாவது தெரியுமே என்று தோன்றியது. மேலும், அதைத் தமிழில்தான் செய்ய வேண்டும் என்று நினைத்தபோது 'க்ரியா' ராமகிருஷ்ணனும் அதை வெளியிட மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டார். இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டுமே மேலைநாட்டுப் படங்களைப் பார்த்து, அவற்றைப் பற்றி மேலோட்டமாகவே இருந்தாலும் விமர்சிக்க முடியுமென்ற தவறான ஒரு கருத்து சென்னை மாநகரம் போன்ற இடங்களில் நிலவியது. இந்தப் படங்கள் ஆங்கிலத்தில்* Sub-title *செய்யப்பட்டிருந்ததும் காரணமாக இருந்திருக்கலாம். ஆகவேதான் மொழியின் எல்லைகளைத் தாண்டி இந்தப் படங்களைப் புரிந்துகொள்ள உதவும் வகையில் இந்தப் புத்தகங்களைக் கொண்டுவர எண்ணினேன்.*

*ப்ரான்ஸ்வா த்ரூஃபோ* (Francois Truffaut) *ரோபெர் ப்ரெஸ்ஸோன்* (Robert Bresson) *லூயிமால்* (Louis Malle) *ஆகிய மூன்று படைப்பாளிகளைப் பற்றிய மூன்று புத்தகங்கள் வெளிவந்தன. படைப்பாளிகளின் உருவங்களை முகப்பு ஓவியமாக வரைந்து கொடுத்தவர் பிரபல ஓவியர் கே.எம். ஆதிமூலம். பத்து ரூபாய் மட்டுமே விலையிடப்பட்டிருந்த இந்தச் சிறு புத்தகங்களை பல ரசிகர்கள் விரும்பிப் படித்ததாக எனக்குச் சொன்னார்கள். பல காரணங்களால் இதுபோன்ற முயற்சிகளைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போய் விட்டது.*

## தாகூர் இலக்கிய விருதுபெற்ற எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணனுக்கு வாழ்த்துக்கள்




மகாகவி தாகூரின் 150வது ஆண்டினை ஒட்டி இந்திய இலக்கியங்களைக் கௌரவிக்கும் விதமாக கொரிய அரசாங்கம் சார்பில் சாம்சங் நிறுவனம் சாகித்ய அகாதமியோடு இணைந்து தாகூர் இலக்கிய விருது ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

91 ஆயிரம் ரொக்கப்பணமும் தாகூர் உருவச்சிலையும் பாராட்டுப் பத்திரமும் கொண்டது இவ்விருது. ஒவ்வொரு ஆண்டும் இந்திய மொழிகளில் எட்டு தேர்வு செய்யப்பட்டு அதில் உள்ள மிகச்சிறந்த இலக்கியவாதியின் ஒரு நூலிற்கு தாகூர் இலக்கிய விருது வழங்கப்பட்டு வருகிறது.

2010ம் ஆண்டிற்கான தாகூர் இலக்கிய விருது எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய யாமம் நாவலுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெருமைக்குரிய இந்திய விருதான தாகூர் இலக்கியவிருது தமிழுக்கு முதன்முறையாகக் கிடைத்துள்ளது. இந்திய அளவில் தமிழின் பெருமையை உணரச்செய்த எஸ். ராமகிருஷ்ணனை நேர்காணல் இதழ் பெருமையுடன் வாழ்த்துகிறது.

---

## சாகித்ய அகாதமியின் மொழிபெயர்ப்புக்கான விருது பெற்ற நிர்மால்யாவுக்கு வாழ்த்துக்கள்



மலையாள எழுத்தாளர் நூரநாடு ஹனீப் எழுதிய 'செங்கோல் இல்லாமல் கிரீடம் இல்லாமல்' என்னும் நாவலின் தமிழ் மொழியாக்கத்திற்காக 2010ன் சாகித்ய அகாதமி விருது நிர்மால்யாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. உமர் கலீபாவின் வாழ்க்கையின் நாவல் வடிவம் இந் நூல். கிழக்குப் பதிப்பகத்தின் வெளியீடு.

முழுக்கங்களையும் கோஷங்களையும் கவிதைகள் என்று ஸ்தாபித்துக் கொண்டிருந்த வானம்பாடி கவிதைகளுக்கும் அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருந்த இளம்கவிஞர்களுக்கும் அசல் கவிதைகளை இனம் காட்டுவதற்காகவும், புரட்சிகரக் கவிதைகளை அழகியலுடன் படைத்துக் காட்ட முடியும் என்கிற உதாரணத்தை முன்வைப்பதற்காகவும் மலையாளக் கவிஞர் சச்சிதானந்தனின் கவிதைகளை சிற்றிதழ்களில் மொழிபெயர்க்கத் தொடங்கினார். தொடர்ந்து கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என நூற்றுக்கணக்கான நவீனப் படைப்புகளைச் சிற்றிதழ்களில் மொழிபெயர்த்துள்ளார்.

திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, நல்லி – திசை எட்டும் விருது, கேரள கல்சுரல் சென்டர் விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். தற்போது ஊட்டியில் வசித்து வருகிறார்.

---

வெ. ஸ்ரீராம் மொழிபெயர்த்துள்ள நூல்கள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள:

Cre-A: Publishers
H-18, Flat No. 3, South Avenue
Thiruvanmiyur, Chennai 600041. INDIA
T: +91-44-24412993
M:+91-94445-12885
E-mail: creapublishers@gmail.com

# வெ. ஸ்ரீராம்

**எஸ். ராமகிருஷ்ணன்** – பதிப்பாளர், க்ரியா பதிப்பகம்.

*வெ. ஸ்ரீராமை முதலில் சந்தித்தது 1976 அல்லது 1977இல் என்று நினைக்கிறேன். அந்த ஆண்டுகளில் ஒவ்வொரு புதன்கிழமையும் சனிக்கிழமையும் அலியான்ஸ் ஃபிரான்சேஸில் பிரெஞ்சுத் திரைப்படங்களைத் திரையிடுவார்கள். நானும் என் நண்பர் ஜெயலட்சுமியும் அந்த இரண்டு நாட்களிலும் முடிந்தவரை அலியான்ஸுக்குப் போவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தோம். அப்படிப்பட்ட நாட்களில் ஸ்ரீராமை சந்தித்திருக்கலாம். ஆனால் நன்றாக நினைவிருப்பது 1977 மார்ச் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை அலியான்ஸ் ஃபிரான்சேஸில் நடந்த கூத்துப்பட்டறையின் முதல் கூட்டத்தின்போது அவர் அங்கு இருந்தது. பழக்கமான முதல் சில சந்திப்புகளிலேயே 'அந்நியன்' மொழிபெயர்ப்பைப் பற்றி அவரிடம் பேசியதும், அதை க்ரியா வெளியிட விரும்பியதைத் தெரிவித்ததும் நினைவிருக்கிறது.*

*இப்படி ஆரம்பித்த மொழிபெயர்ப்புக் கூட்டுமுயற்சி, இன்று 31 ஆண்டுகளில் சுமார் பத்து முக்கியமான மொழிபெயர்ப்பு நூல்களாக வளர்ந்திருக்கிறது. இது எனக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது. இந்த மொழிபெயர்ப்புகள் நிலைத்துநிற்கும் தன்மையையும் தரத்தையும் கொண்டிருப்பவை என்பது முக்கியமான காரணம். அதற்குப் அப்பால் மொழிபெயர்ப்புத் துறையில் பின்வரும் தலைமுறைகள் கற்றுக்கொள்வதற்கும் உத்வேகம் பெறுவதற்கும் ஒரு சக்தியாக அவை இருக்கின்றன.*

*ஒரு பதிப்பாளனாக, ஒரு பதிப்பாசிரியராக ஸ்ரீராமுடன் இந்த மொழிபெயர்ப்புகளில் கடுமையாக உழைத்திருக்கிறேன் என்பதும், இந்த உழைப்பின் மூலமும், ஸ்ரீராமின் தொடர்பு மூலமும் நான் கற்றுக்கொண்டவை ஏராளம் என்பதும் இவற்றை எனக்கு மிக முக்கியமானவையாக ஆக்குகின்றன.*

*ஸ்ரீராம் ஒரு இலக்கிய மொழிபெயர்ப்பாளராக மட்டும் இருந்திருந்தால் இப்போது நமக்கு அவர் தந்திருக்கும் மொழிபெயர்ப்புகள் இவ்வளவு சிறப்பாக அமைந்திருக்குமா என்று கேட்கத் தோன்றுகிறது. என் அனுபவத்தில், நான் அவருடன் கொண்ட நெருங்கிய உழைப்புத் தொடர்பின் அடிப்படையில் பார்க்கும்போது, இந்தக் கேள்விக்கான பதில் எதிர்மறையில்தான் இருக்கும். அவர் மொழிபெயர்த்திருப்பவை இலக்கியப்படைப்பைப் புரிந்துகொள்வதற்கும், படைப்பின் உள்ளடக்கத்தை, மொழியை, பார்வையை பிரெஞ்சுப் பண்பாட்டின் பின்னணியிலும் வரலாற்றின் பின்னணியிலும் பொருத்திப் பார்க்க உதவியிருக்கிறது. இப்படிப் பார்த்துப் புரிந்துகொள்வது அவருக்கு மிகப் பெரிய வலுவைத் தந்திருக்கிறது. இவற்றுடன் அவர் பிரெஞ்சு மொழியைக் கற்பிக்கவும் செய்திருக்கிறார். இவை அனைத்தும் அவருக்குள் ஒரு அபூர்வமான திறமையை இயல்பான ஊற்றாக மாற்றியிருக்கின்றன.*

*சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் ஸ்ரீராம் அலியான்ஸ் ஃபிரான்சேஸின் நிர்வாகத்தில் நேரடியாக ஈடுபட்டிருந்தார், பிரெஞ்சு மொழி, பிரெஞ்சு அறிஞர்கள், கலைஞர்கள் ஆகியோருடனும், பிரெஞ்சுத் திரைப்படம், நாடகம், ஓவியம் போன்ற துறைகளுடனும் நேரடியாகத் தொடர்புகொள்ள அவருக்குக் கணக்கற்ற வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. இந்த அனைத்து வாய்ப்புகளையும் தன்னைச் செழுமைப்படுத்திக்கொள்ள, பிரெஞ்சுப் பண்பாடு-மொழி பற்றிய தன் அறிவு தொடர்ந்து விரிவடைய அவர் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். இது இயல்பாக நடந்தது என்பது என் கணிப்பு. ஒரு பண்பாட்டின் விரிவான தாக்கத்தின் வெளிப்பாடுதான் ஸ்ரீராமின் ஆற்றலை வளர்த்திருக்கிறது; அவரும் அதற்கு இடம் கொடுத்திருக்கிறார்.*

இவை தவிர, அவர் பிரான்ஸுக்குப் பலமுறை சென்று தங்கி, பிரெஞ்சுப் பண்பாட்டை அது இயங்கும் தளத்திலேயே எதிர்கொண்டிருக்கிறார். இவை அனைத்தும் அவருடைய பிரக்ஞையின் பரிமாணங்களை மாற்றியிருக்கினறன. இது எல்லா மொழிபெயர்ப்பாளர்களுக்குமே கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அல்ல. இந்த வாய்ப்புகளை ஸ்ரீராம் திறம்படப் பயன்படுத்திக்கொண்டு, ஒரு பண்பாட்டின் சாரத்தை அர்த்தமுள்ள வகையில் உள்வாங்கிக்கொண்டிருக்கிறார். இவைதான் ஸ்ரீராமின் மொழிபெயர்ப்புகள் மிகத் தரமானவையாக அமையக் காரணங்களாக இருந்திருக்கின்றன.

மொழிபெயர்ப்பாளராக அவர் தன்னைத் தொடர்ந்து மேம்படுத்திக்கொண்டிருந்திருக்கிறார். இது இரண்டு அம்சங்களைக் கொண்டது. ஒன்று பிரெஞ்சு தமிழ் - இரண்டு மொழிகளைப் பற்றிய அறிவையும், பயிற்சியையும் தொடர்ந்து மேற்கொள்வது; இரண்டாவது, தான் எழுதியதைத் தீவிர மறுபரிசீலனைக்கு உட்படுத்துவது; இப்படி உட்படுத்தப்படும்போது சொல்லப்படும் கருத்துகளைக் கவனமாகக் கேட்பது. இந்த இரண்டிற்குமான கணக்கற்ற எடுத்துக்காட்டுகளை நான் சொல்ல முடியும். ‘அந்நியனி’ல் ஆரம்பித்து, சமீபத்திய ‘சின்னச் சின்ன வாக்கியங்கள்’ வரை ஒவ்வொரு மொழிபெயர்ப்பைக் குறித்தும் நான் சொல்ல முடியும். மொழிபெயர்ப்பு என்பது ஒரு கூட்டுச் செயல்பாடு என்பதை முழுமையாக உணர்ந்து செயல்படுபவர் ஸ்ரீராம். மூலத்திலிருக்கும் பொருள், தொனி, குறிப்பு என்று அனைத்தையும் கவனமாகப் பார்ப்பவர். சொல்லப்படும் கருத்து அவருக்கு ஏற்புடையதாக இருந்தால், ஒரு வாக்கியத்தை எத்தனை முறை வேண்டுமானாலும் திரும்பத் திரும்ப எழுதித் திருத்தமாக அமைய அயராமல் உழைப்பவர் அவர். நாங்கள் இருவரும் சேர்ந்து போராடிய வாக்கியங்களுக்குக் கணக்கு இல்லை. இந்த முனைப்பு, உழைப்பு, அக்கறைதான் ஒரு மொழிபெயர்ப்பைச் செம்மையாக்கும் என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் உணர்ந்திருக்கிறோம். இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளராக ஸ்ரீராம் எந்த ஒரு மொழிபெயர்ப்பும் முற்றாக முழுமையடைந்து விடுவதில்லை என்பதை உணர்ந்திருக்கிறார் என்பதைக் குறிப்பிட வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு மீண்டும் மறுஅச்சாக வெளியிடப்படுவதற்குமுன் க்ரியாவுக்குத் தொடர்ந்து கிடைக்கும் மொழி பற்றிய அறிவு, மொழிபெயர்ப்பை மீண்டும் வெளியிடும்போது பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஸ்ரீராம் முற்றிலும் ஏற்றுக்கொண்டு, ஒரு மொழிபெயர்ப்பை மறுஅச்சு செய்வதற்கு முன்னால் மீண்டும் ஒருமுறை வரிக்கு வரி சரிபார்ப்பதில் அவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வார். இந்தச் சமயத்தில் மொழிபெயர்ப்பைக் குறித்து யாரேனும் பயனுள்ள கருத்துகளைத் தெரிவித்திருந்தால் அவற்றையும் திருத்தத்தின்போது பரிசீலித்துச் சேர்த்துக்கொள்வார். இது ‘அந்நியன்’ இருமுறை மறுஅச்சு ஆனபோதும், ‘குட்டி இளவரசன்’, ‘சொற்கள்’ ஆகியவை மறுஅச்சு ஆகும்போது நடந்திருக்கிறது. தமிழில் ஒரு மொழிபெயர்ப்பு மீண்டும் மீண்டும் திருத்தங்கள் மூலம் மறுஅச்சு செய்யப்படுவது இதுவே முதல்முறை. இந்த ஆரோக்கியமான பதிப்புச் செயல்பாடு மொழிபெயர்ப்பாளர் முழுமனதுடன் ஒத்துழைத்தால் மட்டுமே சாத்தியமாகும் என்பதற்கு இந்த வெளியீடுகள் நல்ல எடுத்துக்காட்டுகள்.

மொழிபெயர்ப்பாளருக்குத் தனியான உயர்ந்த அந்தஸ்து எதையும் கோராதவர் ஸ்ரீராம். கூட்டுமுயற்சியில் ஈடுபட்டிருக்கும் அனைவரும் இந்த உழைப்பின் மூலமாக மேம்படுவதை அவருடன் இணைந்து வேலைசெய்தபோதெல்லாம் நான் உணர்ந்திருக்கிறேன். இது ஒரு அற்புதமான, நம்மை உயர்த்தும் செயல்பாடு. மொழிபெயர்ப்பு முழுமையாக உருவாவது வியப்பை அளிக்கும் ஒரு அனுபவம். இதை ஸ்ரீராம் போன்று அயராமல் உழைப்பவர்கள்தான் எடுத்துக்காட்ட முடியும்.

ஸ்ரீராம் இப்போது செய்து முடித்திருப்பதைப்போலப் பல மடங்கு செய்திருக்க முடியும். அவர் செய்யவில்லை என்பதைவிட அவரைச் செய்ய நம் சமூக அமைப்பு இடம்தரவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம். இது ஏன் இப்படி என்று பார்க்கப் பல துறைகளின் கோணங்களிலிருந்தும் நாம் ஆராய வேண்டும். இதை யாராவது எப்போதாவது மேற்கொண்டால் நம் சமூகத்தில் திறமையானவர்கள் இன்னும் திறமையுடன் செயல்பட வழிவகைகள் தெரியவரலாம்.

# முன் ஏர்



**ஜி. குப்புசாமி – மொழிபெயர்ப்பாளர்**

*நவீன இலக்கிய அறிமுகமும் வாசிப்பும் ஒருவனுக்கு 16, 17வது வயதிலேயே ஏற்பட்டிருந்தால், அதுவும் அந்தக் காலகட்டம் பின்எழுபதுகளாக இருந்திருந்தால் அவனது தோரணை எப்படியெல்லாம் உருமாற்றம் கொண்டிருக்கும் என்று உங்களால் ஊகிக்க முடிகிறதா? இரண்டு காதுகளுக்கும் மேலே, மண்டையில் சின்னதாக இரண்டு எழும்பல்கள் தோன்றி வளர்ந்து கொண்டே போகும். தன்னைச் சுற்றி இருப்பவர்களெல்லோரும் வில்லிபுட்டர்கள் போல, தனது கணுக்கால் உயரத்தில்தான் இருப்பவர்கள் என்று தலை மேகத்துக்குள் செருகியிருக்கும். அப்போது நடந்துகொண்டிருந்த இலக்கிய கோஷ்டிப் பூசல்களில் பயன்படுத்தப்படுகிற வாக்கியங்கள் வீட்டு மனிதர்களிடமும், நண்பர்களிடமும் கூட பிரயோகிக்கப்படும். தன்னைத்தவிர எல்லோரும் அற்பர்கள். "எனக்கு செஸ்ஸில் ஸிசிலியன் டிஃபென்ஸ் தெரியும், நான் நீட்ஷே படிப்பவன். நீ? கிரிக்கெட்டும் சாண்டில்யனும் தான் உனக்குத் தெரியும்" என்கிற ரீதியில் அலட்டல்கள் அதிகமாகவே இருக்கும்.*

*இப்போது திரும்பிப்பார்க்கும்போது நான் அடித்த லூட்டிகளை நினைக்க சிரிப்பாகவே இருக்கிறது. அந்தத் திமிர் தமிழ் புத்தகங்கள் மீதுகூட இருந்திருக்கிறது. நாம் வாசிக்கும் ஆங்கில இலக்கியங்களுக்கு கிட்டத்தில்கூட தமிழில் வரமுடியாது என்று திடமாக நம்பியிருந்த சிறுபிள்ளைத்தனம், அந்த சிறுபிள்ளைத்தனத்தையே வயதுக்கு மீறிய முதிர்ச்சியாக நினைத்துக் கொண்டு எழுதிப்பார்த்த கவிதை, கதை யத்தனங்கள். வாழ்க்கை அனுபவம் எதுவுமில்லாமல் புத்தக வாசிப்பையே உலக ஞானமாக நினைத்து செருக்கோடு மற்றவர்களை அலட்சியமாகப் பார்த்து வந்த அந்த வயதுக்கான துடுக்குத்தனம்...*

*இவையெல்லாம் என்னிடமிருந்து எப்போது விலகின என்று யோசித்துப்பார்க்கையில் உடனடியாக ஞாபகத்துக்கு வருகிற பெயர் வெ. ஸ்ரீராம். 82 - 83ல்தான் 'அந்நியன்' வாசிக்க நேர்ந்தது. அந்த வயதில் என்னால் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு விதத்தில் அந்த நூலும் முக்கியமாக அந்த மொழிபெயர்ப்பின் தமிழ் நடையும் என் தலையில் ஓங்கி அடித்தன. அந்த மொழிபெயர்ப்பின் இறுதியான பிரதிக்காக அம் மொழிபெயர்ப்பாளர் எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய மெனக்கெடல் எனக்கு உறைத்த போது, அது என் பிரமைகளை சுருங்கவைத்தது. என் கால்கள் தரையில் பதியத் தொடங்கின. மேலும், இம்மாதிரியான விஷயங்களையெல்லாம் தர்க்கரீதியாக விளக்கிவிடத்தான் முடியுமா என்ன?*

*என் தனிப்பட்ட குணாம்சத்தில் ஸ்ரீராமும் அந்நியனும் ஏற்படுத்திய மாற்றத்தைக் குறிப்பிடாமல் அவரைப்பற்றிய கட்டுரையை என்னால் எழுத முடியவில்லை என்பதால்தான் மேற்கண்ட சுயபுராணம். என்னைப் பொறுத்தவரை அவர்தான் எனக்கு உதாரண மொழிபெயர்ப்பாளர். அவர் பெரும்பாலும் பிரெஞ்சிலிருந்தே மொழிபெயர்த்தாலும், அவரது மொழிபெயர்ப்பை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள எனக்கு பிரெஞ்சு தெரியாவிட்டாலும், நவீன மொழிபெயர்ப்பாளர்களில் அவரும் ஆர். சிவகுமாரும் தான்* most meticulous *என்று நம்புகிறேன். ஸ்ரீராமிடம் நான் ஆச்சரியத்தோடு கவனித்த, நானும் என்னால் முடிந்தவரை பின்பற்ற முயற்சிக்கிற அம்சம் மூல ஆசிரியனின் ஸ்டைலை - நடையை - தனது மொழிபெயர்ப்பில் கொண்டு வருகிற லாவகம். இது சாமான்யமான விஷயமல்ல. நேர்மையான மொழிபெயர்ப்பு என்று மூலநூலின் ஒரு வார்த்தையைக்கூட விடாமல் மொழிபெயர்ப்பில் கொண்டுவந்துவிட முடியும். ஆனால் ஒரு மிமிக்ரி ஆர்டிஸ்ட் போல படைப்பாளியின் குரலை, அதன் தொனியை, உட்பிரதியை* (sub text) *மொழிபெயர்ப்பில் கொண்டுவர வேண்டியதன் முக்கியத்துவத்தை அவரிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன். (அதில் எந்தளவுக்கு வெற்றி பெறுகிறேன் என்பது வேறு விஷயம்) அந்நியனில் பயன்படுத்தியிருந்த நடையை 'மீளமுடியுமா' வில் பார்க்க முடியாது. குட்டி இளவரசனின் குரல் முற்றிலும் வேறுவிதமானது.*

*காம்யுவும் சார்த்தரும் எக்சுபெரியும் அவர்களுடைய மொழியில் எந்த நடையில் எழுதியிருக்கக் கூடுமென்று ஸ்ரீராமின் மொழிபெயர்ப்பில் படிக்கும்போதே வாசகனால் சூட்சுமமாகப் புரிந்துகொள்ள முடிவதுதான் அவரது வெற்றி.*

*க.நா.சு.வின் மொழிபெயர்ப்புகளை வாசிக்கும்போது அது பேர் லாகர்க்விஸ்ட்டோ அல்லது ஸெல்மா லாகர்லாஃபோ ஒரே விதமான நடையில் இருப்பதைக் கவனிக்க முடியும். ஆனால் இதைவைத்து க.நா.சு.வை மதிப்பிடக்கூடாது என்பதையும் சொல்லவேண்டும். அவர் ஒரு பரிந்துரையாளர் மட்டுமே. உலக இலக்கிய வாசிப்பை வெள்ளமாகத் தமிழுக்குக் கொண்டு வருவதில்தான் க.நா.சு.வுக்கு ஆர்வம் இருந்ததேயொழிய அவரை ஒரு 'கறாரான' மொழிபெயர்ப்பாளராக வகைப்படுத்த முடியாது.*

*1989ம் வருடம் சென்னை திருவல்லிக்கேணியில் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற இலக்கிய வாசகர் சந்திப்பில் வெ.ஸ்ரீராம் கலந்து கொண்டார் (இருபத்தி இரண்டு வருடங்கள் கழித்து அவருக்கு இப்போதுதான் 'சிறப்பிதழ்' வருகிறது. தமிழ்ச்சூழலில் மொழிபெயர்ப்பாளர்களுக்குக் கிடைக்கிற அங்கீகாரம் 'சிலிர்க்க' வைக்கிறது!) மொழிபெயர்ப்பு, அதன் சிக்கல்கள் குறித்து அவர் பேசிய பேச்சு இன்றளவுக்கும் எனக்கு ஒரு கையேடாக இருந்து வருகிறது. சிலேடைகள்,* idioms, phrases *போன்றவற்றை மொழிபெயர்க்கும் போதும், படைப்பாளி குறிப்பிடுகிற, கோடிகாட்டுகிற, சொல்லாமல் சொல்கிற மெலிதான பூடகமான விஷயங்களை அதே தளத்தில் கொண்டுவருவதற்கு சரியான வார்த்தைகளை வாக்கிய அமைப்பைத்தேடி அலைச்சல் கொள்ளும்போதும் ஸ்ரீராமையும் சிவகுமாரையும் நினைத்துக் கொள்கிறேன். அவர்கள் என் இடத்தில் இருந்திருந்தால் எப்படி எழுதியிருக்கக்கூடுமென்று கற்பனை செய்துகொள்கிறேன். அது எனக்கு வெறும் சுவாரஸ்யமான விளையாட்டு அல்ல, மிகவும் தேவைப்படுவதாய் இருக்கிற ஒரு பயிற்சி. எனக்கு முன் ஏரும் இவர்கள்தான், முன்மாதிரியும் இவர்கள்தான்.*

**பியர் பூர்தியு (1930 - 2002)**

இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான சமூகவியல் சிந்தனையாளர்களில் ஒருவராகக் கருதப்படும் பியர் பூர்தியு, எமில் துர்கேம், மாக்ஸ் வெபெர் ஆகியோரின் வரிசையில் வைத்து மதிக்கப்படுகிறார். இவருடைய நூல்கள் உலகின் 22 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன என்பதைவிட, குறைந்த எண்ணிக்கை மக்கள் பேசும் காடலானிய, துருக்கிய, எஸ்தோனிய, நார்வீஜிய, ருமேனிய மொழிகள் போன்றவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பது இவருடைய சிந்தனையின் தாக்கத்தைக் காட்டும். சிந்தனையாளர்களின் பணி மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் இவர் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார்.




"வரலாறு கண்டிராத அளவிற்கு, பெருவாரியான மக்களை சென்றடையும் எல்லாச் சாதனைகளையும் பெற்றிருக்கும் கருவியான தொலைக்காட்சி, மக்களில் பெரும் பகுதியினரின் சிந்தனைகளை உருவாக்கும் ஏகபோக அதிகாரத்தைத் தானகவே அபகரித்துக் கொண்டுவிட்டது...

கற்றுக் கொடுத்தல் என்ற சொல்லை அதன் விரிவான பொருளில் பார்த்தோம் என்றால் தொலைக்காட்சியின் கற்றுக் கொடுக்கும் செயல் கல்வி கற்கும் வயதில் உள்ளவர்களை வலுவாகப் பாதிக்கிறது என்று சொல்லாம். தொலைக்காட்சி ஊடகத்தின் முக்கியமான இலக்காக இவர்கள் இருப்பதால், கல்வி நிறுவனங்களுக்கே உரித்தான கற்றுக் கொடுக்கும் செயல்பாட்டுக்குத் தொலைக்காட்சி போட்டியாகிவிடுகிறது..."

## “கண்டேன் ஸ்ரீராமை!”



ப. சேரலாதன் – ஜெர்மன்– தமிழ் மொழிபெயர்ப்பாளர்

“இரண்டும் இரண்டும் நாலு
நாலும் நாலும் எட்டு
எட்டும் எட்டும் பதினாறு ஆகும்...
சொல்லுங்கள், என்றார் ஆசிரியர்
இரண்டும் இரண்டும் நாலு
எட்டும் எட்டும் பதினாறு ஆகும்
ஆனால் அதோ ஒரு லயர் பறவை
பறக்கிறது ஆகாயத்தில்
குழந்தை அதைப் பார்க்கிறான்
குழந்தை அதைக் கேட்கிறான்
என்னைக் காப்பாற்று
என்னுடன் விளையாடு
பறவையே!”

(பிரெஞ்சில் ழாக் ப்ரெவெர், தமிழாக்கம்: வெ. ஸ்ரீராம்.)

*சென்னை அலியான்ஸ் ஃபிரான்சேஸியில் ஆறாண்டு காலம் நான் முறையாக பிரெஞ்சு மொழி கற்றேன். பிரெஞ்சு இலக்கணத்தை வகுப்பறையில் பயின்ற நான், பிரெஞ்சு இலக்கியம் குறித்தும், தத்துவம் குறித்தும் அதிகம் தெரிந்து கொண்டது ஸ்ரீராமுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பின் பயனாகத்தான்.*

*கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழுக்கு நல்ல மொழி பெயர்ப்புகளை வழங்கி வருபவர் ஸ்ரீராம். ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு படைப்புகளை கொண்டு செல்லும்போது அவ்விரு மொழிச் சமுதாயங்களின் எண்ண ஓட்டத்தில் ஒன்றிப்போய், இரு கலாச்சாரங்களிலும் கரைந்து, இருமொழி மரபுகளிலும் ஊறி, மனக்குதிரையில் ஒரு படைப்பு உருவான காலத்திற்கே சென்று உலவி வந்தாலொழிய நல்ல மொழிபெயர்ப்பு கிட்டாது.*


*மொழிபெயர்ப்பு என்பது பெயர்த்தெடுத்து நடுவதல்ல. ஓர் அந்நியச்சூழலில் ஒரு அந்நியப்படைப்பை மலரச் செய்வதாகும். பிரெஞ்சு மொழியில் தோன்றிய பல அரிய படைப்புகளை தமிழ் சமுதாயச்சூழலில் மலரச் செய்திருப்பவர் ஸ்ரீராம்.*

*அவருடைய அனைத்து மொழியாக்கங்களையும் பிரெஞ்சு மூலத்திலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் படித்த காரணத்தால் என்னால் இதனை அறுதியிட்டுக் கூற முடியும்.*

*ஸ்ரீராம் அவர்கள் வளரும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கி வருகிறார். அவருடைய பெருமுயற்சியால் வெளியான “கீழைநாட்டுக் கதைகள்” எனும் தொகுப்புநூல் இதற்கு சான்று பகர்வதாக அமைந்துள்ளது.*

*ஸ்ரீராமின் மொழி ஆற்றலையும், மொழி பெயர்ப்புத் திறனையும் தமிழ்ச்சமுதாயம் இன்னும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்பதுதான் என் போன்றோரின் ஏக்கம்.* ◐

# தரமான மொழிபெயர்ப்புகள்



**T.K. கோபாலன்** – பிரெஞ்சு – ஆங்கில மொழிபெயர்ப்பாளர்

ஆல்பெர் காம்யுவின் 'அந்நியன்' தமிழில் வந்திருக்கிறது என்று தெரிந்ததும் அதை ஆர்வத்துடன் வாங்கிப் படித்தேன். ஏற்கெனவே பிரெஞ்சு மூலத்தில் படித்து என்னைப் பாதித்திருந்த இந்தப் புத்தகம் நேரடியாகப் பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு வந்திருக்கிறதென்பது மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறைவையும் அளித்தது. இதன் பதிப்பாளர் 'க்ரியா' ராமகிருஷ்ணனுடன் தொடர்பு கொண்டு அவருக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்ததை அடுத்து வெ. ஸ்ரீராமையும் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இது போன்ற நேரடி மொழிபெயர்ப்பில் முன்னோடிகளின் உதவி எதுவுமின்றி மேற்கொண்ட இந்த மொழிபெயர்ப்பு துணிச்சலான, வெற்றிகரமான ஒரு செயல்பாடாக எனக்குத் தோன்றியது.

பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு, இதனுடைய மூன்றாம் பதிப்பு வெளிவருவதற்கு முன்பாக, மொழியைக் குறித்தும் மொழிபெயர்ப்பைக் குறித்தும் எங்கள் மூவருக்குமே கிடைத்திருந்த அனுபவத்தின் அடிப்படையில் நாங்கள் கலந்தாலோசனை செய்து 'அந்நியனின்' திருத்திய மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. வேற்று மொழி மூலத்திலிருந்து தாய்மொழிக்கு மொழியாக்கம் செய்யும்போது, மூலத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு தனக்கு வெளியிலிருந்து வரும் சிலருடைய கருத்துகளும், பரிந்துரைகளும் மொழிபெயர்ப்பாளருக்குத் தேவைப்படுகின்றன. இது மிக அவசியமும் கூட. மொழிபெயர்ப்பாளர் இதைத் திறந்த மனதுடன் அணுகினால்தான் முழுமையாகப் பயனடைய முடிகிறது. ஸ்ரீராமிடம் சிறந்து காணப்பட்ட இந்த அம்சம் எங்களுடைய விவாதங்களுக்கு அதிகத் தெளிவையும் ஆழத்தையும் அளித்தது.

2004-இல் பூர்தியுவின் "தொலைக்காட்சி: ஒரு கண்ணோட்டம்" புத்தகத்தை வெ.ஸ்ரீராம் மொழிபெயர்க்கப் போவதாக என்னிடம் சொன்னார். இது கருத்தாக்கத்திலும் மொழிநடையிலும் மிகவும் சிக்கலான பிரச்சினைகளை அளிக்கக்கூடிய புத்தகம். ஸ்ரீராம் ஏற்றுக்கொண்டிருந்த சவாலை ரசித்தேன். குறிப்பாகச் சில வாக்கியங்களைப் பொருத்தவரை பிரெஞ்சிலிருந்து சற்றும் விலகாமலும் தமிழில் வாசகத்தன்மை கெடாமலும் இருக்க ஸ்ரீராம், ராமகிருஷ்ணன், நான் மூவருமாகப் பல மணி நேரம் போராடி திருத்தங்களைச் செய்திருக்கிறோம். இது போன்ற அமர்வுகளில் பெறப்படும் மொழிகுறித்த பிரக்ஞை எந்த அளவுக்கு மொழிபெயர்ப்பை வலுப்படுத்துகிறதென்பதைப் பார்க்க முடிந்தது. சமூகவியல் கட்டுரையின் உரைநடைக்கு இந்த மொழிபெயர்ப்பு ஒரு நல்ல உதாரணம்.

குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு விஷயம்: பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்புகள் எல்லாமே முற்றிலும் நம்பத்தகுந்தவையாக இருப்பதில்லை. மொழிபெயர்ப்பாளர் எந்த அளவுக்கு சுதந்திரம் எடுத்துக் கொள்ளலாம் என்பது விவாதத்துக்குரியது. மேலும், பிரெஞ்சு போன்ற ஐரோப்பிய மொழிகளிலிருந்து தமிழுக்கு ஒரு படைப்பைக் கொண்டு வருவதில் வேறு ஒரு பிரச்சினையும் உள்ளது; இதற்கு மொழிபெயர்ப்பாளர்கள் தாங்களாகவே தீர்வுகாண வேண்டியுள்ளது. அதாவது அந்நியப் பண்பாட்டுக்கே உரித்தான - அதனுடைய தனித்தன்மையை உள்ளடக்கிய கருத்தாக்கம், நிகழ்வு அல்லது சூழலை எப்படித் தமிழில் கொண்டுவருவது என்பதே அந்தப் பிரச்சினை, அதுவும் அதற்கான சொற்கள் இல்லாத நிலையில் இந்தக் கருத்துகளையும் சூழலையும் சிதைக்காமல், அவற்றின் தன்மை கெடாமல், அபத்தமாக மாற்றிவிடாமல் எப்படியாவது தமிழில் கொண்டுவருவது ஒரு சவால்.

நல்ல, பயனுள்ள பிரெஞ்சு - தமிழ் அகராதி ஒன்று இல்லாதது மற்றொரு குறைபாடு. உதாரணமாக, பிரெஞ்சிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பதற்கு அகராதிகள், சொற்களஞ்சியங்கள் என பல சாதனங்கள் இருக்கின்றன. இவை போன்ற சாதனங்கள் சரியான சொல்லையோ, சொற்றொடரையோ தேர்வு செய்வதற்கு மொழிபெயர்ப்பாளருக்குப் பெரும் உதவியாக இருக்கும். இந்த இடர்பாடு களையெல்லாம் மீறி வெ.ஸ்ரீராமின் மொழிபெயர்ப்புகள் பிரெஞ்சு மூலத்திற்கு உண்மையாக அதிலிருந்து விலகாமலும், எளிய, தெளிவான அன்றாட தமிழ் நடையிலும் இருப்பது பாராட்டத்தக்கது.

## ஃப்ரான்ஸ்வா குரோ (FRANCOIS GROS)

**பிரெஞ்சு அறிஞர் மற்றும் தமிழறிஞர்**

*அன்புள்ள ஸ்ரீராம்,*

*உங்களுடைய கடிதம் என்னை முப்பது ஆண்டுகள் பின்னோக்கிச் செல்லத் தூண்டுகிறது! நீங்களும் அதை நினைத்துப் பார்க்கிறீர்கள் அல்லவா? ஆம், 1981-ல் "குட்டி இளவரசன்" மொழிபெயர்ப்பு வெளிவந்தபோதுதான் நம் இருவரின் பெயர்களும் இணைந்து காணப்பட்டன. பிரெஞ்சு தமிழ் மொழிபெயர்ப்பு வரலாற்றில் திட்டவட்டமான ஒரு திருப்புமுனை என்று நாங்கள் எல்லோரும் எண்ணிய வளமான காலகட்டம் அது. அதற்கு ஒரு வருடம் முன்பாக ஆல்பெர் காம்யுவின் "அந்நியன்" புத்தகத்தை பிரெஞ்சிலிருந்து நேரடியாகத் தமிழில் மொழிபெயர்த்து புதிய பாதை ஒன்றைத் திறந்து விட்டிருந்தீர்கள். பல பதிப்புகளைக் கண்ட, நியாயமான வெற்றி. அலியான்ஸ் பிரான்சேஸ் நிறுவனத்தில் உங்களுடைய ஆக்கபூர்வமான செயல்பாடுகள் பற்றியும், பிரான்ஸுடன் நேரடியாக, குறிப்பாக சமகாலத்திய பண்பாட்டுப் பரிமாற்றத் துறையில் தொடர்புகொள்ள விழைந்த சென்னையின் தமிழ் அறிவு ஜீவிகளை எனக்கு அறிமுகப்படுத்திய இந்த நிறுவனத்தின் துடிப்பான இயக்குநர் ரோலான் தோமாவைப் பற்றியும் நான் தெரிந்துகொண்டது அப்பொழுது நிகழ்ந்தவையே. சென்னையில் 'க்ரியா' வைச் சுற்றி நான் சந்திக்க முடிந்த சூழலின் தரம் பாண்டிச்சேரியில் இருக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. ஆகவே, குட்டி இளவரசன்' மொழிபெயர்ப்பின் கூட்டு முயற்சி இவை அனைத்தையும் உறுதிப்படுத்துவதாக அமைந்ததில் வியப்பில்லை.*

*ஆனாலும், பிரெஞ்சிலிருந்து ஆங்கிலம் வழியாகத்தான் தமிழ் மொழிபெயர்ப்புகள் என்ற பாரம்பரியத்துக்கு மாறாக, நேரடியாகப் பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு வந்த 'அந்நியனுக்காக' நீங்கள் மேற்கொண்ட முயற்சிதான் மறுக்க முடியாத திருப்புமுனை, முக்கியமான முதல் அடிச்சுவடு. காம்யுவின் எழுத்தை மூலத்துக்கு உண்மையாக, மிகச் சிறந்த முறையில் மொழிபெயர்த்து நீங்கள் அளித்த அந்தப் பின்னணியில் அதற்கடுத்த வருடம் வெளிவந்த சுந்தர ராமசாமியின் "ஜே.ஜே. சில குறிப்புகள்" படைப்பும் தமிழ் வாசகர்களின் பார்வையை காம்யுவின் பக்கம் திருப்ப உதவியது. உண்மையிலேயே எல்லாவித நம்பிக்கைகளுக்கும் இடமளித்த வருடம் அது. என்னைப் பொருத்தவரை, தொடர்ந்து காம்யுவை நீங்கள் மொழிபெயர்க்கவில்லையென்ற வருத்தம் எனக்குக் கொஞ்சமுண்டு.*

*இருந்தாலும் அதற்குப் பிறகு, நீங்கள் முன்னோடியாக இருந்து வகுத்த பிரெஞ்சு - தமிழ் நேரடி மொழிபெயர்ப்பு என்ற பாதையில் விடாமல் தொடர்ந்து உழைத்திருக்கிறீர்கள். இதே பாதையில் நல்ல சீடர்கள் பரம்பரை ஒன்றை உருவாக்க முடியவில்லை என்று நீங்கள் வருத்தப்படலாம். அது முற்றிலும் உண்மையல்ல என்று நான் நினைக்கிறேன். இயனெஸ்கோவின் "காண்டாமிருகம்" நாடகத்தின் மொழிபெயர்ப்பாளர் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார். உங்களுடைய சீடர்கள் சிலர் உங்களுடன் சேர்ந்து மார்கெரித் யூர்ஸ்னாரின் சிறுகதைகளை ("கீழை நாட்டுக் கதைகள்") மொழிபெயர்த்துள்ளார்கள். தவிர, இன்றும் அடக்கமாக, ஆரவாரமின்றி என்ன செயல்பாடுகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும்... எப்படியிருந்தாலும் பெரிதும் வெற்றிகண்டுள்ள உங்களுடைய முயற்சி நல்ல ஒரு உதாரணமாக நிலைத்திருக்கும்... பாரிஸில்* INALCO *நிறுவனத்தில் தமிழ்த்துறையில் பணிபுரியும் எலிசபெத் சேதுபதியும் உங்கள் செயல்பாட்டுக்கு உதவி ஊக்கமளிக்கிறார் என்பது இன்று எனக்கு மனநிறைவை அளிக்கிறது.*

அதேபோலவே தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு மொழிபெயர்க்கும் அவருடைய முயற்சிகளுக்கு என்னைப் போலவே நீங்களும் ஊக்கமளிக்க வேண்டும் என்பது என் ஆசை.

ஏனென்றால், இந்திய மொழிகளிலிருந்து பிரெஞ்சுக்கு மொழிபெயர்க்கப்படும் எழுத்துகளை, அவை ஏற்கெனவே ஆங்கிலத்தில் வந்துள்ளன என்ற சான்றிதழ் இல்லாமல், ஏற்றுக் கொள்ளும்படி பிரெஞ்சுப் பதிப்பாளர்களை இணங்க வைப்பது கடினமாகவே இருக்கிறது. அவர்களுடைய பதிப்புக்கு இன்றியமையாத முதல் கட்டமாக இன்னமும் ஆங்கில மொழிபெயர்ப்பே தேவைப்படுகிறது! பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு நீங்கள் செய்திருக்கும் நேரடி மொழிபெயர்ப்புப் பணியைப் போலத் தமிழிலிருந்து பிரெஞ்சுக்குச் செய்ய வேண்டியது இன்றும் நிறையவே இருக்கிறது. 2002 - ல் பிரான்ஸில் இந்திய ஆண்டு கொண்டாடப்பட்ட சமயம் தமிழிலிருந்து பிரெஞ்சுக்கு வந்திருக்கும் நூல்களின் பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு எனக்களிக்கப்பட்டது. இது 2005 - ல் பாரிசின் ஆசியாதெக் (ASIATHEQUE) என்ற பதிப்பகத்தால் 'ராக்மாலா' (RAGMALA) என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இந்தப் பட்டியலும் நாம் விழையும் அளவுக்கு செழிப்பாக இருக்கவில்லை. போதாக்குறைக்கு, இது மறுபரிசீலனை செய்யப்பட்டு இதன் மறுபதிப்பு வெளிவரவிருக்கிறது... ஆங்கிலத்தில்! இவற்றையெல்லாம் இங்கே சொல்வதின் அவசியம் இந்த மொழிபெயர்ப்பு நீரோட்டம் இரண்டு திசைகளிலிருந்தும் ஓடிக்கொண்டிருக்க வேண்டும் என்பதும் அதைச் செய்ய நம்மில் நிறையப் பேர் இல்லையென்பதும், மேலும் அது ஒரு நீண்ட காலத் திட்டம் என்பதுவுமே.

துரதிருஷ்ட வசமாக உங்களுடைய மொழிபெயர்ப்புகள் அனைத்தையும் மிகவும் அருகிலிருந்தபடி நான் கவனித்திருக்கவில்லை. ஆனால் கடினமான முயற்சியான சார்த்ரின் "மீள முடியுமா?" மொழிபெயர்ப்பை அந்த நாட்களிலேயே நான் பாராட்டி விரும்பியிருக்கிறேன்; ப்ரெவெரின் "சொற்களில்" நீங்கள் தேர்வு செய்திருந்த கவிதைகள் எனக்குப் பிடித்திருந்தன. ஆனால் இவற்றைத் தவிர இன்னும் எவ்வளவு செய்திருக்கிறீர்கள்? பிரெஞ்சு நாளிதழ் மாந்திலிருந்து (LE MONDE) 'ஹிந்து' நாளிதழுக்குக் கட்டுரைகள் மொழிபெயர்ப்பதில் (12 ஆண்டுகள்) எவ்வளவு மணி நேரம் கழித்திருப்பீர்கள்? இது வெறுமே ஆங்கிலத்துடன் செய்துகொள்ளப்பட்ட சமரசம் அல்ல, இந்திய வாசகர்களுக்கு பிரான்ஸுடன் இன்னும் நெருங்கிய பரிச்சயத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமும் இருந்தது. இவற்றுக்கும் அப்பால் தமிழ் இலக்கிய ஏடுகளிலும், சிறு பத்திரிகைகளிலும் எவ்வளவு பிரெஞ்சுக் கவிதைகளையும், மேற்கோள்களையும் அள்ளித் தெளித்திருக்கிறீர்கள்? மேலும், முழுமையாக மொழிபெயர்ப்பு என்று சொல்லப்பட முடியாத எத்தனை சிறு புத்தகங்கள் மூலமாக, ஆங்கிலம் வழியாக வடிகட்டப்படுவதைத் தவிர்த்து, நேரடியாக சில பிரெஞ்சு திரைப்பட இயக்குநர்களை தமிழுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்? உங்களுடைய தேர்வுகளின் பன்முகத் தன்மைதான் பெரும் வியப்பை அளிக்கிறது. உதாரணமாக என் நினைவுக்கு வருவது பியர் பூர்த்தியுவின் தொலைக்காட்சி: ஒரு கண்ணோட்டம் மொழிபெயர்ப்பும், அதற்கு அருகிலேயே விளம்பரம் எதுவுமின்றி வெளியாகி இருக்கும் ழூல் ரோமெனின் "க்னோக்" நாடகத்தின் தமிழாக்கமும். மேலும் பின்னதில் நாடகத்திற்கென்று பிரத்தியேகமாக, அசலாகத் தற்காலத் தமிழில் நாடகத் தமிழ் என்று ஒரு வழக்கு உருவாக வேண்டிய, தீர்க்கப்படாத பிரச்சினையும், மற்ற மொழிபெயர்ப்பு நாடகங்களைப் போலவே, முன்வைக்கப்படுகிறது.

ஆகவே நேர்காணல் பத்திரிகையின் ஆசிரியர் உங்களுக்காக ஒரு இதழைக் கொண்டு வரும் முயற்சி, உங்களுடைய செயல்பாடுகளை முறையாகப் பட்டியலிடுவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பமாக இருக்க வேண்டும் என்று நான் மனதார விரும்புகிறேன். இதற்காக அவர் சேகரிக்கும் கட்டுரைகளும் மதிப்பீடுகளும் பரவலான தமிழ் வாசக சமூகத்தினிடையே உங்களுடைய மொழிபெயர்ப்புகள் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைச் சரியான வகையில் பதிவு செய்ய வேண்டுமென்பதும், இந்த சமூகம் இன்னும் விரிவடைய வேண்டுமென்பதும் என் விருப்பம்.

# வெ. ஸ்ரீராம் மொழிபெயர்ப்பின் தனித்துவம்



**ந. முருகேசபாண்டியன்** – விமர்சகர்

தமிழைப் பொறுத்தவரையில் மொழிபெயர்ப்பு என்ற கருத்தானது மிகவும் பழமையானது. பிற மொழியிலுள்ள நூலினை வாசித்துவிட்டு, அதை அப்படியே தழுவியெழுதுதல், பண்டைக் காலத்திலே வழக்கிலிருந்தது. மூலமொழிக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் மொழிபெயர்ப்பு நூலுக்கும் தரப்பட்டதற்கு அடையாளம் சீவக சிந்தாமணியும் கம்பராமாயணமும். கி.பி. 17 - ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றி ஆட்சி செய்ய முயன்றபோது மொழிபெயர்ப்பின் சொல்திசை புதிய வடிவமெடுத்தது. செய்யுளிலிருந்து மாறி உரைநடை வடிவம் ஆதிக்கம் பெற்ற நிலையில் மொழிபெயர்ப்புகள் தழுவல்களாகவே இருந்தன. இது கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த நாவலாசிரியர்கள் வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜே.கே. ரெங்கராஜு போன்றோரின் நாவல்கள், மூல ஆசிரியர்களைக் குறிப்பிடாமல் வெளியான தழுவல்களே. 1940 களில் ஜோதி நிலையம் பிரசுரித்த நூல்கள்தான் மூலப்படைப்புகளுக்கு விசுவாசமாக இருந்தன. எனினும் க.நா.சு. மொழிபெயர்த்த நாவல்கள், மூலப்படைப்புகளின் கருத்தினை உள்வாங்கிக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்டவை என்ற குற்றச்சாட்டு இப்பொழுதும் உண்டு. பொதுவாக மொழிபெயர்க்கப்பட்ட நூலை வாசிக்கும்போது, நடை நிரடவில்லை, சரளமான மொழிபெயர்ப்பு எனச் சிலாகிப்பது வழக்கினில் உள்ளது. மூலப் புத்தகத்தில் இடம்பெற்ற கதை மாந்தர்களின் பெயர்கள், ஊர்ப் பெயர்கள் போன்றவை, இஷ்டத்துக்குத் தமிழாக்கிவிட்டு மொழிபெயர்க்கும் விநோதமும் தமிழில் நடந்தேறியுள்ளது.

மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூலநூல் பற்றிய முழுமையான தகவல்கள், பதிப்பகத்தாரின் அனுமதி இல்லாமல் 90% நூல்கள் தமிழ் மொழிபெயர்ப்பில் வெளியாகியுள்ளன. ஏறக்குறைய எல்லா மொழிபெயர்ப்பு நூல்களும் ஆங்கில நூல்களின் வழியாகத் தமிழாக்கப்படுகின்றன. ஆனால் இதுபோன்ற தகவல்களைத் தமிழ் மொழிபெயர்ப்புகளில் காண்பது அரிது. இத்தகைய பின்புலத்தில் அவதானிக்கும்போதுதான் 1979 - இல் மொழிபெயர்ப்புத் துறைக்கு அறிமுகமான வெ. ஸ்ரீராமின் அருமை புலப்படும். பிரெஞ்சிலிருந்து நேரடியாகத் தமிழாக்கப்பட்ட நூல் என்ற குறிப்புடன் 1980 - இல் வெளியான ‘அந்நியன்’ நாவல், தமிழ்ப் புனைகதைப் போக்கில் சலனத்தை ஏற்படுத்தியது. பிரெஞ்சு - ஆங்கிலம் - தமிழ் என்ற வழிமுறையில் தமிழாக்கப்படும்போது, மூல மொழியின் அழகும் செறிவும் காணாமல் போய்விட வாய்ப்புண்டு. ஸ்ரீராமின் நேர் மொழிபெயர்ப்பு ஆழமான விஷயத்தைச் செறிவூட்டப்பட்ட மொழியில் அறிமுகப்படுத்த விழைந்தது தமிழுக்குக் கிடைத்த பேறு என்று சொல்வதில் தவறில்லை.

இதுவரை ஸ்ரீராம் மொழிபெயர்த்துள்ள நூல்களின் பட்டியலை வாசித்துப் பார்த்தால் புலப்படும் அவருடைய ஆளுமை. கையில் கிடைத்த அல்லது யாராவது சிபாரிசு செய்த ஏதோ ஒரு கட்டுரை, சிறுகதை, நாவலை மொழிபெயர்த்து விட்டுச் கிளர்ந்து போகும் சிறுபத்திரிகைச் சூழலில், ஸ்ரீராமின்

நோக்கம் வலுவானது. எதை மொழிபெயர்ப்பது? எந்த வகையான அணுகுமுறையை மொழிபெயர்ப்பில் கையாளுவது? என்ற துல்லியமான புரிதல்கள் ஸ்ரீராமிற்கு உண்டு. ஏதோ ஒன்றை மொழிபெயர்த்து விட்டு, அதன்மூலம் தமிழ்ச் சூழலில் என்ன விளைவுகள் என்ற புரிதல் எதுவுமின்றிச் செயல்படும் மொழிபெயர்ப்பாளர்களிடையே ஸ்ரீராமின் நகர்த்தும் முயற்சிகள் எப்பொழுதும் எனது கவனத்தை இழுத்தவை.

ஸ்ரீராமின் மொழிபெயர்ப்பில் வெளியான குட்டி இளவரசன், அந்நியன் ஆகிய இரு புனைகதைகளுக்கு எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைப் போக்கில் அழுத்தமான பாதிப்புகளை ஏற்படுத்தின. 'காம்யு' என்ற பெயர் மீது இளைஞர்களுக்கு ஏற்பட்ட ஈர்ப்பினுக்கு அடிப்படைக் காரணம் ஸ்ரீராம்தான். ஆங்கிலத்தில் வெளியான 'Outsider' வாசிப்பில் தந்த அனுபவத்தை விட 'அந்நியன்' தந்த பாதிப்புகள் ஏராளம்.

2000 - இல் வெளியான ழாக் பிரெவெர் கவிதைகள் ஸ்ரீராமின் கைவண்ணத்தில் கவித்துவத்துடன் ஒளிர்வது தற்செயலானது அல்ல. பியர் பூர்தியுவின் 'தொலைக்காட்சி ஒரு கண்ணோட்டம்' நூலில் ஸ்ரீராமின் உரைநடை குறிப்பிடத்தக்கது. தொலைக்காட்சி ஊடகம் பற்றிய பூர்தியுவின் கருத்தியலை வெளிப்படுத்தும் வகையில் ஸ்ரீராம் கையாண்டுள்ள சொற்கள் உயிரோட்டமானவை. பல மொழிபெயர்ப்பாளர்கள் உரைநடை நூல்களை வெறுமனே சொற்களால் நிரப்பி வறட்டுத்தனமாக்கி, வாசிப்பதற்கு ஆர்வமில்லாமல் செய்து விடுவது வழக்கமாக உள்ளது. 'யுனெஸ்கோ கூரியர்' இதழில் வெளியான மொழிபெயர்ப்புகள் பல வாசிப்பதற்கு அலுப்புத் தருபவை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். மொழிபெயர்ப்பு என்றாலே தூய தமிழில் புதிய சொற்களை உருவாக்குதல், சொல்லுக்கு நிகரான சொல் என்று ஏதாவது சம்ஸ்கிருதச் சொல்லைத் தந்து பூசி மெழுகுதல் (எ.கா: சஞ்சலம், உத்வேகம், பூரண ஒழுங்கு) போன்றவற்றை ஓர் இடத்தில் கூட ஸ்ரீராமின் மொழிபெயர்ப்பில் காண இயலாது. மேலும் மாறிவரும் தமிழ்ச் சொற்களஞ்சியத்தில், புதிய சொற்களை வழக்கினுக்கு ஏற்றவகையில் பயன்படுத்துவதும், வழக்கிழந்த சொற்களைக் கைவிடுவதும் ஸ்ரீராமின் தமிழாக்கத்தில் கடந்த முப்பதாண்டுகள் இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு வீட்டின் மேல் கூரையை முழுக்கப் பிரித்து எறிந்துவிட்டு, வேறு வகையான மூலப்பொருளினால் புதிய மேல் கூரையை அமைக்கும் மொழிபெயர்ப்பினில் தனித்த முத்திரையுடன் செயற்படுகின்ற சிலரில் ஸ்ரீராமின் இடம் தனித்துவமானது.

மூலமொழியான பிரெஞ்சு, பெறு மொழியான தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம் நிகழ்தலை இயந்திரமயமானதாகக் கருதாமல், தமிழ்ச் சமூகத்துக்கு ஆற்றும் முக்கியமான பணி என்று தொடர்ந்து காத்திரமாகச் செயற்படும் ஸ்ரீராம் போல பலர் இன்றைய உடனடித்தேவை அவர் மொழிபெயர்ப்பில் பணி மூலம் முன்னிறுத்தியவை, தனித்து அடையாளத்துடன் விளங்குகின்றன. எழுபதுகளின் இறுதியில் ஸ்ரீராம் மொழிபெயர்ப்பு மூலம் ஏற்படுத்திய பிரமிப்பு, இன்றுவரை என்னை விட்டு நீங்கவில்லை. ஸ்ரீராமின் மொழிபெயர்த்த நூல்கள், மொழிபெயர்ப்புத் திறன் குறித்த பேச்சுகளையும் மறுபேச்சுகளையும் உருவாக்க வேண்டியது அவசியம். அப்பொழுது தான் நவீனத் தமிழ் மொழிபெயர்ப்பின் பிரச்சினைகளையும், அடுத்த கட்ட வளர்ச்சியையும் அவதானிக்க நம்மால் இயலும்.

◐

# காலத்தின் மொழித் தச்சன்

**அஜயன்பாலா** – மொழிபெயர்ப்பாளர், திரைப்படக்கலைஞர்.



ஸ்ரீ ராமை ஒரு நாள் சாலிக்கிராமத்தில் பார்த்தேன். காலை நேரம். வாக்கிங் போய்க்கொண்டிருந்தார். சட்டென உள்ளுக்குள் ஒரு அதிர்வு. அவசரமாக அவருக்குப் பதட்டத்துடன் முகமன் செய்தேன். அவருக்கு என்னைத் தெரிந்திருக்குமோ தெரியாது. முழுமையான அறிமுகம் இல்லை. அவரது முகம் உதிர்த்த புன்னகையில் ஆச்சர்யம் யோசனை எதுவும் இல்லை. என்னடா இத்தனை காலையில் மெனக்கெட்டு நமக்கு ஒருத்தன் சலாம் போடுகிறானே யார்? அவன் என்ன செய்கிறான்... துளி விசாரணை... ம்ஹூம்... வெறுமனே கடந்து கொண்டிருந்தார். நானாக இருந்தால் ம்ம... இப்ப என்ன செய்யறீங்க... எனத் தெரிந்தால் போல எதையாவது கேட்டு என் ஒளிவட்டத்தின் ஆரத்தைக் கணகெடுத்து விட்டிருப்பேன். ஆனால் அவரோ எனக்கு முதுகு காண்பித்தபடி தொலையில் அமைதியாக சென்று கொண்டிருந்தார். ஒருவேளை என்னை அவருக்குத் தெரிந்தும் தெரியாதவர் போல... பேசுவதால் எந்தப் பலனும் இல்லாதவராக யோசித்து கடந்து போயிருக்கலாம்.

உண்மைதான். அவரதுப் படைப்புகளை போல முழுவதும் அகவயமாக எந்தக் கோரிக்கையும் இல்லாமல் எழுதுவதோடு தம் பணி தீர்ந்தவராக ஸ்ரீராம் பொதுவெளியில் சூழலில் இருந்து வருகிறார். அன்று காலை உடனே வந்து முகநூலில் ஒரு நிலைசெய்தியை போட்டேன். சிலர் விருப்பமிட்டிருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் நான் எதைப் போட்டாலும் விருப்பக்குறியை தட்டுபவர்கள். அதற்கு என்மீதான அன்பும் அக்கறையும் காரணம். ஒருத்தர் அவர் இனிஷியல் பிசிதானே ஏன் இப்படித் தவறாகப் போட்டிருக்கிறீர்கள்? என ஆலோசனை சொன்னார். அப்பாடா வெ. ஸ்ரீராமை இன்னமும் பலர் தெரியாமல் இருக்கிறார்கள். அந்த மட்டுக்கு உலகம் நிதானமாகத்தான் சுற்றுகிறது என்று மனம் ஆசுவாசப்பட்டது. ஆனாலும் மனம் அத்தோடு நிலைகொள்ளாமல் சற்று நேரம் அவரைக்குறித்து ஆழமாக யோசிக்க வைத்தது.

ஸ்ரீராமின் படைப்புகள் மொழிபெயர்ப்புகள்தான் என்றாலும் அந்த மொழிபெயர்ப்புகள் சமூகத்தில் எந்தத் தளத்தில் வேலை செய்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத்தகுந்தது. அதன் முக்கியத்துவம் எத்தகையது என்பதை அறிய இலக்கியவாதியை விட மொழியியல் அக்கறையுள்ள மாணவனாக இருந்து பார்க்கும்போது அந்தப் படைப்புகளின் கனபரிமாணத்தை ஓரளவு புரிந்துகொள்ள முடியும்.

சமூகத்தின் சிந்தனா ஓட்டத்தை அதன் பிரக்ஞையை தீர்மானிக்கும் சக்தியாகக் கருதப்படும் எழுத்து மற்றும் காட்சி ஊடகம் சார்ந்த நபர்களின் ஆதார சக்தியாக விளங்குவது அம்மொழியின் இலக்கியவாதிகளும் அவர்களது படைப்புகளுமே. உள்முகமாக இயங்கும் தீவிரமான சில புத்திளைஞனின் தேடல் அதன் மூலமாக வெளிப்படும் கவிதையின் ஒரு வரி அல்லது கதையினூடாக அவன் முன் வைக்கும் புதிய பார்வை பரவலான ஊடகப்பிரதிநிதிகளும் இலக்கிய வாசிப்பாளர்களாலும் தூண்டப்பட்டு சமூகத்தின் சிந்தனா ஓட்டமாக ஊடகங்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. அப்படியாக சமூகத்தினது காலத்தின் சக்கரங்களாகச் சுழலும் ஊடகங்களின் முன்னகர்வுக்கு சமூகத்தின் அதிகம் அறியப்படாத ஒரு நவீன எழுத்துக்காரனின் படைப்புலகம் எரிசக்தியாக இருந்து இயக்கிவருகிறது. இப்படியான நவீன எழுத்துக்காரர்கள் அனேகருக்கு அறியாதவர்கள். பெரும்பாலும் இளைஞர்கள். பெரும் வேட்கையுடனும் கனவுகளுடனும் அலைந்து திரிபவர்கள். இவர்கள் புழங்கும் வெளியில் மூத்தபடைப்பாளிகளும்

அதிகம். ஆனால் அவர்கள் காலத்தால் இறுகிப்போனவர்கள். அவர்களது படைப்புகள் பெரும்பாலும் சூழலின் பிரதிபலிப்பாக இல்லாமல் அறிவின் பிரதிமைகளாக மட்டுமே வெளிப்படுகின்றன.

இச்சூழலில் இத்தகைய நவீன எழுத்துக்காரர்களின் கவிஞர்களின் வாசிப்புலகிற்குப் பெரும் தீனியாக இருப்பது கவிதைகளைக் கடந்து மொழிபெயர்ப்பு நூல்கள்தாம். சிறந்த மொழிபெயர்ப்புகள் காலத்தால் பழையதன்மையை ஒரு போதும் அடைவதில்லை. இத்தகைய மொழிபெயர்ப்புகள் அடங்கிய காகிதங்களை வெறும் கழுதையைப் போல செரிமானித்துக்கொள்ளும் இளைஞன் தனது படைப்புகளில் அரசியலை அணுகுகிறான். வழக்கமான வார்த்தைகளை மாற்றிப் போட்டு வாசிப்பனுபவத்தில் புதுமையைப் பாய்ச்சுகிறான். அந்தப் புதுமை ஊடகக்காரனுக்கு கைமாற்று செய்யப்பட அதன்மூலம் அறிவின் மின்சாரம் பாய்ச்சப்பெறும் ஊடகக்காரன் பெருவாரியான வாசகர்களை நோக்கி தன் அலுவலகத்தில் புதிய பார்வைகளையும் வார்த்தைகளையும் எடுத்துசென்றுச் சுவையான செய்திகளினூடே அவற்றை இடம் கொண்ட இடத்தில் சேர்த்துக்கொள்கிறான். சதா காலத்தில் புதுமையை எதிர்நோக்கும் சமூகம் கழுதையாக அதனை மென்று புதியவாசனையைச் செரிமானித்து இன்னுமொரு புதிய காலத்துக்குத் தன்னை தயார்படுத்துகிறது.

இந்த சுழல் சக்கரத்தில் முதல் பணியாளனாக செயல்படும் மொழிபெயர்ப்பாளன் பெரிய வெகுமதிகளை அடையாளங்களைப் பெறுவதில்லை. ஆனாலும் அவனது பங்கு மகத்தானது. அப்படிப்பட்ட மகத்தான பங்களிப்பை செய்த முதன்மையானவர் வெ. ஸ்ரீராம்.

அவரை எந்தக் கூட்டத்திலும் பிரசங்கிக்கக் கேட்டதில்லை. எப்போதாவது அலையன்ஸ் பிரான்சே நடத்தும் பிரெஞ்சு திரைப்பட காட்சிகள் அல்லது நாடகம் மற்றும் இலக்கியக் கூட்டங்களில் அறிமுகமாக சில எளிய உரைகளைக் கேட்டதோடு சரி. சம்பளத்துக்கு உண்மையாக இருக்கும் ஒரு வாத்தியாரின்... கல்லூரிப் பேராசிரியரின் தன்மை அதில் வெளிப்படும். சற்று கூன் விழுந்த தோற்றம், மெதுவான குரல், பெண்மை கலந்த சுபாவம் எனப் பலவிதங்களில் எழுத்தாளர் சுஜாதாவை நினைவுபடுத்தும் ஸ்ரீராம், எப்போதும் சட்டையை இன் பண்ணி இறுக்கமான பெல்ட்டையும் அணிந்திருப்பார். அவர் அணிந்திருக்கும் பெரும்பாலான சட்டைகள் கோடுபோட்டவை. கோடு போட்ட சட்டைகள் அணிபவர்கள் பெரும்பாலும் அறத்தின் பிரதிநிதிகளாகவும் கட்டம் போட்ட சட்டை அணிபவர்கள் எதிர் கலாச்சாரம் அல்லது புதுமை விரும்பிகளாக இருப்பதாகவும் நானாக ஒரு ஆய்வு செய்து கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். எனது ஆய்வின்படி ஸ்ரீராம் ஒரு அறம் சார்ந்த பண்பினர். தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத் தவிர வேறெதையும் செய்யத் துணியாதவர். அவரது மொழிபெயர்ப்பு நூல்கள்கூட ஏதோ ப்ராஜக்ட் வொர்க்தானோ என எண்ணுமளவிற்கு மதிப்பீட்டை உருவாக்குபவர். ஆனாலும் அவரது நூல்களைக் கடந்து வரும் ஒருவன் அந்த நூல்களின் தனிச்சிறப்புக்கும் வெற்றிக்கும் அவரது இந்தப் பொறுப்புணர்ச்சியும் உழைப்பும் செயல் மீதான அளவற்ற காதலும்தான் காரணம் என்பதை உணராமல் இருக்க முடியாது.

ஆல்பர்ட் காம்யூவின் ‘அந்நியன்’தான் அவர் மொழிபெயர்ப்பில் வெளியான முதல் நூல். 1980ல் வெளியான இந்நூலை நான் பதினான்கு வருடங்களுக்குபிறகு 1994ல்தான் படிக்க நேர்ந்தது. அக்காலத்தில்தான் என் தலைக்குமேல் சூரியன் வெளிச்சமிடத் துவங்கினான்.

நினைப்புக்கும் நம் செயல்களுக்குமிடையில் கடந்து போகும் எத்தனையோ மன ஓட்டங்களை நாம் பொருட்படுத்துவதில்லை. பெரும்பாலும் நமது அகச்சிந்தனைகள் நமக்குள்ளாகவே முடங்கிவிடுகின்றன. பொதுவெளிக்கு அந்நியமாகத் தெரியும் நமது எண்ணங்களை நாம் செயல்படுத்துகிறபோது அவை அபத்தங்களாக அறியப்படுகின்றன. பொது வெளியின் அர்த்தங்களுக்கேற்ப நம் நடத்தைகளை ஒழுங்கு செய்வதில் மட்டுமே நாம் கவனம் கொள்வதால் பெரும்பாலும் நாம் நம் எண்ணங்களுக்கு துரோகமிழைப்பவர்களாகவே நடந்து கொள்கிறோம்.

அதிகாரமும் நெருக்கடியும் நிறைந்த ஒரு சமூகத்தில் இவை மனிதனை மிகவும் செயற்கைதன்மை மிக்கவனாகவும் அதிகாரத்தின் அடிவருடிகளாகவுமே மாற்றிவிடுகின்றன. இவற்றிலிருந்து தப்பிக்க விழைபவனே முழுமையான மனிதனாக இருக்கிறான். அறியப்பட்ட விதிகளுக்குப் புறம்பாக அவன் நிகழ்த்தும் ஒவ்வொரு காரியங்களும் இதர மனிதர்களுக்கு அபத்தமாகத் தெரிந்தாலும் அவன் முழு சுதந்திரமுடையவனாகவே தன்னை உணர்கிறான். அந்நியனில் வரும் மெர்சோ இப்படியாகத்தான் நடந்துகொள்கிறான்.

தன் அம்மா இறந்தால் அழாமல் இருக்கும் ஒருவனைப் பார்த்து இந்தச் சமூகம் பெரும் வியப்புடன் பார்க்கிறது. ஆனால் அவனால் அழமுடியவில்லை. அதற்கான காரணமும் அவனிடமில்லை. இந்த நாவலைப் படிக்கும்போது இச்சந்தர்ப்பத்தில் சமூகம் நம்மீது அழுத்தியுள்ள போலியான பாவனைகள் நம்மிடமிருந்து தானாக உதிர்வதையும் மேலும் உயிருள்ளவனாக... எண்ணங்களில் மிகப்பெரிய சுதந்திரம் கொண்டவனாகவும் நம்மை உணர முடியும். காம்யூவின் வெற்றி இதுதான் என்றாலும் இந்த உணர்வையும் தத்துவத்தையும் முழுமையாக அறிந்துகொள்ளாத ஒருவரால் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்குமானால் வெறும் சாரமற்ற சக்கையான ஒரு பதிப்பாகவே வெளியாகியிருக்கும். இன்று நம்மிடம் உள்ள பல மொழிபெயர்ப்புகள் அப்படியாகத்தான் உள்ளன. இதுவரையிலான மொழிபெயர்ப்புகள் அனைத்திலும் ‘அந்நியன்’ சிறந்த மொழிபெயர்ப்பு நூலாகப் பரிணாமம் பெறுவதற்கான காரணங்களும் இதுதான்.

இதுமட்டுமல்லாமல் தமிழ்ச் சூழலில் தீவிரமான அறிவுத்தேடல் கொண்ட ஒருவன் கடைசியாக சென்றடையக் கூடிய இடமாகத்தான் அவரது இதர நூல்களும் அறிவுத்தளத்தில் மிக முக்கிய பங்களிப்பைச் செய்து வருகின்றன. மதன கல்யாணி என்பவருடன் இணைந்து அவர் மொழிபெயர்த்த 81ல் வெளியான அந்த்வாந்த் செந்த் எக்சுபரியின் ‘குட்டி இளவரசன்’ எனும் சிறு நூல் அவரது மிகச்சிறந்தபங்களிப்பு. சற்றுமிகையாக தமிழ் தலையணை நாவல்களைப் பகடிசெய்யவேண்டுமானால் அவற்றை இச்சிறுநூலின் அருகில் வைத்துப் பார்த்தாலே போதுமானது. மனிதனின் அகங்காரங்களை எல்லாம் எள்ளி நகையாடும் இந்நூல் அற்ப விடயங்களின் ரகசியத்தையும் பொருள் தேடும் மனித வாழ்வின் அர்த்தமற்ற தேடல்களையும் நம் கண்முன் நிறுத்தி குட்டி இளவரசனாக நாம் மாறிவிட பெரும் ஏக்கத்தை உண்டாக்கிவிடுகிறது. தஸ்தாயேவெஸ்கியின் வெண்ணிற இரவுகளுக்குபிறகு மிகவும் போற்றி பாதுகாக்கக் கூடிய நூல் இது. பலமுறை நான் குட்டி இளவரசனை வாங்குவதும். நண்பர்கள் என் அலமாரியிலிருந்து திருடிச்செல்வதும், நான் வேறு நண்பர்களிடமிருந்து எடுத்துவருவதும் சில சமயங்களில் தொலைப்பதுமாக எனக்கும் இளவரசனுக்குமான உறவு இப்பவும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இப்போது என் அலமாரியில் இந்தக் கட்டுரைக்காகத் தேடியபோது கூட அந்நூல் காணக்கிடைக்கவில்லை.

மேற்சொன்ன இரண்டு நூல்களையும் விட தமிழ் சூழலுக்குள் மிக அதிகமான பாதிப்பை உண்டாக்கிய வெ. ஸ்ரீராமின் சிறு மொழிபெயர்ப்பு நூல். இன்றைய தமிழ் கவிதைச் சூழல் அடைந்திருக்கும் பெருமாற்றத்திற்கு ழாக் ப்ரெவெரின் சொற்கள் மிக முக்கியப் பங்களிப்பைச் செய்திருக்கின்றன. இதை நான் மட்டும் சொல்லவில்லை. தமிழ் சூழலின் பல முன்னணிக் கவிஞர்களே என்னிடம் பலமுறை இதைக் குறிப்பிட்டுள்ளனர். பின் நவீனத்தின் அழுத்தமான பாதிப்பில் இருந்த 2000க்கு முன்பான தமிழ் கவிதைகள் பெரும்பாலும் இருண்மையையும் அவநம்பிக்கையையும், இருப்பின் மீதான் கேள்விகளையும் மட்டுமே உள்ளடக்கியதாக இருந்தன. ரமேஷ்-பிரேம், மனுஷ்ய புத்திரன், யுவன் சந்திரசேகர், யூமா வாசுகி போன்றோர் மட்டுமே அதிகமாய் எழுதிவந்த காலம் அது. இவர்களுள் மனுஷ்யபுத்திரன் கவிதைகளில் மட்டும் அவ்வப்போது சில வரிகள் ஆங்காங்கே இறுக்கத்தைத் தளர்த்துவதாக அமைந்திருந்தன.

*2000க்கு பிறகு தமிழ்ச் சூழலில் நிகழ்ந்த பொருளாதார மாற்றங்கள் காரணமாக நகர வாழ்க்கை பெரும் பாய்ச்சலை சந்தித்துகொண்டிருந்த காலத்தில் நகரம் புதிய ஆடைகளை அணியத்துவங்கியது. உடன் இலக்கியச் சூழலிலும் நகரவாழ்க்கை சம்மந்தப்பட்ட பல கவிஞர்கள் உருவாகத் துவங்கினர். அப்படிப்பட்டவர்களுக்கு மேலும் சுதந்திரத்தைத் தந்து அவர்களுக்குள் கற்பனையின் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய பெருமை 'சொற்கள்' தொகுப்புக்கு கணிசமாக உண்டு. வானத்திற்குக் கீழ் உள்ள அனைத்தையும் கவிதையாக்கும் அவர்களது திறன் தமிழ் சூழலுக்குள் பெரும் பாய்ச்சலை உண்டாக்கியது.*

*இப்படியாக வெ. ஸ்ரீராமின் படைப்புகள் ஒவ்வொன்றும் காலத்திற்கு தக்கன பல மாறுதல்களை தமிழ்ச் சூழலில் உருவாக்கியுள்ளதையும் பல படைப்புகளுக்கு உந்து சக்தியாக அது இருந்திருப்பதையும் காலத்தின் சாட்சியாளனாக என்னால் துல்லியமாக உணரமுடிகிறது.*

*இத்தனைக்கும் காரணமாக இருப்பது அவர் மூலப் படைப்பின் மீது கொண்டிருக்கும் கற்பு சார்ந்த மதிப்பும், மொழியின் மீதான ஆளுமையும். படைப்புத் தொழிலின் மீதான நேர்மையும் நம்பிக்கையும் மட்டுமே ஆகும்.*

---




**சுந்தர ராமசாமியின் பட்டறையில் உருவான பௌத்த அய்யனார் – 'முள்' நாவல் மூலம் கவனிக்கப்பட்ட முத்துமீனாள் தம்பதி இணைந்து தொடங்கியுள்ள இருமாத இதழ் 'நேர்காணல்'. ஒவ்வொரு இதழிலும் ஒரு ஆளுமையைப் பற்றி முழுமையான புரிதலை உருவாக்கும் முயற்சி. ந. முத்துசாமி, வண்ணநிலவன் வரிசையில் இப்போது நாசர் சிறப்பிதழ். நடிகர் என்ற எல்லையைத்தாண்டி, நாசருக்குள் ஒளிந்திருக்கும் பல முகங்களையும் அடையாளம் காட்டுகிறது. பக்கத்துக்குப் பக்கம் நாசரின் ஓவியங்கள் இடம்பெற்றிருப்பதும் முக்கியமானது. பௌத்த அய்யனாருக்கு நாசர் கொடுத்த நீண்ட நேர்காணல், அவரின் திரையுலக வாழ்க்கையில் பின்புலத்தில் இருக்கும் அறிவார்ந்த உலகத்தை அறிமுகப்படுத்துகிறது. நேர்காணலோடு, ஆய்வாளர் வெங்கடேஷ் சக்கரவர்த்தி, நடிகர் சண்முகராஜா, இயக்குனர் பாலசந்தர், கருணா பிரசாத், யூகிசேது, ஞாநி உள்ளிட்டோரும் நாசருடனான தங்கள் தோழமையைப் பதிவு செய்திருக்கிறார்கள். நேர்காணல், கவனிக்கத் தக்க முயற்சி!.**

**நன்றி : குங்குமம் வார இதழ்.**

---

## பவுத்த அய்யனாரின் நூல்கள்:

**விடுவிப்பு** (கவிதை, கட்டுரை, நேர்காணல்கள்) - 1999

**அலைபுரளும் வாழ்க்கை** (சென்னை பற்றிய கட்டுரைகள்) - 2003

**மேன்சன் கவிதைகள்** (கவிதைகள்) 2005-2007-2009

**சொல்லிலிருந்து மௌனத்துக்கு** (நேர்காணல்கள்) - 2005

Rooms - (மேன்சன் கவிதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பு) - 2009


ஆங்கில மொழிபெயர்ப்பு - **லதா ராமகிருஷ்ணன்.**

**அலையும் நினைவுகள் –** (நேர்காணல்கள்) - 2010

**அன்புள்ள அய்யனார் –** சுந்தர ராமசாமியின் கடிதங்கள் - 2010

© கமலா ராமசாமி

# மௌனத்தையும் மொழிபெயர்க்க முடியும்



**யூகிசேது – திரைப்படக் கலைஞர்.**

*"முழு நீள குழந்தைகள்" படம் என்ற ஒரு விளம்பரம் 1980-களில் வெளிவந்தது. அந்தப்படம் 'புரந்தர தாஸ்' என்ற கன்னடத் திரைப்படம். தமிழில் டப்பிங் மொழி மாற்றம் (அல்லது மொழி மாற்றமா?) செய்யப்பட்டு வெளியாகிப் பெரிய வெற்றி அடைந்தது. இதில் 'குழந்தைகள் முழு நீளமா?' அல்லது 'படம் முழுநீளமா?' என்ற குழப்பம் இருக்கிறது.*

*அதே போல, பாரதிராஜாவின் 'கிழக்கே போகும் ரயில்' என்று நினைக்கிறேன் அதில் இப்படி ஒரு வசன உச்சரிப்பை ஒரு பெண்மணி உதிர்ப்பாள் "ஒரு வயசு பொண்ணை ஊரை சுத்தி அம்மணமா வரச்சொன்ன...?" என்பது போன்ற ஒரு வரி. இது அன்று மிகவும் பிரபலமான உச்சரிப்பாக இருந்தது. ஏன் என்றால் 'ஒரு, வயசுப் பொண்ணு' என்பதை ' ஒரு வயசு பொண்ணு' எனும்போது அர்த்தமே அங்கு அம்மணமாகிவிடுகிறது.*

*"கண்டிப்பாக என்றாவது ஒரு நாள் மதுவிலக்கு அமலாக வாய்ப்பு உள்ளது..." இது அடுத்த குண்டு. தமிழ் நடைக் கையேட்டில் இப்படி ஒன்று "ஆண்டுதோறும் மறைந்த தி.ஜா. விற்கு சிறப்பாக விழா நடத்தப்படுகிறது." (தி.ஜா. ஆண்டுதோறும் தோன்றி மறைகிறாரா என்ன?). இந்த இரு பொருள் படும்படி பேசும் நடை, இந்த* ambiguity *நமக்குப் பழகிவிட்டது. தமிழ் வாக்கியக் கட்டமைப்பிலேயே* (Syntax) *இதற்கு இடமிருக்கிறது. தவறு செய்ய சிறு இடைவெளி இருந்தாலும் நாம்தான் தவறு செய்யத் தயங்குவதில்லையே. இந்த மொழிக்கட்டமைப்பால் நாம் செய்யும் உபாதை, நமது மனக்கட்டமைப்பிலும் வந்தடைந்துவிட்டது இந்த முரண்பாடு, இந்த* Oxymoron.

*இதை எல்லாம் அதாவது மொழி மூலமாக மொழி பற்றி மட்டும் அல்லாமல், மனிதனைப் பற்றியும் சில உண்மைகளைக் கண்டுபிடிக்க சில பல விவாதங்களும் கேள்வி - பதில் தாங்கிய உரையாடல்களும்தான் எனக்கு உதவியன. இதை நான் தவறாமல், 1980-களிலிருந்து கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக ஒரு நபருடன் செய்து வந்திருக்கிறேன். அவர்தான் என் பெருமதிப்பிற்குரிய வெ. ஸ்ரீராம் அவர்கள். 2000 ஆண்டு துவக்கத்தில் மிகவும் பிரபலமாக இருந்த எனது தொலைக்காட்சித் தொடர் "நையாண்டி தர்பார்"-ல் ஸ்ரீராமை என் ஆலோசகராகவும், துணை எழுத்தாளராகவும் சேர்த்துக் கொண்டேன்.*

*நையாண்டி தர்பாரில் ஒவ்வொன்றுக்கும் உதவ ஒரு உப எழுத்தாளர் என்று மூன்று நான்கு திறமைசாலிகளை வைத்திருந்தேன். பேட்டை அரசியலுக்கு ஒருவர், பாடல் மற்றும் மயிலைத்தனமான நகைச்சுவைக்கு ஒருவர், கடி, துணுக்கு ஜோக்குக்கு ஒருவர் என்று மூன்று, நான்கு பேர் குழு ஒன்று கண்ணாடி போல் போட்டு வாங்கி எனது பாணியை, நிகழ்ச்சியின் கட்டமைப்பை, ஒரு சில நன்னூல் சூத்திரங்களை எனக்குள் வைத்துக்கொண்டு, தினம் தினம் புதுப் புது வார்ப்புகளை, அலசல்களை மக்களிடையே வெற்றிகரமாக மூன்று வருடங்கள் படைத்துக் கொண்டு வந்தேன்.*

*அந்த நிகழ்ச்சி நான்கு சுவர்களைத் தாண்டி, பேட்டை சலூன் பேச்சளவில் நின்றுவிடாமல், உலகளாவிய, விஸ்தாரமான விரிப்பாகவும், ஒரு ஆய்வின் ஆழத்தோடும் இருக்கவேண்டும் என்பது என்னுடைய தனிப்பட்ட அவா. அதனால்தான் ஏற்கெனவே உற்ற நண்பராக இருந்த ஸ்ரீராமை போன்ற ஒரு ஜாம்பவானை இப்போது தொழில் ரீதியாகவும் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டேன்.*

*ஸ்ரீராமுக்கு எவ்வளவோ பரிமாணங்கள் இருந்தாலும் தமிழ் மக்களிடையே ஒரு அடையாளம் கொடுத்தது - பிரெஞ்சுலிருந்து தமிழுக்கு நேரடியாக மொழிபெயர்த்த சேவைதான் என்பது நமக்குத் தெரியும். அதில் ஸ்ரீராமின் தனித்தன்மை உண்டு. மொழிபெயர்க்கும்போது, மொழி 'பெயர்ந்து' போகாமல் பார்த்துக் கொள்வார். இரு மொழிகளையும் சொல்கிறேன்.*

'Lost in translation' *என்று சொல்வார்கள். வரலாறே அப்படித்தான் செவிக்கு செவி, கைக்கு கை மாறும்போது சிந்திய அரை உண்மைகள்தான்.* 'History is something that never happened written by somebody who was never there' *என்று என் நையாண்டி பாணியில் சொல்வேன். மறுபுறம்* 'Gain in translation -*ம்*

உண்டு. எனக்குப் பிடித்த சினிமா எழுத்தாளர், நடிகர், இயக்குநர் Wood Allen ஒரு முறை France சென்றபோது, தனக்கு அங்கே கிடைத்த பெரிய வரவேற்பைப் பார்த்து இப்படிச் சொன்னார். "நான் இங்கு இவ்வளவு பிரபலம் என்று பார்க்கும்போது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு வேளை இந்த வசனங்களை French sub - title- ல் மொழி பெயர்த்து எழுதியவர்களின் புத்திசாலித்தனமாக இருக்குமோ என்று எனக்கு சந்தேகம் வருகிறது" என்றார். ஸ்ரீராமின் மொழிபெயர்ப்பு இந்த இரண்டு வகையுமே கிடையாது எனலாம். "உள்ளதை உள்ளபடிதான் எழுத வேண்டும், அலங்காரமோ, ஆடம்பரமோ இருக்கக்கூடாது என்பார்".

ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் பாவனைகளின் அர்த்தம் மாறும். ஜப்பானில் சிறிய புன்முறுவலோடு அவ்வப்போது சிரிப்பது, (அது பொய் சிரிப்பானாலும் கூட) வரவேற்க்கப்படுகிறது. இதையே ஐரோப்பாவில் கிண்டலாக நினைப்பர். அதேபோல் வட்டார வழக்கு என்பதும் முக்கியமாகிறது. இன்று தமிழில் "பிண்ணி பெடல் எடுத்துட்டான்" என்பதை ஆங்கிலத்தில் அப்படியே மொழி பெயர்த்தால் "Bend நிமிர்ந்திடும்" இங்கே அண்ணன், தம்பி, சகோதரன் என்று வார்த்தைகள் உண்டு, அங்கே Brother என்பது மட்டும் தான் - ஆக சிறிய - சகோதரன், பெரிய - சகோதரன் என்றெல்லாம் ஆகிவிடும்.

எந்த விஷயத்தைப் பற்றியும் அவரிடம் பேசலாம். சாதாரணமாக ஸ்ரீராம்மிடம் நான் ஒரு Thesis வைப்பேன், அதற்கு அவர் கூறும் பதில் தானாகவே Anti - thesisஆக அமைந்துவிடுவது உண்டு. அதற்குப் பிறகு அதிலிருந்து ஒரு தெளிவு பிறந்து Synthesis - ஆக மாறிய தருணங்கள் உண்டு முன்பு மன்னனுக்கும் பூஜாரிகளுக்கும் பயத்துடனும் பக்தியுடனும் அடிமைபோல மக்கள் இருந்ததற்குக் காரணம் கடவுளுக்கு மிக அருகாமையில் இருப்பதாக அவர்கள் தங்களைக் காட்டிக் கொண்டதால். இன்று மூலவிக்ரகமாக கடவுளுக்குப் பதில் 'பணம்' என்பது வந்து அமர்ந்து விட்டது. ஒரு கொடுங்கோலாட்சியில் எதிரி (மன்னன்) யார் என்றும் அவன் திட்டமும் வெளிப்படையாகத் தெரியும் ஒரு சவுகரியம் உண்டு, ஆனால், ஜனநாயகம் என்பது அதை மூடிமறைக்கும் கருவியாக அமைந்துவிடும் பேராபத்து இருக்கிறதே என்று நான் சொன்னால், அதற்கு ஸ்ரீராம் உடனே மிலோஸ் வான் ஜிலாஸின் "மூன்றாம் வர்க்கம்" (The Third Class) பற்றி விலாவாரியாகச் சொல்வார். ஒடுக்கப்படுபவர்கள் வர்க்கம் அப்படியே இருக்க கருவியும் (கடவுளுக்குப் பதில் பணம்), ஒடுக்குபவர்களும் (மன்னனுக்கு பதில் மூன்றாம் வர்க்கம்) மட்டும் கைமாறியிருக்கிறது, அவ்வளவுதான் என்பார்.

T.V. யைப் பற்றி பேச்செடுத்தால் பூர்தியூ-வை கோடிட்டுக் காட்டுவார் "Monopoly"- யாக இருந்தால் தயாரிக்கப்படும் எல்லாப்பொருள்களும் ஒரே மாதிரியாகவே இருக்கும் என்பதும், ஆனால் போட்டி என்று இருந்தால் தயாரிப்பில் பலவிதங்களைப் பார்க்கலாம் என்பதும் பிதற்றல். ஏன் என்றால் அநேக சமயம் அந்தப் போட்டியே ஒரே மாதிரியான படைப்புக்குத்தான் இருக்கிறது. என்பது தான் நாம் கண்ட உண்மை.

Religion is the opium of the masses- என்று லெனின் கூறிவிட்டு சென்ற பிறகு இன்று பல நாடுகளில் இப்படி ஊடகங்கள் மூலம் நேரடியாகவே Opium கொடுப்பது போல் ஆகிவிடுகிறது என்பார். இப்படி எல்லாம் யோசிக்கும்போது ஒரு கவலையே வருகிறது. இந்தக் கவலை நாம் மட்டும் தான் தனிமையாக படுகிறோமோ? என்று கேட்டார் - உடனே ஸ்ரீராம் அதற்கும் பதிலை இப்படிச் சொல்லாம், "அதற்குத்தான் 'இசை' என்பதே உருவாயிற்று - தனிமையைக் கொல்ல Music was invented to kill loneliness" என்று.

எனது பூர்வீகம் கும்பகோணம் அருகே, ஊத்துக்காடு. மிக பிரபலமான பண்டைய இசை மேதை, கவி, வெங்கட சுப்பையரின் சொந்த ஊர். பாட்டுக்கு என்ன பஞ்சம் என்று ' அலைபாயுதே' வில் ஆரம்பித்தால், அந்த உரையாடல், ஸ்ரீராமுக்குப் பிடித்த பழைய ஹிந்தி படப்பாடல்கள் தலாத் மகமூத் முதல் அனார்கலி வரை அந்தாக்ஷரி போல் பாடிப்பேசுவோம். கர்நாடக இசையில் அவர் ஒரு நல்ல ரசிகர். சினிமாவைப் பற்றிப் பேசும்போது மட்டும் தான் என் கை ஓங்கும்.

ஸ்ரீராமின் ஆறடி, அவர் தோள் மீது எனது ஆறடி சேர்த்து, ஞானக்கூத்தன் சொன்னது போல, "திருவிழாவில் குழந்தையிடம் 'தூக்கிக்காட்டுறேன், தெரியுதாபார்!'" என்று அவரையும் அறியாமல் அவர் நட்பின் மூலம் எனக்கு எட்டிப்பார்த்துக் கிடைத்த பொக்கிஷங்களைப் பற்றி தமிழ்மக்களுக்கு கிடைத்த இலக்கிய சொத்துக்களின் அருமைகள் பற்றி என்னதான் நான் வார்த்தைகளால் விவரித்தாலும், அதை எல்லாம் ஸ்ரீராமால் கூட மொழிபெயர்க்க முடியாது. அவரைப் போன்ற மேதைகளை இந்த சமுதாயம் இன்னும் பலவிதங்களில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமே என்ற ஆதங்கம் எனக்குள் என்றும் இருந்து வருகிறது.

## காலைச் சிற்றுண்டி

காப்பியை ஊற்றினான்
கோப்பையில்
பாலை ஊற்றினான்
கோப்பைக் காப்பியில்
சர்க்கரையைப் போட்டான்
பால் கலந்த காப்பியில்
தேக்கரண்டியால்
கலக்கினான்
பால் கலந்த காப்பியைக் குடித்தான்
கோப்பையைக் கீழே வைத்தான்
என்னைப் பார்க்காமலேயே
ஒரு சிகரெட்டைப்
பற்றவைத்தான்
புகையை
வளையங்களாக விட்டான்
சாம்பலைத் தட்டினான்
சாம்பல் கிண்ணத்தில்
என்னிடம் பேசாமலேயே
என்னைப் பார்க்காமலேயே
எழுந்தான்
தொப்பியை அணிந்துகொண்டான்
மழை பெய்துகொண்டிருந்ததால்
மழைக்கோட்டை
அணிந்துகொண்டான்
பிறகு புறப்பட்டுவிட்டான்
மழையிலேயே
ஒரு பேச்சுமின்றி
என்னைப் பார்க்காமலேயே
நானோ
என் தலையைக் கைகளில் ஏந்தி
அழுதேன்.

## தகவல்

யாரோ திறந்துபோட்டுவிட்ட கதவு
யாரோ மீண்டும் சாத்திவிட்ட கதவு
யாரோ அமர்ந்திருந்த நாற்காலி
யாரோ தடவிக்கொடுத்த பூனை
யாரோ கடித்துப்போட்ட பழம்
யாரோ படித்துப்போட்ட கடிதம்
யாரோ தட்டிவிட்ட நாற்காலி
யாரோ திறந்துபோட்டுவிட்ட கதவு
யாரோ இன்னும் ஓடிக்கொண்டிருக்கும் பாதை
யாரோ கடந்துசென்றுகொண்டிருக்கும் காடு
யாரோ குதித்துவிட்டிருந்த நதி
யாரோ இறந்துவிட்ட மருத்துவ விடுதி.

## இரவில் பாரிஸ்

இரவில் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று
தீக்குச்சிகள்
முதலாவது உன் முகத்தை முழுமையாகப்
பார்க்க
இரண்டாவது உன் கண்களைப் பார்க்க
கடைசியாக உன் இதழ்களைப் பார்க்க
பின் சுற்றிலும் இருள் இதையெல்லாம்
நினைத்துப்பார்க்க
என் கரங்களில் உன்னை இறுக்கியவாறு.

## காவியம்

முடிவின்றிச் சென்றுகொண்டிருக்கிறது
அரசரின் கட்டைவண்டி
ஒரு கையால் நடக்கும் ஊனமுற்றவன்
ஓட்டிச் செல்கிறான் அதை
வெண் உறை அணிந்திருக்கிறது ஒரு கை
நுகத்தடியைப் பற்றியிருக்கிறது மறு கை
கால்களிரண்டை அவன் இழந்தது வரலாறு
என்றோ நிகழ்ந்துவிட்டது அது
கால்கள் அங்கேயே
உலவிக்கொண்டிருக்கின்றன
வரலாற்றில்தான்
ஒவ்வொரு காலும் அதனதன் போக்கில்
நேருக்குநேர் அவை சந்திக்கும்போது
ஒன்றையொன்று உதைத்துக்கொள்கின்றன
போர் என்றால் அப்படித்தான்
வேறென்ன செய்யச் சொல்கிறீர்கள்.

## பறவையின் உருவச்சித்திரம்

முதலில் ஒரு கூண்டின் சித்திரம் தீட்டு
திறந்த கதவுடன்
பின்னர் தீட்ட வேண்டியது
கவர்ச்சியாக ஏதாவது
எளிமையாக ஏதாவது
அழகாக ஏதாவது
பயனுள்ள ஏதாவது
பறவைக்காகத்தான்
பிறகு சித்திரம் வரைந்த சீலைத் துணிச்சட்டத்தை
ஒரு மரத்தின் மேல் சாய்த்து வை
ஒரு பூங்காவிலோ
ஒரு தோப்பிலோ
அல்லது ஒரு காட்டிலோ
மரத்தின் பின்னால் ஒளிந்துகொள்
ஒன்றும் பேசாமல்
அசையாமல்...
சிலவேளை பறவை சீக்கிரம் வந்துவிடலாம்
ஆனால் அந்த முடிவுக்கு வருவதற்குப்
பல வருடங்களை எடுத்துக்கொள்ளவும்
செய்யலாம்
நம்பிக்கை இழக்கக் கூடாது பொறுத்திரு
தேவையானால் வருடக் கணக்கில்
பொறுத்திரு
பறவையின் வருகையின் விரைவு அல்லது
தாமதத்திற்கும்
சித்திரத்தின் வெற்றிக்கும்
எவ்விதத் தொடர்புமில்லை
பறவை வரும்போது
அது வருவதாக இருந்தால்
மிக ஆழ்ந்த மௌனம் காட்டு
கூண்டில் பறவை நுழையும்வரை காத்திரு
நுழைந்தவுடன்
தூரிகையால் கதவை மென்மையாகச் சாத்திக்
கூண்டுக் கம்பிகள் அனைத்தையும்
ஒன்றன்பின் ஒன்றாக அழித்துவிடு
பறவையின் இறகுகள் எதன்மீதும்
படாமல் இருக்கக் கவனம்கொள்
பின்னர் மரத்தைச் சித்திரமாகத் தீட்டு
அதன் கிளைகளிலியே மிக அழகான ஒன்றைத்
தேர்ந்தெடு
பறவைக்காகத்தான்
பிறகு பசும் தழைக் கொத்துகளையும்
காற்றின் புத்துணர்ச்சியையும்
சூரிய ஒளித்தூசியையும்
கோடை வெப்பத்தில் புற்களிடையே
பூச்சிகள் எழுப்பும் ஓசையையும்
வண்ணமாகத் தீட்டு
பிறகு பறவை பாட விழையும்வரை
காத்திரு
பறவை பாடவில்லையென்றால்
அது மோசமான அறிகுறி
சித்திரம் மோசம் எனும் அறிகுறி
ஆனால் அது பாடினால் நல்ல அறிகுறி
உன்னை நீ அறிவித்துக்கொள்ளலாம்
என்னும் அறிகுறி
பிறகு பறவையின் இறகுகளில் ஒன்றை
மிக மென்மையாகப் பிடுங்கி
சித்திரத்தின் ஒரு மூலையில்
எழுது உன் பெயரை.


## ஞாயிறு

கோப்லேன் நிழற்சாலையின்
மரவரிசைகளுக்கு இடையே
பளிங்குச் சிலை ஒன்று என்னைக்
கைப்பிடித்து இட்டுச்செல்கிறது
இன்று ஞாயிற்றுக்கிழமை
திரையரங்குகள் நிரம்பியுள்ளன
மரக்கிளைகளிலிருந்து பறவைகள்
மனிதர்களைப் பார்க்கின்றன
சிலை என்னை முத்தமிட
எங்களை யாரும் பார்க்கவில்லை
விரலால் எங்களைச் சுட்டிக்காட்டும்
பார்வையற்ற குழந்தையைத் தவிர.

(சொற்கள்: கவிதைத் தொகுப்பிலிருந்து)

# ழாக் ப்ரெவெர்

இருபதாம் நூற்றாண்டின் குழந்தை என்று வர்ணிக்கப்பட்ட ப்ரெவெரின் நூற்றாண்டு 2000ஆவது ஆண்டு கொண்டாடப்பட்டது. இவர் 1900ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ஆம் தேதி பாரிஸ் நகரத்தில் பிறந்தார். இவரது தந்தை ஆந்த்ரே ப்ரெவெர் (Andre Prevert), பிரான்சின் வடமேற்கில் அட்லாண்டிக் கடலோரத்தின் பிரித்தானியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்.




இவருக்கு ஆறு வயது இருக்கும்போது, ஒரு காப்பீட்டு நிறுவனத்தின் முகவராக இருந்த இவரது தந்தை வேலையை இழக்க நேரிட்டு, பாரிஸ் நகரை விட்டு வெளியேறி, ஒரு வருடத்திற்குப் பிறகு மீண்டும் பாரிசுக்குக் குடும்பத்துடன் திரும்பினார். அதனால், இவரது குழந்தைப் பருவம் ஏழ்மையில் (“ஆனால், மகிழ்ச்சியாக” என்கிறார் அவர்) கழிந்தது. சிறு வயதில் விடுமுறை நாட்களில் பாரிஸ் வீதிகளில் தன் தந்தையுடன் சுற்றிவந்த நாட்களில், மக்களின் வாழ்க்கையின் ஆனந்தத்தையும், சோகத்தையும் அவற்றின் இயல்பான நிலையில் பார்த்தது பிற்காலத்தில் இவருடைய கவித்துவப் பார்வையில் வெளித்தெரிந்தது.

கவிஞராக உலகுக்கு அறிமுகம் ஆவதற்கு முன் ப்ரெவெர் பிரபல திரைக்கதை வசனகர்த்தாவாகத் தான் அறியப்பட்டார். அதுவும் இளம் வயதில் ஏற்பட்ட ஆர்வத்தினால்தான். 1922இல் இவர் பாரிசுக்குத் திரும்பிவந்தவுடன் இவருடைய வாழ்வில் முக்கியமான ஒரு காலகட்டம் தொடங்கியது. அப்போதுதான் இவர் தன் ஓவியர் நண்பர் தாங்வியுடனும் தன் சகோதரர் பியருடனும் சேர்ந்து நிறையத் திரைப்படங்களைப் பார்த்தார். மௌனப் படங்களின் காலம் அது. அப்போது அவர் இருந்த வாடகை அறையில், சர்ரியலிஸ இயக்கத்தைச் சேர்ந்த பலர் கூடிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டனர். இந்த இயக்கத்தின் பாதிப்பு அவருடைய கவிதைகளில் தென்பட்டாலும், அவரை இந்த இயக்கத்துடன் முழுமையாக இணைத்துப்பார்க்க முடியாது. 1928இல் அவர் இந்தக் குழுவிலிருந்து விலகினார். மேலும், சர்ரியலிஸப் பாணி அல்லது உத்தி ஆங்காங்கே தென்பட்டாலும், அவற்றையும் மீறி இவருடைய படிமங்களின் தொகுப்பும் கற்பனையின் வெளிப்பாடும் இயல்பாகவே இருந்தன.

1935 முதல், இவரது படைப்பாற்றல் நான்கு துறைகளில் செயல்படத் தொடங்கியது: திரைப்படம், கூட்டுறவு நாடகத் தயாரிப்பு (collective theatre), எள்ளல் கவிதை மற்றும் பாடல். ஒரே சமயத்தில் இந்த நான்கு துறைகளிலும் அவர் மாறிமாறிச் செயல்பட்டதால், ஒன்றின் தாக்கம் இன்னொன்றில் தென்பட்டு அவரது படைப்புகளுக்கு ஒருவிதத் தனித்தன்மையை அளித்தது.

**Edited and published by P. Ayyanaar (Boutha Ayyanaar) for Meenal Publishing House, 3/363, Pajanai Koil Street, Kelampakkam, Chennai - 603 103 and Printed by :**